
# குற்றால வளம்



ராய. சொ

மித்ரா

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## **Universal** (CC0 1.0) **Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குற்றால வளம்

ஆசிரியர்
ராய. சொ.

பாரத சக்தி நிலையம்
புதுவை.

[பதிப்புரிமை பெற்றது] [விலை ரூ. 2—0—0

முதற் பதிப்பு. 1500 மார்ச் 1947

Printed at the Liberty Press, Pondicherry.

# முகவுரை

இந்நூல், குற்றால வளம் என்ற கட்டுரையை முதலாகக்கொண்டு பதினொன்கு கட்டுரைகள் பெற்ற ஒரு தொகுப்பு நூல். முதற் கட்டுரையின் பெயரை நூலுக்குக் கொடுத்தல் ஓர் மரபு. இக்கட்டுரைகள் இவ்வாண்டில் எழுதப்பட்டனவல்ல. இருபதாண்டுகட்கு முன் எழுதப்பெற்றவை. எனவே காலத்தால் முற்பட்டவையைப் பாராட்டுவதாயின் அவ்வகையில் இக்கட்டுரைகளைப் பாராட்டுக! அல்லாமல் தகுதிகொண்டு நோக்குவதாயினும் படித்துப் பார்த்து முடிவு கட்டுக!

பெரும்பாலாக நீதிபற்றிக் கூறும் இக்கட்டுரைகள் முன்னர் "ஊழியன்" பத்திரிகையில் வெளிவந்தவை. அக்காலத்துக்கும் இக்கட்டுரைகள் பொருந்துவனவே. ஆகலின் எனது அரிய நண்பர் பாலுவின் விருப்பத்திற்கேற்ப கட்டுரைகள் நூல் வடிவமாக வெளிவருகின்றன. கட்டுரைகளின் பெருமை சிறுமைகளை நான் சொல்லக் கூடாதல்லவா? அன்பர்கள் தீர்மானிக்க!

அம்ராவதி புதூர்,
26—3—47

ராய. சொ.

# பதிப்புரை.

திரு. ராய. சொ. செந்தமிழ்ச் செல்வர்; காந்தீயத்தில் தோய்ந்த வாழ்வுடையார். இப் புலவர் இயற்றிய குற்றாலவளம் தமிழருக்கு அரிய விருந்தாகும். இக் கட்டுரை நூலின் நயங்களைக் கவி, யோகி சுத்தானந்த பாரதியார் அளித்த முன்னுரையிற் கண்டு கொள்ளலாம். தமிழுக்கு நல்லணியாகும் என்றே இந்நூலை வெளியிடுகிறோம்.

தமிழர் எமது முயற்சியைப் போற்றி, ஊக்கி மேன்மேலும் பாரத சக்தி நிலையம் தனது அருட்பணியில் முன்னேறச் செய்க. திருவருள் எம்மைத் தொண்டிற்குத் தொண்டு நடத்துக.

**பாரத சக்தி நிலையத்தார்,**

புதுச்சேரி.

# முன்னுரை.

நல்ல தமிழுக்கு நவ சக்தியும், ஊழியனும் என்பர். புலவர் மணிகளான திரு. வி. க, ராய. சொக்கலிங்கனுர் ஆகிய இருவரும் தமிழருக்குச் செந்தமிழால் தொண்டு செய்த செம் மொழிச் செல்வர். ராய. சொ வின் உள்ளம் திருக்குறளிலும், திருவாசகத்திலும் ஊறிப் பண்பட்ட தமிழ் உள்ளம். தமிழுணர்ச்சியும், நாட்டுணர்ச்சியும் அந்த உள்ளத் துடிப்புகளாகும். இரண்டையும் "குற்ருல வளம்" என்னும் இக் கட்டுரைத் தொகுதியிற் காணலாம்.

இந்நூல், சம்பந்தப் பெருமான் பாடிய பெருந்தண் சாரல் வளஞ்செய்யும் குற்ருலக் காட்சியை அழகிய சொல்லோவியமாக நம் முன் காட்டுகிறது. அதைத் தொடர்ந்து சிந்தனை அருவி உலகவாழ்வின் பல்வேறு துறைகளை வளஞ்செய்து செல்கிறது. இந்நூலை வாழ்க்கை வளம் என்றே சொல்லலாம். தெய்வத்தன்மை, உலகியல்பு, நல்லன நாடல், கல்வியும் அறிவும், நிலையில்லா வாழ்வு, அடக்கம், அழுக்காருமை, நல்லொழுக்கம், அஞ்சாமை, வகுப்பு, ஒருமையுணர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, சாதி மாயத்தின் தீமை, மடமைச் செருக்கு முதலிய பல அரிய பொருள்களை இந்நூல் விளக்குகிறது. மலையருவியில் தொடங்கிய கட்டுரை மலைநாட்டில் முடிகிறது. இந்நூல் திருக்குறளை அளவுகோலாகக் கொண்டு, உலக

வாழ்வை அளக்கிறது. காந்தியடிகளை நல் வாழ்விற்கு இலக்காகக் காட்டுகிறது. இந் நூலின் உள்ளம் வள்ளுவர்; உயிர் காந்தீயம் என்னலாம்.

இஃது அறிஞர் எழுதிய அறிவுரைத் தொகுப்பு. படிக்கப் படிக்கப் பண்புள்ள பயன் பெருகும் நன்னூல்.

இந்நூலின் அருமையறிந்தே பாரத சக்தி நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்; தமிழர் இக் கட்டுரை அருவியை அள்ளிப் பருகுக!

எந்தாய் வாழ்க!

புதுச்சேரி,
விய பங்குனி } சுத்தானந்த பாரதி.

# உள் உறை


| தொடர் எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| க. | குற்றால வளம் | க |
| உ. | தெய்வத்தன்மை | கூ |
| ங. | உலக இயல்பு | கஅ |
| ச. | நல்வினை நாடல் | உகூ |
| ரு. | கல்வியும் அறிவும் | ஙச |
| சா. | நிலையிலா வாழ்வு | சக |
| எ. | அடக்கம் | சகூ |
| அ. | அழுக்காருமை | ருசா |
| கூ. | அஞ்சாமை | சாச |
| க0. | ஒழுக்கம் | எஉ |
| கக. | வகுப்பு | அ0 |
| கஉ. | தீண்டத்தகாதார் யார் ? | கூஅ |
| கங. | மடமை | க0சா |
| கச. | மலைநாடு | ககங |

# குற்றால வளம்

குற்றாலம் என்பது மங்கலப் பாண்டி வள நாட்டின்கண் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஓர் இயற்கை நிறை சிற்றூர். ஊர் சிறிதே யெனினும் மக்கட்கு அது தரும் நல்லின்பத் தைப் பெரும் பேரூரும் தாராது. அவ்வூருக்கு அரணாக யாண்டும் மலிந்து கிடப்பது மலையேயா கும். அம்மலை நமது நாட்டில் சில்லிடங்களில் இருக்கும் வறண்டமலை போன்றதன்று. இயற்கை வளங்கள் எல்லாவற்றையும் அம் மலை தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டிருக் கிறது. மேற்குப் பெருமலைத் தொடரின் பகுதி யைச் சேர்ந்தது அம்மலை. குற்றாலத்தை வளமு டைப்பதியாக ஆக்கியது அம்மலையே யன்றிப் பிறிதென்? நீண்ட பல தூரங்களினின்றும் தங் கள் காரியங்களை யெல்லாம் விடுத்துப் பலப்பல மக்கள் திங்கட்கணக்காக ஆண்டுவந்துறைகின் றார் என்பதொன்றே அப் பெருமலையின் வளத்தை வழுத்தாவோ?

வளம் வளம் என வழுத்துதல் கண்டு, அது பொருள் தெரிந்துகொள்ள முடியாத சொல் லென எவரும் மயங்க வேண்டுவதின்று. வளம் என்பதற்கு வருவாய், அழகு, செழுமை முதலிய

பல பொருள்களுண்டு. குற்றாலம், இவ்வளத்தை இம் மூன்று பொருள்களினும் எடுத்தாள ஏற்ற தாக அமைந்துளது. "குற்றாலத்தில் வருவாய் ஏது? ஆண்டுச் செல்வோர்க் கெல்லாம் செலவு தானே? எனவே அப்பொருள் பொருந்தாது" என்று சிலர் எண்ணலாம். வருவாய் என்பது செல்வப்பொருள் ஒன்றைமட்டுமோ குறிக் கொள்ளும்? கேவலம் அவ் ஒன்றையே அது குறித்தல் சிறப்புடைத்தன்று. குற்றாலம் போதருவார் எய்தும் வருவாய் கொஞ்சமோ? உலகில் உயிர்கள் நலம் பெற்று வாழ்தற்கு இன்றியமையாப் பொருள்களாகிய நீரையும் காற்றையும் வேண்டும் அளவு குற்றாலம் கொடுக்கின்றது. இவ்வருவாயைவிட வேறு என்னே வேண்டும்? எனவே இப்பொருள் பொருந்துவதே.

அழகு குற்றாலத்தில் உண்டு என்று கூற வும் வேண்டுமோ? குற்றாலத்தில் காணப்படும் யாவும் அழகுதானே. அழகற்ற ஒன்றை அந் நன் மலையில் காணமுடியுமோ? எல்லாம் அழகு! எல்லாம் அழகு! என்னே குற்றால மலையின் இயற்கை அழகு! மலைமேல் ஏறிவிட்டால் கட் படுவன யாவும் அழகன்றி வேறென்! அவ் வியற்கை அழகே அழகு! நகரங்களில் எத்துணைக் கோடி பணங்களைச் செலவிட்டுச் செய்யப்படும் செயற்கை அழகும் அவ் இயற்கை அழகிற்கு ஈடாகுமா? மனிதர்களால் ஆக்கமுடியாத அழகுகள் பல அம் மலையில் திகழ்கின்றன.

இயல்பாகவே அமைந்து கிடக்கும் அம்மலைக் கற்களை முதலில் நோக்கலாம். அம்மம்ம! என்ன அழகிய கற்கள்! எத்துணைப்பலமாதிரி! எவ்வளவு பெரிய கற்கள்! எவ்வளவு சிறிய கற்கள்! உலகத்தில் இதற்கு மேல் பெரிய கற்களில்லை யென்றுகூட நிச்சயிக்கத் தக்க மிகப் பெரிய கல்தொகுதியும் காணப்படுகின்றன. இதற்குச் சிறிய கற்களில்லையென்று இயம்பத் தக்க நுண்ணியகற்களும் கிடந்தழகு செய்கின்றன. இவைகளைக் காண்டொறும் "இவற்றை யாரே ஆக்கினர்! என்னே இயற்கையின் அற்புதம்" என்ற நினைவு தோன்றுதொழியுமோ? தச்சன் உளியினற் செதுக்கி அரும்பாடுபட்டு ஒழுங்குப்படுத்திலைன்ன அழகிய பலப்பல வடிவான கற்குப்பைகள் நிரல் நிரலாக மலையின் எல்லாப்பகுதிகளினும் கிடந்தணி தருகின்றன. உருண்டை வடிவமாகவும் சதுர வடிவமாகவும் நீண்ட வடிவமாகவும் முக்கோண வடிவமாகவும் பிற எல்லா வடிவமாகவும் சிறிதாகவும் பெரிதாகவும் உடைக்கப்பட்டதாக இல்லாமல் தனித்தனியே கிடந்து கண்ணைக் கவர்கின்றன. சில கற்கள் வைரத்தைப் போன்று ஒளிவிடுகின்றன. ஈண்டு ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நமது புராண உலகத்தார் சில தல இலிங்கங்கள் உளியினற் செய்யப்படாதன என்று பெருமை கூறுகின்றனரல்லவா? அவை இன்னமலைகளில் இயல்பாகக் கிடந்து கொணரப்பட்டனவாகவே இருத்தல்

வேண்டும். யாண்டுக் கண்ணைச் செலுத்தினு லும் பச்சைப்பசுமரத்தின் அழகு ஒன்றே கண் களை நிறைத்து நிற்கும். அருவிவீழ் அழகு அறையுந்தகையதோ? இது நிற்க,

செழுமை என்ற பொருளே ஈண்டு வளத் திற்கு முற்றும் பொருந்தும். குற்றாலமாமலை யில் எல்லாவற்றையும் விட மிகுந்து மேலோங்கி நிற்பது செழுமையே யாகும். மலையில் நின்று நோக்கினுல் கண் செல்லும் தூரம் வரைப் பச்சை நிறமே தென்படும்; நீல நிறக் குடுமிக் குன்றுகள் யாண்டும் வானத்தை அளாவி நிற் கும். அம்மலைமீது மஞ்சு தவழ் இயற்கைப் பெரும் பேரழகை எவ்வாறு அலங்கரிப்பது! அம்மலையை இத்துணை வளம் படுத்தியது மஞ் சல்லவா? செழுமை மல்கித் துதைந்து கிடப்ப தற்குக் காரணமாக இருப்பது அம்மேகமே.

ஏன்? சுருங்கக்கூறுமிடத்து, குற்றாலத்தை இத்துணை வளமுடை நகராக்கி மக்களை அறை கூவி அழைத்து இன்பமீயத் துணைக்காரண மாகின்றது கொண்டலே. அது யாண்டும் உலா வுகின்றது. அது, தனக்கு என்றும் இருக்க ஏற்ற இருப்பிடமாகக் கொண்டிருப்பது குற் றாலமலை போன்ற பெருங்குன்றுகளே. மழை சிறிதும் வருத்தமின்றித் தவழ்வதற்கு ஏற்றபடியாக உயர்ந்து நிமிர்ந்து வானந்தட வும் சிகரங்கள் பலவற்றைக் கொண்டிருக்கும் குற்றாலம் மலைபோன்ற மலைகளை, முகில், விளை

யாடுமிடமாக ஏற்றிருப்பதில் வியப்பொன்று மில்லை. அதனாலேயே வானம் முட்டும் பெரு மலைகளில் செழுமை மண்டிக் கிடக்கின்றது. அத்தகைய செழுமை பெருகிக்கிடக்கும் இடங் களில் குற்றாலமலைப்பதியும் ஒன்றாம்.

சீதளம் மிகுந்த இடங்களிலேயே நல்மரங் கள் செழித்துக் கொழுத்து ஓங்கி நிற்கும். குற் றால மலையில் வளமலி நன்மரங்களும் செடி கொடிகளும் மிகப்பல. ஜாதிக்காய். கிராம்பு, ஏலம், ஆரஞ்சு, வங்கிஸ்தான், பம்பிளிமாஸ், வாழை, பலா, மா, கொய்யா, தென்னை, கமுகு, சந்தனம், குங்கிலியம், செண்பகம், ரோஸ், முல்லை முதலிய மரங்கள், செடிகள், கொடிகள் குற்றால மா மலையைப் பெரிதும் வளம்படுத்தா நிற்கின்றன. பழங்கள் காய்கள் இவற்றின் பருமன் அம் மலைவளமாகிய செழுமையைச் செவ்விதிற் காட்டுகின்றன. அம் மலையிருக்கும் உயிர்ப்பிராணிகளும் மலைவளங் காட்டாமல் இல்லை. எல்லாம் செழுமையாகவே பருத்துக் கொழுத்திருக்கின்றன. அம்மலைப் பதியாகிய குற்றாலத்தில் பருவகாலந் துய்த்து வருவார் பல ரும் உடல் நலம் பெற்று அம் மலைவளங் காட்டு வது கண் கூடாமானால் பிறிதைப்பற்றிப் பேசு வானேன்?

குற்றால மாமலை, மழை தவழ இடங்கொ டுத்து, அதன் பயனை நுகர்ந்து, தான் வள மாகி, மரங்களையும் செடிகளையும் உயிர்களையும்

நன்கு செழிக்கச்செய்து, ஆண்டு வரும் மக்கட்கு நல்ல காற்றையும் அருமை மிக்க நீரையும் உணவுப் பொருள்களையும் உதவிக் கண்ணுக்கும் உடலுக்கும் உயிருக்கும் நல் இன்பம் கொடுத்து ஆட்கொள்ளும் பேற்றை இயற்கையிற் பெற்றுளது. அதிலும் பற்பல இடங்களிலும் காற்றும் நீரும் கடுகளவும் இன்றி வறண்ட கோடை காலத்தில் இம்மலை செய்யும் இப் பேருதவி சிறிதோ!

குற்றாலத்தை விட இன்னும் குளிர் மிகுத்த மலை பலவுண்டு. ஆனால் குற்றாலத்தைப் போல் மக்கள் நீராடுவதற்கென்றே அமைந்த சீரான அழகுடைய அருவிவீழ் மலைப்பதி யாண்டும் இருக்குமா என்பது ஐயமே. குற்றாலத்தில்பலபல பகுதியாகப்பிரிந்து அருவி வீழ்ந்து அப் பகுதியையும் அணித்தாகவுள்ள இடங்களையும் பெரிதும் வளம் படுத்தி நிற்கின்றது. மலை உச்சியிலிருந்து அவ் அருவி தோன்றிவருகிறது. உச்சி மலையில் மேகத்தால் பெய்யப்பட்ட நீரே மலையில் ஆறாக ஓடி வந்து கீழ்த்தரைவரை வந்து அருவியாக வீழ்ந்து நதியாக ஓடுகின்றது. இவ் வருவித் தொடக்கம் யாண்டு என்பதை பார்க்கக் கூடவில்லையெனினும் மலைமீது சில தூரம் சென்று காணமுடிகிறது. மலை, ஏறியும் இறங்கியும் மாறி மாறி இருப்பதால் மலைமீது பற்பல இடங்களில் அருவி வீழ்கின்றது. அதிற் சில இடங்களில் மிக அதிகமாகக் கொட்டுகின்றது. அவ்விடங்களில் சில பெயர்களும்

அவ்வருவிகட்குப் பேசப்படுகின்றன. இப்பொழுது மக்கள் கண்ணுக் கெட்டுவதில் எல்லாவற்றிற்கும் உயரமாக விழும் அருவியைத் தேனருவியென அழைக்கின்றனர். அதற்குக் காரணம் உண்டு. இன்றும் ஆண்டுத் தேன் கூடுகள் நிறைய இருக்கின்றன. அதற்குச் சிறிது கீழாக ஓரருவி வீழ்கின்றது. அது இப்பொழுது செண்பகதேவி அருவி எனச் சொல்லப்படுகிறது. ஆண்டுச் செண்பகதேவி என்ற ஒரு அம்பிகையும் காணப்படுகின்றது. இவ்விடத்தைச் செண்பக அடவி என முன்னோர் செப்பியதாகத் தெரிகிறது. செண்பக மரங்கள் அன்று ஆண்டு மல்கியிருந்திருக்கும் போலும்! எல்லாவற்றிற்கும் கீழே தரையில் வீழ்வதை வட வருவி என்று வழுத்துகிறார். அது திக்கு நோக்கிப் போலும்! அன்றி அது பெரிய அருவியென்றும் பேசப்படுகிறது. அது அளவு நோக்கி. இன்னும் சிற்றருவி என்று ஒன்று வீழ்கின்றது. அது பெரியதை நோக்கி. ஐந்தருவி என்று ஓரிடத்திருக்கின்றது. அது ஒரே இடத்தில் ஐந்தாகப் பிரிந்து வீழ்வதாகக் கொண்டு. குற்றாலத்தில் அருவிக்காட்சி பெரிதும் அருமையானது. சிறு சாரல் வீழ்ச்சி உவக்கத்தக்கது. குற்றால வளம், அறிஞர் அறிவை—புலவர் உள்ளத்தைப் பெரிதும் ஈர்ப்பது. குற்றால வளம்பற்றி இயற்கைப் புலவர் பெருமான் திருஞான சம்பந்தர் செப்பிய சில இயற்கை அழகுப் பாட்டுகளின் வரிகளை இங்கு அநுபவிப்போம்.

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும் பீனுங்குற்றாலம்
பக்கம் வாழைப் பாய்கனி யோடு பலவின்தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்குங் குற்றாலம்
மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்
மைம்மா நீலக் கண்ணியர் சாரல் மணிவாரிக்
கொய்மா ஏனல் உண்கிளி ஓப்புங் குற்றாலம்
நீலநெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
கோல மஞ்ஞை பேடையோ டாடுங் குற்றாலம்
போதும் பொன்னும் உந்தியருவி புடைசூழக்
கூதன் மாரி நுண்டுளி தூங்குங் குற்றாலம்
அரவின் வாயின் முள்ளெயி றேய்ப்ப அரும்பீன்று
குரவம் பாவை முருகமர் சோலைக் குற்றாலம்
பெருந்தண் சாரல் வாழ்சிறை வண்டு பெடைபுல்கிக்
குருந்தம் ஏறிச் செவ்வழி பாடுங் குற்றாலம்"

# தெய்வத்தன்மை

தெய்வத்தன்மையாவது யாது என்பதை ஆராயலாம். மாக்கள் தன்மை, மக்கள் தன்மை, தெய்வத்தன்மை யாதி தன்மைகள் பல வாகும். அவற்றுள் தெய்வத் தன்மையை ஈண்டு நோக்கலாகும். தெய்வத் தன்மையைப் பார்க்கும்முன் தெய்வம் என்ருல் என்ன எனச் சிறிது சிந்தித்தல் அவசியம். தெய்வம்—கடவுள்—இறை என்பவற்றை மக்கள் ஒரே பொருளில் வழங்குகின்றனர். தெய்வத்தைப் பற்பலரும் பற்பல வாறு கொள்கின்றனர். தெய்வமென ஒரு பொருள், உருவத்தோடு மக்களைப்போல் இருப்பதாக எண்ணுவோர் தொகையே உலகில் மிகுதியாக இருக்கின்றது. ஒவ்வொருவர் ஒவ்வொரு உருவத்தைத் தெய்வமெனக் கொள்கின்ருர். உண்மையில் தெய்வம் பலவன்று. தெய்வம் ஒன்றுதான். அது, ஒரு உருவுடையதன்று. மேலொரு பொருளுமில்லா ஒருபெரும் சக்தியே தெய்வம். அத் தெய்வம் யாண்டும் நிறைந்துளது; அது எல்லாமானது.

தெய்வத்தன்மையாவது யாது? இதற்குச் சுருக்கமாக விடைகூறின் உயரிய செயல் என்று உரைக்கலாம். எதெது உயரியசெயலோ அவ்வனைத்தும் தெய்வத்தன்மை பொருந்திய செயல் என்று தடையின்றிச் சாற்றலாம். ஒருவனைத் தெய்வத் தன்மையுடையான் என்ருல்

அவன் உயரிய செயல் உடையான் என்பதே பொருள். அன்றித் தெய்வத் தன்மைக்குப் பிறவியும் பிறவும் காரணமன்று. எல்லாவற்றிற்கும் செயலே காரணம். "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்."

மக்கள் பலர் இவ் உண்மை ஓராது மயக்கங் கொள்கின்றனர். தெய்வத்தன்மை யென்பது, யாண்டோ வானத்திலிருந்து கொணரத் தக்க ஒருபொருளென்று கருதுகின்றனர். அது, தங்கட்கு எந்நாளும் கிட்டாதென எண்ணுகின்றனர். தெய்வத்தன்மையின் உண்மையை நன்கு ஆராயும் அறிவுபெறுர், அதை ஒருநாளும் அடையப்போவதில்லை யென்பது உறுதிதான். அவ்வுண்மையை உணர்தல் வேண்டும். தெய்வத்தன்மை யென்பதை எல்லோர்க்கும்பெற உரிமை உண்டு. முயன்றால் அது நிச்சயமாகக் கிடைக்கும். பிறக்கும் பொழுதே தெய்வத்தன்மையோடு கூடப்பிறந்தாலன்றி அதுகிட்டாதென்பது பிழை. செயல், என்று உயரியதாகிறதோ அன்று அச்செயல் வல்லார் தெய்வத்தன்மை பெற்றவராகிறார்.

தெய்வத்தன்மையின் மெய்ப் பொருள் அறியாமையாலேயே, மக்கள் அத்தன்மைக்கும் தங்கட்கும் தொடர்பு இல்லையென் மயங்கி இடர்ப்பட்டுழல்கின்றார். அதனாலேயே தெய்வத்தன்மை பெற்றவராக முடியாமல் பலர்

மாண்டுபடுகின்றார். இந்நாள் நம் நாட்டில் கற்றவகுப்பார் என்று கழறப் பெறுபவர்கூட, தெய்வத்தன்மை இன்னதெனஅறியாது தியங்கியழிகின்றார். ஈண்டுக் கற்றவர் என்பதற்குப் பொருள் அறிவாளர் என்றுகொள்ள முடியவில்லை. நம் நாட்டுக் கல்விக்கும் மெய்யறிவிற்கும் தொடர்பில்லை. "கல்வியும் அறிவும்" என்ற கட்டுரையில் அதைக் காணலாம்.

தெய்வத்தன்மை யென்பது பிறவியிலேயே அமையும் ஒன்று என நம்மவருள் கற்றாரும் மற்றாரும் ஆகிய பலர் கருதுகின்றார். அது, இக்காலத்துப் பிறந்தாருள் யாருக்கும் இல்லையென்றும் அவர் நினைக்கின்றார். பழைய நாள் பிறந்தாருள் அத்தன்மை பெற்றிருந்தார் பலர் உளர் என்றும் அவருக்கு ஈடாவார் இந்நாள் இலர் என்றும் இருக்கமுடியாதென்றும் அன்னார் அறைகின்றார். இது எத்துணைப் பெரும் மூடக் கொள்கை. அன்றியும் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்பதற்குச் சிற்சில இலக்கணங்கள் செப்புகின்றனர். யோனிவாய்ப் பிறவாதாரே தெய்வத்தன்மை யுடையார் என்று ஒரு கூட்டத்தார் கூறுவர். அவர், தாம் தெய்வத்தன்மை யுடையாரென்று செப்புகின்ற சிலர் யோனிவாய்ப் பிறவாதார் என்று சரிதங்கள் எழுதிவைப்பர். அநுபவத்தில் யோனிவாய்ப் பிறவாதார் எவரையும் இந்நாள் நாம் கண்டேமில்லை. நடைமுறையில் அவருண்மையைக் காட்ட முடியாமையாலேயே இந்நாள்

தெய்வத்தன்மை வாய்ந்த பெரியார் பிறப்ப தில்லையென அவர் பேசுகின்றனர். இப்பெரும் பொய்யை அறிவு உலகம் யாங்ஙனம் ஏற்கும்?

மற்றும், தெய்வத்தன்மையுடையார் என்று சிலரைக்கூறி, அவர்பால் இயல்புக்கு மாறான செயல்களை ஏற்றி, அவை வல்லார்தாம் தெய் வத்தன்மையுடையார் என்று செப்புதல் மிகப் பெரும்பாலார்க்கு மரபாகிவிட்டது. இதில் எந்தச்சமயத்தாரும் பின்வாங்கவில்லை. எல் லோரும் தங்கள் சமயாச்சாரியார்களின் தெய் வத்தன்மைகளை விளக்க அற்புதங்கள் என்ற பெயரால் பொருத்தமற்ற செயல்களை யெல் லாம் புகன்றிருக்கின்றார். அவர் கூறிவைத் திருக்கும் அச்செயல் வல்லார் எவரும் இந் நாள் இருக்கமாட்டாரென்பது எல்லோர்க்கும் உறுதி. அவ்வாறு செய்யும் ஒருவரை இன்று கண்கூடாகக் காட்ட முடியாதன்றோ? அன்றி ருந்தார் என்று எழுதிவைத்தல் அரிதன்று. இன்று அப்படிக் காட்டமுடியாதென்ற துணிவு கொண்டுதான் அன்றிருந்தார் தெய்வத் தன்மை யுடையாரென்றும் இன்று அன்ன தன்மையாளர் யாரும் இருக்கமுடியாதென் றும் அவர் அறைகின்றார். அஃதுண்மைதான். செய்யத்தக்க செயலாக இருந்தாலன்றோ அது செய்பவர் இருப்பர்? செய்யத்தகாத செய்வார் அன்றுமில்லை, இன்றுமில்லை, என்றுமில்லை யென்பது சரிதம். சென்றவரைப்பற்றி என்ன வேண்டுமோனும் எழுதிவைக்கலாம். எழுத்தில்

எதனையும் எழுதிவிடலா மன்றோ? எழுதின தற்காக அது உறுதியாகிவிடுமா? அறிவு உலக மாகிய தீயில் அச்சாணங்கள் சாம்பலாவது சத்தியம்.

இந்நாள் வாழும்மக்கள் சரிதங்களில் பின்னுளில் அற்புதங்கள் சேர்க்கப்பட்டுவிடும். இப்படியே புனைந்து அறிவை அழித்துக்கொண்டு செல்கிறார் மூடமக்கள். இத்தொல்லைகள் தம் சரிதையில் இடம்பெறலாகாதென்று கருதியே காந்தியடிகள் தம் காதையைத் தாமே எழுதி வைத்தார். தெய்வத்தன்மைக்கு அவர்கள் அறையும் அற்புதங்கட்குப் பொருள் உண்டோ? அக்காதைப் பொய்களை யெல்லாம் நிகழ்ச்சியாக்கொண்டு, அவைகளைத் தெய்வத் தன்மையுடைய பெரியார்க்கு இலக்காகக் கொள்தல் பெருமூடத்தனமாகும். பன்னுள் முன்னர் இறந்துபட்டவர்களை உயிர்ப்பித்த தாகக் கூறுவனபோன்ற பெரும் பொய்க் கதைகளை மெய்யென்று நம்புவதற்கு இரங்குத லன்றி என் செய்வது! தவிர,

பிறப்பினுலோ, அற்புதங்கள் ஆற்றிய தாக அறைவதாலோ, பிறஎதனுலோ தெய்வத் தன்மையுடையவரென்று சிலருக்கு முத்திரை யிட்டுவிட்டு அவர் செய்யும் இழிசெயல்களையும் பெருமைப்படுத்தவும் அஞ்சுகின்றுரில்லை அவ் அற்புதக்கூட்டத்தார். என்னே! அப்பேதைகள் மதியிருந்தவாறு!! செய்தவர் யாரான

லென்? செயலைப்பற்றிய தன்றோ பெருமையும் சிறுமையும்? சிறிய செயலைச் செய்தவன்றே, முன்னேபெரியவராக இருந்த ஒருவர் சிறியவராகிவிடுகிறார் என்பதில் தடையென்னே? "தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர் நிலையின் இழிந்தக்கடை" என்பது வள்ளுவர் குறள். மயிர் தலையிலே இருக்கும்பொழுது அது எவ்வளவு உயர்ச்சி பெறுகிறது; கீழே உதிருமானல் அதனைத் தீண்டவும் அஞ்சுகின்றோம். ஒரே பொருள்தான் தலையிலிருந்தபொழுது சிறப்புற்றிருந்தது; அவ்விடம் விட்டபின் இழிவுபெற்றது. அவ்வாறே மாந்தர் மயிரனையர். அவர் பெரிய செயல் செயுங்கால் தலையிலிருந்து அணிசெய்யும் மயிர்போலவும் சிறிய செயல் செயுங்கால் கீழே விழுந்து குப்பையிற் கிடக்கும் மயிர்போலவும் ஆகின்றார். செய்கைக்கேற்றதே சிறப்பு. எவராகவிருந்தபோதினும் சிறுமை புரிந்த அளவில் அவர் சிறியவரே.

"செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்". செயற்கரியகாரியத்தை எவர் செய்கின்றாரோ அவர்தாம் பெரியவர்; அவரே தெய்வத்தன்மையுள்ளவர். மற்றவர் சிறியவரே. செயற்கரிய செயலாவது யாது? அதுதான் அற்புதம் என்று அறைகின்ற பொய்யான செயல் என்று எண்ணுதல் வேண்டாம். என்றும் எவராலும் செய்யமுடியாத இயல்புவாய்ந்ததுதான் செயற்கரிய

செயல் என்று எண்ணற்க. முடியாத தன்மை வாய்ந்த ஒன்று எந்நாளும் முடியாது. செயற்கரிய செயலாவது—செய்யும் இயல்புவாய்ந்ததுதான்; ஆனால் உலகத்தில் பலரால் செய்ய முடியாதது; முயன்றால் முடிவது; அது செய்யும் அறிவைப் பலர் பெறாமையினாலே அது செயற்கரியதாயிற்று: செயற்கரிய செயல் இதுவேயன்றி வேறன்று. செயற்கரிய செயல் என்பதற்கு உயரிய செயல் என்பதே பொருள். அச் செயல் உடையாரே தெய்வத்தன்மையாளர்.

இன்ன நீர்மையுடையது தெய்வத்தன்மையென்ற மெய்யுணர்வு கைவரப்பெற்றார்," தெய்வத்தன்மையுடையார் அந்நாள் இருந்தார் இந்நாள் அவரனையார் இலர்" என்ற பொருளற்ற பேச்சுப்பேசார். எல்லாவற்றிற்கும் அற்புதம் அற்புதம் என்று புலம்பும் புலப்பத்திற்கு மக்கள் செவிகொடுத்தல் ஆகாது. அவ் அற்புதமாயை அகன்றாலன்றி மெய்யறிதல் இல்லை. அம்மாயைபடர்ந்த மனமுடையார் 'தெய்வத் தன்மை பொருந்தியவர் இந்நாள் இல்லை' யென்றே இயம்பிக் கொண்டிருப்பர். அவர் கூறும் அற்புதங்கள் என்ற பொய்களைத் தள்ளிவிட்டு அவர் கூறுமாறு அவர் கூறும் தெய்வத்தன்மை யுடையார் கதைகளையும் இன்றிருக்கும் பெரியார்கள் கதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்

அவ்வாறு மெய்ச்செயல் கொண்டு ஒப்பு நோக்குவோமானால் பண்டிருந்த பல்லோரையும் விட இன்றிருக்கும் எல்லோரையும் காட்டினும் செய்கையிற் சிறந்த—தெய்வத்தன்மை வாய்ந்த—உலகிற் பெரியாரென்று உரைக்கப் பட்ட ஒருவர், இன்று இப்பரந்த பேருலகில் விளங்குவது காணலாம். சமயக்கணக்கர்கள், அவசரப்படாது நடுநிலையோடு எல்லாத் தெய்வத்தன்மையும் வாய்ந்தவர்களாகத் தாங்கள் கொள்ளும் சமயாச் சாரியார்கள் மெய்ச் சரிதங்களை வைத்துக்கொண்டு, நான் மேலே கூறிய இன்று இவ் உலகில் வாழும் காந்தியடிகள் சரிதத்தையும் வைத்து காய்தல் உவத்தல் இன்றி நோக்கினால் உண்மை அறியலாம்.

உண்மைத் தன்மை யறியாது பழைய காலத்திற்கே பொய்ப்பெருமை கொடுத்தல் முன்னேற்றத்தைப் பெரிதும் தகைவதாகும் காந்தியடிகளே யாயினும் அவர் செய்த தவறு தவறே யன்றிச் சரியாகாது. அடிகள் கூறும் தற்சரிதத்தை அன்பர்கள் படித்திருக்கலாம். அச்சரிதத்தில் அவர்கள் முன்னே செய்த தாழ்ந்த செயல்களையெல்லாம் கூறியிருக்கின்றார்கள். அச்செயல்கள் அவர்கள் செய்ததற்காக உயர்வு பெற்றுவிடுமா? என்றும் எங்கும் எவர் செய்தபோதினும் தாழ்வு தாழ்வே; உயர்வு உயர்வே. செய்வோரைப் பொறுத்துச் செயல் மாறாது. காந்தியடிகள்,

அன்று தாழ்ந்த செயல் சில செய்தார்கள்; இன்று உயர்ந்த செயலே செய்கிருர்கள். அவர்கள் அன்று செய்த அச்செயல் வேறு தன்மையது; இன்று செய்யும் செயல் தெய்வத் தன்மையது. அந்நிலையிலிருந்தோரும் இந்நிலையடைய முடியும் என்ற உண்மையை அடிகள் காதை காட்டுகின்றது. எனவே,

தெய்வத்தன்மைக்குரிய செயல் செய்வதற்கு அவன் பிறவியிலேயே தனிப் பிறப்பாகப் பிறக்க வேண்டுமென்பதில்லை. தெய்வத் தன்மைக்குரிய உயரிய செயலை என்று செய்கின்ருனே அன்றே அவன் தெய்வத்தன்மையுடையவனுகின்ருன். ஆகலின் "தெய்வத்தன்மையடைய நம்மால் முடியாதே; நாம் அவ்வாறு பிறக்கவில்லையே" என்று எவரும் கவலைப்பட வேண்டுவதில்லை. தெய்வத் தன்மைக்குரிய செயல் செய்யும் அறிவு பெற்றுத் தெய்வத்தன்மை யுடையவராக முயலலாம்.

# உலக இயல்பு.

உலக இயல்பு இன்னதென்பதை ஆராய்ந்தறிய வேண்டுவது இவ்வுலகிலுள்ளார்க்கு இன்றியமையாக் கடன். உலகம் மூன்றென்றும் ஏழு என்றும், ஈரேழு என்றும் பல படியாகப் பனுவல்கள் பகரா நிற்கும். அச்சங்கைகள் நமக்கு ஈண்டு வேண்டுவதின்று. நமது கண்ணுக்குக் காணப்படும் நாம் உறைகின்ற இப் பூவுலகத்தையே ஈண்டு நோக்குவோம்.

"இவ்வுலகம் எவ்வெப் பொருள்களைக் கொண்டு இலங்குகின்றது; எத்தீர்மை வாய்ந்தது" என்பவை ஆராய்தற்பாலன. உலகம், புல் பூண்டு மரம் செடியாகிய தாவரப்பொருள்களையும் ஊர்வன பறப்பன நடப்பனவாகிய புழுக்கள் பறவைகள் விலங்குகளையும் மக்களையும் உடையது. உலகம், மிக நுண்ணிய அணுக்களையும் உடைத்தாயிருக்கின்றது; மிகப் பெரிய மலைகளையும் பெற்றிருக்கின்றது. உலகம் நல்வினைகட்கும் இடமாகவிருக்கின்றது; தீவினைகட்கும் இடந்தந்திருக்கின்றது. உலகம், அறங்கட்கும் இடங்கொடுக்கின்றது; மறங்கட்கும் இடமாகாமல் இல்லை. உலகம், நல்லவர்களையும் தாங்கிக்கொண்டிருக்கின்றது; கெட்டவர்களையும் வைத்துக்கொண்டிருக்கின்றது. உலகம், பெரியவர்களையும் பெற்றிருக்கிறது; சிறியவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

உலகம், பரந்து விரிந்து கிடக்கும் தன் நீர்மைக்கேற்ப எல்லா வகையையும் இணைத்துக் கொண்டிருக்கும் இயல்பு வாய்ந்ததாக விருக்கின்றது. உலகம், தீயவையெல்லாம் போக்கி நல்லவையே கொண்டு நிலவ என்றும் முடியாதென்பது உறுதி. உலகம், எந்தக்காலத்திலும் குறித்த எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு தான் பிறங்கி இருந்ததன்றி வேறு வகையாக இருந்ததாக உய்த்துணரக் கூடவில்லை.

இத்துணைப் பல பொருள்களை உலகம் உடைத்தாகவிருந்த போழ்தினும் உயர்ந்தோரை உடைத்தா யிருக்கும் ஒன்று கொண்டே உலகம் பெருமை பெறுகிறது. உலகத்தின் சிறப்பு உயர்ந்தோரையே பொறுத்து நிற்கின்றது. அதனாலன்றே "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" என்றார் பெரியார். இழிந்தாரும் உயர்ந்தாரும் உலகத்தில் என்றுமுளர். இழிந்தார் இன்றேல் உயர்ந்தார் என்ற பெயரே வந்திருக்க முடியாது. உலகம் எல்லோரையும் எல்லாப் பொருள்களையும் என்றும் உடைத்தாகவே இருக்கும். அதுவே உலக இயல்பு. அதினின்றும் மாறுபடுத்த ஒருநாளும் முடியாது.

ஒருநாளும் மறங்களை யெல்லாம் தொலைத்து அறங்களை நிலைநாட்ட முடியாதென்றால் பின்னைத் திருத்தங்கள் எதற்கு என்ற வினா எழலாம். திருத்தஞ்செய்யப் பெறாவிட்டால் மறங்களே பெருகிச் செல்லும். அவ்வாறு

செல்ல விடுதலும் உலக இயல்பிற்கு விரோத மாகும்: உலகில் ஒருபுறம் அறவினையும் ஒரு புறம் மறவினையும் நிகழ்ந்துகொண்டே செல்லும். ஒரு காலத்தில் அறவினை மேலோங்கி யிருக்கும்; ஒரு காலத்தில் மறவினை மேலோங்கி நிற்கும். உலகத்தில் அறவோருக்கும் மற வோருக்கும் என்றும் பூசல்தான். அறவோர் அறத்தை ஆக்கவும் மறவோர் மறத்தை வளர்க்கவும் முந்துதல் இயல்பு. இப்பூசலை அறவே தொலைக்க ஒருநாளும் ஒண்ணாது. ஆனால் அதன் பொருட்டு இச்சண்டையை விட் டொழித்து விடுதல் ஆகாது. எவர் ஓய்ந்தாரோ அவர் கொள்கை பெரிதும் தாழ்ந்துவிடும். மற வோர் ஓய்ந்தால் நல்லதுதான். அவர் ஓயப் போவதில்லை. அது செய்ய எவர் தூண்டுதலும் இன்றியே பல்லோர் புறப்படுதல் கண்கூடு. அறவினையாளரைப் பெருக்க அறவோர் பெரி தும் முயல வேண்டுவது கடமை.

அறவோர் அறத்தை விடாது ஆற்றிக் கொண்டே செல்லுதல் வேண்டும். எத்துணை காலம் போரிட்டபோதிலும் பகையை அறவே தொலைத்தல் இல்லையானால் இப்பூசல் எற் றுக்கு என எண்ணுதல் ஆகாது. என்றும் அறத்திற்கே வெற்றியுண்டாகுமாறு அமர் விளைத்தல் அவசியம். இவ்வமர் ஓயாது நடந்து கொண்டுதான் இருக்கும். அது உலக இயல்பு. கடல் அலைக்கு எவ்வாறு ஒரு கணமும் ஓய்வில் லையோ அதுபோலவே அறப்போருக்கும் ஓய் வில்லை.

அறப்போர் புரிவோர் சலித்தல் ஆகாது. உயர்ந்த மக்கட்கு அறப்போர் புரிதலைத் தவிர வேறு கடனில்லை. "என்கடன் பணி செய்து கிடப்பதே." என்ற உயர் சொற்றொடரின் பொருள் உற்று நோக்கத்தக்கது. பணி செய்து மறத்தைத் தொலைத்து அறத்தை என்றும் அழியாவாறு நிலை நாட்டிவிடக் கூடுமானால் பணிசெய்தே கிடத்தல் என்பது வேண்டுவ தில்லையன்றோ? என்றும் பணி செய்தே கிடத்தல் கடனெனப் பணிக்கும் பொழுது பணியாகிய அறவினை செய்தல் என்றும் நிகழவேண்டிய ஒன்றே என்பது கிடைக்கின்றதன்றோ? பணிசெய்தற்கு ஓர் கால வரையறை கிடையாது. பணிசெய்து கிடத்தலையே என்றும் கடனாகக் கொள்ளவேண்டுவதே அறவோர் செயல்.

எவ் உயர்ந்தோராலும் உலகில் இனிமேல் மறம் நிகழாவண்ணம் அறங்கோலி வைத்தல் முடியாத காரியம். உலகத்தில் எத்துணையோ பெரியோர்கள் எத்துணையோ அறங்களை ஆற்றியிருக்கக் காண்கின்றோம். முன்னே செய்தது இன்று அழிவதும் இன்று செய்வது நாளை அழிவதும் இயல்பு. இவ்வுண்மை ஓர்ந்து எவ்வெக்காலத்தில் எவ்வெவ்வாறு செய்தல் வேண்டுமோ அவ்வக்காலத்தில் அவ்வவ்வாறு ஆற்றுதல் வேண்டும். சந்தர்ப்பம் நோக்கி அவ்வக்காலங்கட்கேற்றவாறு ஆற்றாவிட்டால் மறத்தோடு அமராடி வெல்தல் அருமை. இன்

னதுதான் அறவினை என்று வரையறுத்துக் கூறிவிடமுடியாது. அது காலத்திற்கேற்றபடி யாகவே இருக்கும். "முன்னவர் சொல்வழியே செல்லவேண்டும்; அதில் நின்றும் சிறிதும் பிறழ்ந்து போதல் ஆகாது" என்று கருது வோர் கூற்று உலக இயல்புக்கு ஒவ்வாதது. மேலும் அது அறிவிலார் கொள்கையுமாகும். இவ்வுலகில் முன்னவர்க்கிருந்த உரிமை பின் னவர்க்கு ஏன் இல்லை?

"உலகம் பழைய காலத்தில் அறத்திற்கே உறையுளாக இருந்தது; வரவர அறங்குன்றி வருகிறது." என்று இயம்பும் கொள்கை யுடையார் இங்கு ஒரு சாரார் இருக்கின்றூர். இது பெருந்தவறுடைக் கொள்கை. அறமும் மறமும் மாறி மாறி உயர்ந்தும் தாழ்ந்தும் வரு தலே உலக இயல்பு. உலகத்தில் அறமில்லாத நாளும் இல்லை; மறம் இல்லாத நாளும் இல்லை. ஒரு காலத்தில் அறம் ஓங்கியிருக்கலாம். ஒரு காலத்தில் மறம் ஓங்கியிருக்கலாம். அடிக்கடி திரும்பத்திரும்ப இவை மாறி மாறி வரும். இதுவே உலக இயல்பு.

உலகத்தில் ஒவ்வொரு காலத்தினும் அறஞ் செப்பனிட்டார் பலர். அவையனைத்தும் இன்று நின்று நிலவுகின்றனவோ? இன்று செப்ப னிடப்பெற்றது தேய்ந்து தேய்ந்துவந்து இன் னும் பன்னளில் அற்றுவிடும். அது தேய்ந்து வருங்கால் விடாமல் கண்காணித்து வேண்டுவ

செய்துவந்தால் உரம்பெறும். தேய்வு மிகுதி யேற்படுங்கால் அதனைப் புதுக்குதல் வேண்டும். என்றும் விடாது அறஞ்செய்து கிடத்தலை மேற்கொண்டாலன்றி அறம் ஓங்கிவளர்தல் அருமை. உயர் மக்கட்கு அறஞ்செய்து கிடத்தலே என்றும் கடனன்றி வேறு கடனின்று. ஒரு காலத்தில் முடிவு கட்டிய ஒன்று அப்படியே நிற்காது என்பதற்குச் சில சான்று காட்டுதும்.

இந்நாள் இந்நாட்டில் வகுப்புப்பற்றிப் பல திறப்பட்ட கருத்துக்கள் தோன்றியிருக்கின்றதன்றோ? கடவுள் மக்களைப் படைக்கும் பொழுது அந்தணர் என ஒரு கூட்டத்தாரையும் அரசர் என மற்றொரு பிரிவாரையும் வணிகர் என வேறொரு சாராரையும் வேளாளர் என இன்னொரு பகுதியாரையும் படைத்தாரெனவும் அவர் வழித்தோன்றல்களெல்லாம் அவ்வவ் வகுப்புக்குரியாரெனவுங் கொள்ளும் கொள்கையைப் பெரும்பாலானவர்களிடம் காண்கின்றோம். இதனை ஆராய்ச்சியாளர் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை இதுபற்றி இக் கட்டுரையில் விரித்தெழுத விரும்பவில்லை. வகுப்பு நீர்மையை மற்றொரு கட்டுரையில் காணலாம். "முதலில் மக்களெல்லாம் ஜாதிப் பிரிவென்பது இல்லாமல் ஒன்றாகவே வாழ்ந்தார்கள்; இடைக்காலத்தில் சில நலங்கருதித் தொழில்பற்றி வகுப்பாரப் பிரிக்கப்பெற்றார்கள்" என்பதே அறிஞர் கொள்கை. இப்பிரிவு

தோன்றி நாட்கள் பலவாயினமையின் பிரிக்கப்பட்ட உண்மையை மறந்து வேறு வகையாகப் பொருள் கொள்ள ஆரம்பித்துவிட்டனர். தொழில் வேறு செய்துகொண்டு, வேறு பிரிவில் சேர்ந்துகொள்ள விரும்புகின்றனர். இவ்வுண்மையை நிலைநாட்ட இப்பொழுது பல அறவோர் தோன்றியுள்ளார். தொடக்கத்தில் நன்னோக்கத்தோடு அறமெனக்கருதியே வகுப்புப் பிரிவை உண்டுபண்ணினுர். இந்நாள் அது சங்கடத்தில் வந்து முடிந்துவிட்டது. இப்பொழுது அம்முறையைத் தொலைக்க வேண்டியதிருக்கிறது. இன்று தொலைத்துவிட்டபோதிலும் இனி அது என்றும் சரியாக நடந்து வரும் என்பதற்கில்லை. இன்னும் பன்னுட்கள் ஆனவுடன் இற்றை நிலையையே எய்தும். பிறகு இதில் சீர்திருத்தஞ்செய்ய வேண்டுவது தான்.

மதக்குறிகளை எடுத்துக்கொள்ளலாம். மதம் என்பதற்கே கொள்கை என்பதுதான் பொருள். ஒவ்வொரு கொள்கையாரும் அடையாளந் தெரிந்து கொள்வதற்காகச் சில சில குறிகளைக்கொண்டனர். நாளடைவில் உள் கொள்கைகள் மறைந்தொழிய அவைகளை மறந்து வெளிக் குறிகளையே முக்கியமாகக் கொள்ளும் நிலைவந்துவிட்டது. தொடக்கத்தில் இக்குறிகள் காணப்பெற்றது நன்னோக்கங் கொண்டுதான். இன்று கொள்கையை அழித்தும் குறியைக் காக்கும் நிலை வந்துவிட்டது.

ஒவ்வொரு அறமும் நாள் ஆக ஆக நோக்கம் மறந்து அறத்தின் மாறுபட்டனவாக மாறி விடுவதை இவற்றானும் இன்னும் பலவற்றானும் அறியக்கிடக்கின்றது. விரிவஞ்சி விடுக்கின்றேன். உலக இயல்பு இதுவேயாகும். அறவோர் என்றும் அறக்கடனிறுத்தல்—அதாவது சீர்திருத்தம் செய்தல்—அரும்பணிசெய்து கிடத்தலிலேயே வாணாள் கழிப்பர். கடன் முடிந்ததென்று ஓய்வு பெறுநாள் அறவோர்க்கில்லை. அவ்வாறு ஓய்வு பெறவிடுதல் உலக இயல்பன்று. ஓயாமல் அறவோர்க்குப் பணி தந்துகொண்டிருத்தலே உலக இயல்பு.

# நல்லன நாடல்

மக்கள் யாக்கைபடைக்கப்பட்டதன் நோக்கம் நல்லன நாடுவதற்கேயாகும். யாண்டு நல்லன இருந்தபோதினும் அவற்றை நாடிப் பெற்றுக்கொள்ள முயல வேண்டுவது மக்கள் கடன். "கடனென்ப நல்லவை யெல்லாம்" என்றருளினர் உலகெலாம் போற்றும் ஒரு பெரும் புலவர். நல்லன யாண்டு யாண்டு உளவோ ஆண்டியாண்டு நுழைந்து அவற்றை நாடிக் கடனைக் கொள்ளுதல் வேண்டும். நல்லவை இருக்குமிடம், உயர்ந்ததா தாழ்ந்ததா; நம்நாடா பிறநாடா; நம் சமயமா பிற சமயமா; என்பனவற்றை யாய்ந்து, அவை உயர்ந்த இடத்திலிருந்தாற்றான் நம் நாட்டிலிருந்தாற்றான்—நம் சமயத்திலிருந்தாற்றான் கொள்ள வேண்டுமென்பதும். இவற்றிற்கு எதிரிடையானல் தள்ளவேண்டுமென்பதும் இல்லை. நோக்கம் நல்லவை ஒன்றிலேயே இருக்க வேண்டுமன்றிப் பிற சாதனங்களில் இருத்தல் ஆகாது. கள்ளருந்தும் ஒருவனிடத்து நல்லதொன்றிருக்குமானல் அந்நல்லதை ஏன் கொள்தல் ஆகாது? பிற நாட்டில் நல்லன இருக்குமானல் அவற்றைக் கொள்வதில் என்ன தப்பிதம்? பிற சமயங்கள் கூறும் நல்லொழுக்கங்களை யெல்லாம் ஏன் கையாளுதல் கூடாது?

கருத்து நல்லன நாடுதலிலேயே பதிதல் வேண்டும். "நல்லன யாவையும் நாடுறுநாடு" என்று நமது நாட்டை அலங்கரித்துக் கூறி ஞர் நல்லிசைப் புலவர். அந்நாட்டம் மெய் யாக நம் நாட்டவர்க்குச் செயலில் வருதல் வேண்டுமென்பதே எனது பெரு விருப்பம்: இவை நல்லன இவை தீயனவெனப் பொருள் களை ஆராய்ந்து அறிவு கொண்டு காண்டல் வேண்டும். ஒவ்வொன்றையும் பொறுமை யோடு ஆய்தல் வேண்டும். ஆராயாமல் எந்தப் பொருள்பற்றியும் திடமான முடிவு கொள்தல் படாது. ஆராய்ச்சி யின்றிப் பரம்பரை வழக்க மாகவோ பிறர் கொள்கை கருதியோ எதினும் உறுதி பூணுதல் நன்றன்று. அவ்வாறு கொள் வோர்க்கு உண்மை புலப்படாது. நடை முறை யில் பலரைப் பார்க்கின்றோம். எதையேனும் சரியாகவோ தவருகவோ மெய்யென நம்பி விடுகின்றூர்கள்; அப் பொருளின் தன்மையை யாரும் விளக்கிஞல் காது கொடுத்துக் கேட்க வும் அஞ்சுகின்றூர்கள்; அவற்றை உளத்தில் வாங்குகின்றூரில்லை; ஆராய்கின்றூரில்லை; தாம் சிறிதும் ஆராயாமல் உறுதிபூண்டிருக்கும் அக் கொள்கையை ஆராய்ச்சியோடு மறுப்பா ரைக் காய்கின்றூர்; அவரைச் சீறுகின்றூர்; அதைப்பற்றிச் சிந்திக்கவே ஒருப்படுகின்றூ ரில்லர்; இறுதிவரை நன்மை தீமையறிந்து கொள்ளாராகி விடுகின்றூர். அங்கிலையுள்ளார் பலர் வாழ்கின்றூர் நம்பெரு நாட்டில். அவரை

யெல்லாம் நோக்கி இறைவன் கொடுத்த பகுத்தறிவை நடைமுறையில் கையாண்டு தம்மறிவால் நல்லனகண்டு ஒழுகவேண்டுமென்று பன்முறையும் வேண்டுவோம்.

எவர், தங்கருத்துக்கு மாறாக என்ன கூறின போதினும் என்? அதனால் என்ன முழுகிப் போகும்? எவர் எதைக் கூறியபோதினும் அமைதியாகக் கேட்கலாம்; ஆராயலாம்; நல்லன உள வேல் கொள்ளலாம். இவ் உயர் கருத்து நம் நாட்டவர்க்கு அரும்புதல் வேண்டும். நம் நாட்டில் புராணங்கள் மிகப் பல இருக்கின்றன. அவற்றைப்படித்த அன்பர்களுள் ஒரு பகுதியார் அக்கூற்றை அன்புடன் வரவேற்பார்கள். மற்றொரு பகுதியார் அதன்மீது சீறி விழுகின்றார்கள். நம் நாட்டவரோடு பழகிய தன்மைகொண்டு நான் அவ்வாறு கூறுகிறேன். இருகூட்டத்தாரும் குருட்டுப் பிடியாக ஒன்றைப் பிடித்துக் கொண்டு, அதற்கு மாறுபட்டுக்கூறும் கருத்துக்களைக் காரணங் கூறாது மூலை முடுக்குகளில் வெறுத்துப் பேசி வருவதையே கடனாகக் கொண்டொழுகுகின்றார். அது பெருந்தவறு. நான் பலப்பல புராணங்களைப் படித்திருக்கின்றேன். புராணங்களில் நல்லன பல உள. அவற்றை நாம் எடுத்துக் கொள்ளச் சிறிதும் தயங்கலாகாது. நல்லன யாண்டிருந்தபோதினும், கொள்தல் கடமையன்றோ? அதுபோல் தீயன எங்கிருந்த போதினும் தள்ளுதலும் கடனே. நமக்குச் செயலி

லேயே குறி. எவ்வளவு உயர்ந்த ஒருவரெனி னும் அவர் கூறுவது தவருனல் அதைத் தள்ள நான் ஒரு நொடியும் தாழ்க்கப்போவதில்லை அவ்வாறே தாழ்ந்த நீர்மை வாய்ந்த ஒருவர் உரைக்கும் நலனைக் கொள்ளவும் பின்வாங்கப் போவதில்லை.

நல்லன யாண்டிருந்த போதினும் கொள் தல் என்ற முறையில் புராணங்களிலிருக்கும் நல்லனவற்றைக் கொள்ள ஏன் அஞ்ச வேண்டும்? புராணங்களில் உயர்ந்த அறங்கள் பலவுள; உயர்ந்த கருத்துக்கள் பலவுள; உயர்ந்த கதைப்போக்குகளும் பலவுள. அவற்றை நாம் பொன்போற் போற்றி ஏற் போம். ஏன்? நல்லனநாடல் கடனன்ருே? புராணங்களிலுள்ள தீமைகளை யெல்லாம் கொள்ளக்கூடாது புராணங்களில் தீமை பயப் பவைகள் பலவுள. புராணங்களிலுள்ள கெட்ட கதைகளை யெல்லாம் நாம் சிறிதும் கொள்ள லாகாது. அவ்வாறு கொள்வோரை அறிவற் றவர் என்று கொஞ்சமும் கூசாது கூற லாம் ஒழுக்கங்கொல்லும் கதை புராணங் களில் மலிவு. அவைகளை மெய்யென நம்புதல் மக்கள் ஒழுக்கத்திற்குப் பெருந்தீங்கு பயக் கும். ஒழுக்கங்கொல்லும் நெறி யாண்டிருந்த போதினும் அதைவேரறுத்தல் அறிஞர் கடன். புராணங்கள் முழுமையும் உள்ளவாறே நிலை பெற வேண்டுமென்று கருதி, அவைகளை முற் றும் ஏற்பார் ஒழுக்க நெறியை மாய்ப்பவரே

யாவர். "புராணங்கள் நடந்தவைகளைக் கூறும் பனுவல்கள் அன்று; அவை கட்டுக் கதைகளே" என்ற உண்மையை அறிந்துகொள்வரேல் அவைகளை அப்படியே முற்றும் நம்ப ஒழுக்கநெறி பேணும் எவரும் துணியார்.

புராணங்கள் கட்டுக் கதைகள் என்பவற்றிற்குச் சான்றுகள் எண்ணற்றன உள. ஒரே கதையைப்பற்றிப் பல புராணங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டுக்கூறுவதே நல்ல சாட்சி. புராணங்கள் புனை கதைகள் என்பவற்றை உளத்திருத்தி அவைகளைப் படித்தல் வேண்டும். நான் கூறும் ஒன்று கொண்டுமட்டும் அவை புனை கதைகள் என்று துணியுமாறு நான் எவரையும் வற்புறுத்தவில்லை. அவரவரும் ஆராயலாம். அவை புனை கதைகள் என்ற முடிவே கிடைக்க முடியும். அன்றி, தக்க காரணங்கொண்டு மெய்யாக நடந்தவைதாம் என்று கண்டு பிடிக்கப்படுமேல் அக்கூற்றை நானும் ஏற்றுக்கொள்ளத் தயாராக விருக்கிறேன். அவை புனை கதை என்பதிற்சிறிதும் ஐயமில்லை. அன்றி மெய்க்கதையென்று வேண்டுமானாலும் வைத்துப் பேசுவோம். அப்படியிருந்தபோதினும் நல்லனை நாடவேண்டுமே யன்றித் தீயனவற்றை-ஒழுக்கங்கெட்ட கதைகளைக் கொள்ள வேண்டுவதில்லை. எல்லாவற்றினும் மேம்பட்டது ஒழுக்கம். மற்றவை பின்னரே.

ஒரு கருத்தை ஒருவர் கூறுவாரானால் அதை நன்கு சிந்தித்து அது நலனானால் கொள்ள

வேண்டுவதே அறிஞர் கடன். நமக்குப் புராணம் பாடிய எவரும் பகைஞரல்லர். அவ்வாசிரியர்களை அவர்கள்கூறும் நல்லனகொண்டு நாம் பெரிதும் மதிக்கின்றோம். புராண ஆசிரியர்களுள் பெரும்புலமை கொண்டார் பலர் உளர். அவர்புலமையைநாம் போற்றாதிருக்கமுடியுமா? கம்பநாடரின் அருங்கருத்துக்களையும், அழகிய கவிகளையும், சேக்கிழாரின் சிறந்த பாடல்களையும், பரஞ்சோதி முனிவரின் பலதுறை வன்மையையும், புகழேந்தியின் இனிய வெண்பாவையும், அதிவீர ராமனின் அகன்ற வர்ணனையையும், வேறு பலரின் மேலான செய்யுட்களையும் எல்லோரும் கற்றல் வேண்டும். அவற்றின் கட்பொதிந்து கிடக்கும் நல்லன எல்லாவற்றையும் கைக்கொண்டொழுகுதல் வேண்டும்.

நல்லன யாண்டிருந்த போதினும் கொள்ளப் பின் வாங்குதல் ஆகாது. சிலர் ஆட்களையே நோக்குகின்றனர். அது பெரியதோர் மூடத்தனம். நல்லவை எங்கிருந்தாலும் உடனே பற்றுதல் வேண்டும். நல்லவை எவையென்பவற்றை ஆராயும் அறிவுபெற்றவர்தாம் மக்கள் என்பது அறிஞர் பலரும் கண்ட உண்மை. எனவே, மக்களாவார் நல்லவை அறியமுடியவில்லையே என்று நவிலமாட்டார். நம் நாட்டவர் காலங் கற்பிக்க முடியாத நிலைமையில் பன்னெடு நாட்களாக மிகவும் நாகரிகம் வாய்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றனரேயன்றி, செயலில் இந்நாள் அநேகம்

சிறு காரியங்களிலெல்லாம் தவறுசெய்து விடுகின்றார். தாங்களாகவே செய்துகொள்ள வேண்டிய சிலவற்றைப் பிறநாட்டவரைப் பார்த்தேனும் செய்துகொள்கின்றாரில்லை.

நன்மை யாண்டிருந்தாலும் கொள்ள வேண்டுமென்று நான் கூறியபடி பிறநாட்டவரிடம் காணப்படும் நல்லவைகளை யெல்லாம் உடனே கொள்ளுதல் வேண்டும். முதலாவதாக ஒவ்வொன்றையும் குறித்த காலத்தில் செய்வது என்ற ஒன்றை வெளிநாடுகளைப் பார்த்தும் நம்நாடு கற்றுக்கொள்ளாமலிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது. நான்கு மணிக்குக் கூட்டமென்றால் ஆறு மணிக்கு ஏன் கூடுதல் வேண்டும்? நான்கென்றால் ஆறு; ஆறென்றால் எட்டு; எட்டென்றால் பத்தென்பது கூடவே கூடாது. ஒரு மணி நேரம் ஒருவருக்கு உரையாடக் குறிக்கப்பெற்றிருந்தால் ஒன்றரை இரண்டு மணி நேரங்களும் அதற்குமேலுங் கூடப் பேசுவது கூடாது. காலத்தை அநுசரித்தே செல்லுதல் வேண்டும். இன்ன காலத்தில் இன்ன காரியத்தைச் செய்வதென்று வைத்துக்கொள்ளுதல் மிகவும் நல்லது.

அநாவசியமாக எவரையும்பற்றிப் பேசாதிருத்தல்-பெண்களைச் சமமாக நடத்தல்-குழந்தைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல்-உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளல்-அழுக்கில்லாத ஆடைகளையே அணிதல்—எல்லாப் பொருள்களையும் பரிசுத்தமாக நாள்தோறும்

துடைத்துவைத்துக்கொள்தல் முதலியவற்றில் எல்லாம் வெளிநாட்டாரைப் பின்பற்ற வேண்டுவது அவசியமாக விருக்கிறது. இவை யெல்லாம் வெளிநாட்டாரைப் பார்த்துத்தான் செய்யவேண்டு மென்பதில்லை. நாமாகவே செய்ய வேண்டுவது. நம்மில் பலர் செய்யவில்லை. இந்நாள் வெளியே பலர் செய்கின்ருர். அவர் களைப் பார்த்தும் அவர்கள்பால் உள்ள நல்லன வற்றை நம்மவர் கொள்ளாதுறைதல் வெட்க கரமானது. ஆனல், நல்லன கொள்தலை விடுத் துத் தீயன பலவற்றை வெளிநாட்டாரிடம் கொள்கின்ருர் நம்மிற் பலர். தீயன வெளியே யிருந்தும் கொள்ளலாகா; நம்மிட முள்ளவற் றையும் இன்னே தொலைத்தல் வேண்டும். நல் லன யாண்டியாண்டு கிடைப்பினும் எல்லாவற் றையும் நாடிக்கொண்டு நல்லனவே செய்து வாழவேண்டுவது மக்கள் பெருங்கடன்.

# கல்வியும் அறிவும்

கல்வி என்பது கற்றுத் தெரிந்து கொள்வது. அறிவு என்பது இயல்பாக அமைவது. கல்வி என்றால் நூல்களைப் படித்தல் என்று யாரும் எளிதிற் பொருள் கொண்டு விடுகின்றார். அது மட்டும் கல்வியாகாது. உலகத்தில் எந்தெந்தப் பொருளை அறிந்துகொள்கின்றோமோ அவ்வனைத்தும் கல்வியேயாம். கற்பனவெல்லாம் கல்வியின்பாற் பட்டனவே. நூல் கற்றல் ஒன்றுதான் கல்வியெனக் கோடல் பொருத்தமுடைத்தன்று. நூல் கல்லாமல் பல பொருள்களைக் கற்றுக்கொண்டிருப்போர் பலரை இவ்வுலகில் காண்கின்றோம்.

அறிவு பலவகைப்படும். ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றில் அறிவு மிகுதியாகவிருக்கும். ஒவ்வொருவர் மதி ஒவ்வொன்றை அறிவதில் நுட்பமாகச் செல்லும். எதைக் கற்பதாயினும் அறிவு கொண்டுதான் கற்க வேண்டும். எனவே அறிவுக்கும் கல்விக்கும் மிகுதியும் தொடர்பு உண்டு. ஆனால் உலக நீர்மையை நோக்குங்கால் அறிவுக்கும் கல்விக்கும் தொடர்பு இல்லாமலேயே இருக்கின்றது. தொடர்பிருக்கவேண்டிய ஒன்றைத் தொடர்பில்லாததாக உலகில் பல்லோர் ஆக்கிக் கொண்டுவிட்டார். காரணம், அறிவைக் கையாள்வார் எண் மிகக் குறைவே. பற்பலர்

அறிவை ஆளும் ஆற்றலற்று ஒருவகையாகக் கற்பதில் காலங்கழித்து வருகிறார்.

அறிவைப் பயன்படுத்திக் கொள்ளாமலேயே கல்வி பயில்வார் கணக்கு மிகப் பெருக்கம். நூல்கள் நுவல்வனவற்றை அவை கூறுமாறு கற்றுக்கொள்கிறார்; பிறர் கூறும் பிற பொருள்களையும் பிறர் செய்யுஞ் செயல்களையும் அப்படியப்படியே படித்துக்கொள்கிறார். அவைகளை அறிவதில் தம் அறிவைப் பெரிதும் உபயோகிப்பதில்லை. "தனக்கென அனைவர்க்கும் தனித்தனியே அறிவு உண்டு; எந்த நூல் என்ன கூறினும் எவர் எது இயம்பினும் எல்லாவற்றையும் எடுத்து ஆராய, அவர் எவருக்கும் குறையாத உரிமை எல்லோர்க்கும் உண்டு" என்ற எண்ணம் பலர்க்கு இன்மையினாலேயே கல்விக்கும் அறிவுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கிறது, என இயம்புகின்றேனன்றி வேறன்று.

அறிவை இயற்கையறிவு செயற்கையறிவு எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். அவற்றுள் இயற்கையறிவு என்பது இயல்பாக இருப்பது; செயற்கையறிவு என்பது சேகரித்துக் கொள்வது. இரண்டு அறிவும் கொள்ளத் தக்கனவே. இயற்கையறிவு இல்லாதார் எவருமில்லை. அது எல்லோர்க்கும் உண்டு. அதில் குறைவு மிகுதியிருக்கிறது. ஆனால் பலர் அடியோடு அவ்வறிவு இல்லா நிலையில் கருமம் ஆற்றுகின்றனர். அதனை ஆள வகையறிகின்றாரில்லை. செயற்கை

யறிவுதான் கல்வியாற் பெறுவது. கல்வி யென்று கூறுமிடத்தெல்லாம் நூல் கற்றலை மட்டுமன்று என்பதை அன்பர்கள் நினைவில் வைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன். செயற்கையறிவை இயற்கையறிவு கொண்டு அறிவதில்லையானால் அவ்வறிவைப் பெறுவதில் நலனுமுண்டு; தீங்குமுண்டு. கிளிப்பிள்ளைக்கும் அவருக்கும் வேறுபாடு இல்லை.

உலகில் நல்லவருமுண்டு; தீயவருமுண்டு. நூல்களுள்ளும் நல்லவை தீயவையுள. இயற்கை யறிவை விடுத்துச் செயற்கையறிவை மட்டும் பெறுபவர் நல்லவரைப் படித்தால் நற்செயலிற் றலைப்படுவர்; தீயவரைப் படித்தால் அவர் வழியே போவார். நல்ல நூலைப் படித்தால் நல்ல வழி சேர்வர்; தீயநூலைப் படித்தால் அவ் வழி ஆவர். எவ்வெப்பொருளைத் தாங்கள் அறிந்து கொள்கின்றாரோ அவ்வவற்றிற்கு அவர் அடிமையாகிவிடுவர். இது சிறிதும் புனைந்துரையன்று. இன்று கண்கூடாகக் காண்கின்றோம். இவருள்ளும் ஒவ்வொன்றைப் பிடித்துக்கொண்டு அதற்கு மாறான மற்ற வற்றை மறுக்கின்றாரே என்றால், அது வழி வழியாக ஒன்றிற்கொண்ட பற்றினலன்றி இயற்கையறிவை ஆண்டமையாலன்று.

இயற்கையறிவை ஆளாதவர்களையே மாக்கள் என்று தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர்கள் சொன்னார்கள். தன்மைகொண்டு நோக்குங்கால் அவர் கூற்று முற்றும் உண்மை.

யாகும். இயற்கையறிவே பகுத்தறிவு என்று கூறுகின்ற ஆறுவதறிவு எனக் கொள்ளலாம். கல்வியும் அறிவும் என்று இக் கட்டுரைத் தலைப்பில் நான் குறித்தது அவ்வியற்கை யறிவையே யாகும். அறிவு என்ற சிறப்பிற்குரியது அவ்வறிவே என்பதை எவரே மறுக்க வல்லார்? அவ்வறிவிற்கும் கல்விக்குமே தொடர்பு இல்லாமல் இருக்கிறது இந்நாள் என்பது பலர் கருத்து. அவ்வுண்மையைச் சில சான்றுகளோடு விளக்குவேன்.

அறிவை ஆளுவதைக் கைவிட்ட நாள் முதல் நம் நாடு இத்துணைத் தாழ்ந்த நிலைக்கு வந்தது என்று இயம்புதல் தவருகாது. இந்நாள் நம் நாட்டைவிடப் பிற பல நாடுகள் இதில் மேம்பாடுற்றிருக்கின்றன. நம் நாட்டில் அறிவுக்குச் சம்பந்தமில்லாத பெரு மூடக் கொள்கைகளே பெருகிவிட்டன. கல்லாதுவாளா நீண்டவர் மட்டும் அறிவை ஆளவில்லை என்று கூறமுடியவில்லை. கற்றருள்ளும் அறிவை ஆளாதாரே பலர். சிறிது கூர்ந்து நோக்கின் இவ்வுண்மையை எவரே உணரார்?

தமிழ் நூல்களில் ஒன்று பாக்கிவிடாது ஒருவர் உருப்போட்டிருக்கிறுர். எந்தப் பாட்டுக் கேட்டாலும் பாராமல் ஒப்பிப்பார். நீண்ட பெரிய உரை நடைகளைக்கூட முற்றும் ஒரு எழுத்துக்கூட மாருமல் மனப்பாடமாகக் கூறுகிருர். அந்தாதிகள், கலம்பகங்கள், கோவைகள் எல்லாம் அடுக்கடுக்காக அறை

கிறார். தலபுராணங்களெல்லாம் சாற்றுகிறார். மிடுக்குகள், திரிபுகள், யமகங்களையெல்லாம் கேட்டபடி உடைத்தெறிகிறார். அந்த நூல்களைப்பற்றி நாட்கணக்காகச் சொற்பெருக்கிடுகிறார். இத்துணை மூட்டைகளைக் கற்றிருந்தும் என்பயன்? இது நல்லது இது கெட்டது என்ற மெய்யை உண்மையாக அறிந்துகொள்ளத் தெரியவில்லை. ஒன்றும் கல்லாத ஒருவர் அறிவைப் பயன் படுத்தித் தக்க தகாதன அறிந்துகொள்கிறார்.

ஒருவர் வடமொழியிலோ, ஆங்கிலத்திலோ, பிறமொழியிலோ உள்ள பலப்பல நூல்களைப் படித்திருக்கிறார்; பட்டங்களெல்லாம் பெற்றுவிடுகிறார். எந்த மொழியில் எத்துணை நூல்களை எத்துணை ஆண்டுகள் உருப்போட்டாலும் நன்மை, தீமை அறிந்துகொள்கின்றாரில்லை; ஒன்றும் கல்லாத சர்வசாதாரணமான மக்கட்குள்ள பகுத்தறிவில் ஒரு சிறு பகுதியும் கூட இல்லாதுறைகின்றார். ஆனால் அறிவு உண்டோ இல்லையோ நூல் பல கற்றிருக்கின்றோம் என்ற மமதை இவர்களிற் பலருக்கு மிகுதியும் இருக்கக்காண்கின்றோம்.

சமய சாத்திரத்தில் மிக வல்லுநரென ஒரு சாரார் சாற்றித்திரிகிறார். இவருள் பெரும்பாலார் மிக்க குறுகிய புத்தியுடையவராகவே இருக்கின்றார். தத்தம் சமயங்களைப் பற்றியும் சமயாச்சாரியார்களைப் பற்றியும் இவர்கள் கூறும் புனைந்துரைகட்கும் பொய்யுரைகட்கும்

எல்லை கூறமுடியாது. இவர்கள் கூற்றுக்கும் அறிவுக்கும் சம்பந்தம் லவலேசமும் இராதென்பதை ஆராயும் எவர்க்கும் நான் கூறவேண்டுவதில்லை. அகங்காரத்தில் இவருக்கு எவரையும் ஈடு சொல்தல் முடியாது.

நூல் ஒன்றும் கல்லாமலேயே உலக வழக்குகள் கற்றவருள்ளும் பலர் அறிவு வழியே செல்லக் காண்கின்றோமில்லை. இவர்கட்கும் எல்லாம் தெரியும் என்ற இறுமாப்புக் குறைவில்லை. இவரனைவரும் அறிவை முக்கியமாக ஆண்டு எவர்கூற்று எவ்வாறு இருப்பினும் எல்லாவற்றையும் தம் அறிவால் கண்டு மெய் கொண்டு பொய் தொலைப்பாரானல் நாடு இன்று இருக்கும் இழிவான நிலையிலா இருக்கும்? சிறிது கற்றாலும் செருக்குறுவதில் பின்னடைகின்றனரில்லை. அறிவை ஆளுமிடத்து முதலில் அச்செருக்குப்படும். அறிவின்மையினலேயே அன்னவற்றிற்காட்பட்டழிய நேர்கிறது.

அன்றி, கற்றவர் பலர் தங்கள் கொள்கைகட்கெல்லாம் ஓரே ஒரு பற்றுக்கோடு வைத்துக்கொண்டிருக்கிறார். தாம் கூறும் ஒன்றைத் தம்மதி நுட்பங்கொண்டு காரணத்தோடு உலகம் ஒப்புக்கொள்ளக் கூற அறிவதில்லை. "அவர் சொல்கிறார்; இவர் சொல்கிறார். அந்த நூல்சொல்லுகிறது; இந்தநூல் சொல்லுகிறது. ஆகையினலே ஏற்றுக்கொள்" என்கிறார். இப் பொருளற்ற உரைகளைச் சொந்த அறிவுள்ள

அறிஞர் எவரே ஏற்பர். எவர் சொன்னு லென்? ஏன் சொன்னுரென்பதை யன்ரே உணர்தல் வேண்டும்?

"திருநீறு ஏன் பூசுகின்ருய்" என்ருல் "மந்திரமாவது நீறு" என்று கூறுகிறவன் எவ்வளவு மூடன்! "திருமண் ஏன் தீட்டுகின்ருய்" என்ருல் "என் தகப்பனைப் பின்பற்றி" எனச் சாற்றுகின்றவனுக்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லையென்பதில் என்னே பிழை! கற்ருர் மற்ருர் ஆகிய பலரும் இப்படியே அறிவை ஆளாமல் எல்லாச் செயலையும் செய்கின்ருர்.

இதனுல் கற்றவராகக் கருதிக்கொள்ளும் எவரும் என்மீது சினந்துகொள்ள வேண்டுவதில்லை; மற்றவரும் வருந்தவேண்டுவதில்லை. கற்றவரனைவரும் அறிவில்லாதவர் என்று நான் கழறியதாக எவரும் பிறழ உணர்தல் ஆகாது. கற்றவருள்ளும் அறிஞர் உண்டு. மற்றவருள்ளும் அறிஞர் உண்டு. கல்விக்கும் அறிவுக்கும் தொடர்பு உண்டாக்கினுல் மிக நல்லது. மற்றவரைக் காட்டினும் கற்றவர் அறிவைக் கையாண்டால் பயன் மிகுதியாக உண்டு. அறிவுக்குக் கல்வி பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை. ஆகலின் எல்லோரும் அதிற் சிறப்பாகக் கற்ருேரும் அறிவைக் கையாள வேண்டுமென்பதே எனது பெரு விருப்பம்.

## நிலையிலா வாழ்வு

உலகில் அறம் குறைந்து வருவதையும் மறம் நிறைந்து வருவதையும் நாள்தோறும் கண்டு வருகிறோம். அறஞ் செய்வார் சிலராகவும் மறஞ்செய்வார் பலராகவும் இருக்கின்றார். காரணம் என்னை? நிலையிலா வாழ்வை உணரா மக்கள் மல்கியமையேயாகும். வாழ்வின் நிலையாமையை உணர்வார்களானால் மறஞ்செய்ப்புகாரன்றோ? வாழ்வு என்றும் நிலைபெறுவது என்றெண்ணியன்றோ தங்கள் வாழ்வின் பொருட்டு மறம் புரியப் பின்வாங்குகின்றாரில்லை? உலகில் மிகப் பெரும்பாலான மக்கள் இதனை உணராமலே கருமமாற்றுகிறார். இது வியக்கத்தக்க ஒன்றே. வாழ்வு நிலையாமையுடையது என்பதற்குப் பழைய பனுவற் சான்றுகள் வேண்டுமானால் கணக்கிலடங்காச் சான்றுகள் உள. நடைமுறையில் காணவேண்டுமானால் நாள்தோறும் தவறாது ஒவ்வொருவரும் கண்டு கண்டு வருகின்றனர். இவ்வளவு விளக்கமாகப் பல்லாற்றானும் அறியக்கிடக்கும் நிலையாமையுடைய வாழ்வை நிலையினதென்றெண்ணுதல் வியப்பென்பதில் என்னே தடை? நிலையிலாதவற்றை நிலையுடையவை என்றெண்ணுதல் கீழான செயல் என்னும் பொருள்பட "நில்லாதவற்றை நிலையின வென்றுணரும் புல்லறிவாண்மை கடை" என்று

அருளினர் வள்ளுவனர். அப்புல்லறிவாண்மை தான் இந்நாள் உலகில் மல்கியிருக்கிறது.

எவற்றினல் மக்கள் பெருமிதம் அடைகின்றார்களோ அவை யனைத்தும் நிலையாமை யுடையனவாகவே யிருக்கின்றன. பொருள் நணிபடைத்த ஒருவர் அப்பொருளுண்ட வாழ்வை மிகப் பெரு வாழ்வாகக் கருதுகின்றார். அதனல், தீமையின்றேல் அவர் கருதுவதாலும் பாதகமில்லை. அக்கருத்துப் பிறருக்குப் பெரிய இடுக்கணை விளைவிக்கின்றது. படைத்த பொருளோடு தாம் என்றும் வாழ்தல் நிலையென நிச்சயித்து இறுமாந்து செய்வது தவிர்வது தெரியாமல் உலகில் பெரும்பாலாராகிய ஏழை மக்களை இயன்றமட்டும் துன்புறுத்திவிடுகிறார். வள்ளுவர் அருளிய மற்றை அறங்கட்கும் தற்கால அரசியலுக்கும் சிறிதும் சம்பந்தம் இல்லாது போயினும், "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என்ற ஒன்றிற்குப் பெரிதும் இயையவே அரசியலாதிய யாவும் நடைபெறுகின்றனவாகலின் ஏழை மக்கள் இன்னல் அதிகப்படுகின்றனவேயன்றி இவ்வுலகில் யாண்டும் குறைவுறக் காணவில்லை. ஏழைகட்குப் பரிகாரம் அறக்கடவுள் செய்தாலொழிய இல்லை. செல்வச் செருக்குற்றுத் தீமை புரிவோரை அறக்கடவுள் காயுமென்ற மேலோர் கொள்கை உண்மை. நிலையிலாப் பொருளை நிலையினதாக வெண்ணி மயங்கி, பிறருக்கு ஆனமட்டும் துன்பத்தையாற்றி,

"பிறர்க்கின்ன முற்பகற் செய்யின் தமக் கின்ன, பிற்பகற் ருனே வரும்" என்பதற் கொப்பப் பின்னர் துன்பத்தை ஏற்று ஏன் அழிதல் வேண்டும்?

எல்லா மக்களும் இன்ப வாழ்வு வாழ வேண்டுமானல், ஒருவருக்கொருவர் துன்பஞ் செய்தல் ஆகாது. செல்வர் ஏழைகட்குத் துன் பஞ்செய்தல் இயல்பாகிவிட்டது. அதனை அவர் கள் நிறுத்தவேண்டுமானல், செல்வம் நிலையற் றது என்பதை உணரவேண்டும். செல்வர் வறி யரைத் துன்புறுத்துதல் ஒழியவேண்டுமென்ப தற்காகச் செல்வம் நிலையற்றது என்று நான் கூறவில்லை. செல்வம் நிலையற்றது என்பதற் கும் பிற வாழ்வு நிலையற்றது என்பதற்கும் நூற்சான்று எண்ணற்றன உள. அற நூல் களை எடுத்துப் பார்ப்போமானல் ஒவ்வொரு நல்லற நூலினும் நிலையாமைக்கு அதிகாரங்க ளுள. "நாலு இரண்டு" எனப் புகழ்பெற்ற இரண்டு அற நூல்களுள் ஒன்ருகிய நாலடியார், நூலாரம்பத்திலேயே "செல்வநிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை" என்று மூன்று அதிகாரங்களை முழக்கிப் பிற வற்றைப் பின்னே பேசிச் செல்கின்றது; மற் ருென்ருகிய திருக்குறள், "நிலையாமை" என்ற ஓர் அதிகாரத்தில் செல்வம் யாக்கை இளமை யாதியவற்றின் நிலையாமையைத் திறம்படச் செப்பியிருக்கின்றது. பிற பல நூல்களினும் நிலையாமைபற்றிப் பலப் பல பாக்கள் கிடக்

கின்றன. ஆனால், நூல்கள் கூறுவனவெல்லாம் அநுபவத்திற் காணாதனவென்று எண்ணுதல் வேண்டாம். நிலையாமைபற்றி நூல்கள் கூறியிருக்கும் அனைத்தையும் இன்று நாம் கண்டு வருகின்றோம்.

உலகவாழ்வில் ஒன்றும் நிலையுடையதல்ல: யாவும் அழிதன்மாலையது. செல்வம் நிலையுடையதல்ல; மாட மாளிகையும் கூடகோபுரங்களும் நிலையுடையனவல்ல; மக்கள் மனைவி நிலையுடையவரல்லர்; இளமை நிலையுடையதல்ல; யாக்கை நிலையுடையதல்ல. செல்வம் நிலையுடையதானால் என்றும் அகலாது ஒருவர்பால் அது இருத்தல் வேண்டும். அங்ஙனம் காண்கின்றோமோ உலகில்? இல்லை; இல்லை. இன்று பெருஞ் செல்வம் படைத்துப் பெருவாழ்வு வாழும் ஒருவர், நாளை யாவும் இழந்து கூழுக்கு வருந்துகிறார்; நேற்று மணிமுடிதரித்து அரியணையிருந்து தன்னேர் இன்றி அவனியை யாண்ட ஒருவர், இன்று தேடுவாரற்றுக் கிடக்கின்றார். "துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்காற் றொட்டுப், பகடுநடந்த கூழ் பல்லாரோடுண்க—அகடுற, யார்மாட்டும் நில்லாது செல்வம், சகடக் கால்போல வரும்." "அறுசுவை யுண்டி யமர்ந்தில்லாள் ஊட்ட, மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்; சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்று, உண்டாக வைக்கற்பாற் றன்று." "யானையெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்,

சேனைத்தலைவராச் சென்றோரும் — ஏனை, வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட, மனையாளை மாற்றார் கொள." என்பனவாதி பாட்டுக்களால் செல்வம் நிலையாமையை நாலடி நன்கு செப்புகின்றது.

"கூத்தாட் டவைக்குழாத் தற்றேபெருஞ் செல்வம், போக்கும் அது விளிந்தற்று" என்று கூறுகின்றது குறள். "குன்றத்தனை இருநிதியைப் படைத்தோர் அன்றைப் பகலே அழியினும் அழிவர்" என வெற்றிவேற்கை விளம்புகின்றது. இவ் உண்மையால் செல்வம் நிலையற்றதாகின்றது. மாளிகைகள் நிலையுள்ளனவாகின் அவை என்றும் நிற்கின்றனவா? எத்துணையோ மாளிகை எத்துணையோ பல வழிகளில் நாசமாகக் காண்கின்றோம். "எழுநிலை மாடங் கால்சாய்ந்துக்குக் கழுதை மேய் பாழ் ஆகினும் ஆகும்." என்பது பொய்யன்று. மனைவி நிலையுடையவளுமல்ல; மக்கள் நிலையுடையவர்களுமல்லர்; சுற்றம் நிலையுடையதுமல்ல; எல்லாம் மாளுந் தன்மை வாய்ந்தன. இவற்றிற்கு எச்சான்றும் வேண்டாம் கண்கூடே. இளமையும் நிலையாமையை யுடையதேயாகும். இளமை நிலையுடையதாயின் என்றும் இளமையோ டிருக்கலாமன்றோ?" "பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம் கனி யுதிர்த்து வீழ்ந்தற்று இளமை" என நாலடி நவில்கின்றது.

யாக்கை நிலையாமையுடையது என்பதை நடைமுறையில் அனைவரும் கண்டு வருகின்ற

னர். ஆனால், அதனை அழுந்த மனதில் பதிக்கின்றாரில்லை. யாக்கை நிலையுடையதானால் இதுவரை உலகில் தோன்றிய எல்லோரும் அவ்வவ் யாக்கையோ டிருப்பரன்றோ? பிறந்த அனைவரும் மாளுவது உறுதி. முன்னே பிறந்திருந்த பல்லோர் மாண்டனர். யாக்கை நிலையாமையில் செல்வர் வறிஞர் கிடையாது. "முடிசார்ந்த மன்னவரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பராவது" திண்ணம். "மண்ணாண்ட மன்னரும் அவர் தனமும் மாண்டன நுண் மணலை யொக்கும்; விண்ணாடும் இந்திரரும் அவர் தனமும் பொயின விண்மீனை யொக்கும்" "நேற்றிருந்தார் இன்று வெந்து நீறு"வதை எவரே யறியார்? "நெருநலுள னொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்து இவ் வுலகு" என்றார் வள்ளுவர். "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்றார் தாயுமானர். "மலை மிசைத் தோன்றும் மதியம்போல் யானைத், தலைமிசைக்கொண்ட குடையர்—நிலமிசைத், துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட்டாரல்லால், எஞ்சினார் இவ்வுலகத்தில்." "சென்றே யெறிப வொருகால் சிறுவரை, நின்றே யெறியு பறையினை—நன்றேகாண், முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவார், செத்தாரைச் சாவார் சுமந்து" என்று நாலடியார் நுவல்கின்றது. இவற்றை அநுபவத்தில் கண்டும் மக்கள் உணர்ந்து ஏற்பவொழுகாதது பழவினையினாற்போலும்!

செல்வம் நிலையற்றது; இளமை நிலையற்றது; யாக்கை நிலையற்றது; மனைவி மக்கள் ஆதி யாவும் நிலையற்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. நிலையிலா இவ்வாழ்வை விரும்பி மக்கள் மறஞ் செய்தல் ஆகுமோ? நிலையிலா வாழ்வை உணர்தல் வேண்டும், இத்தகைய நிலையிலா வாழ்வில் மக்கள் செய்ய வேண்டிய கடமை என்ன என்பதை நோக்குதல் வேண்டும். அற்ப வாழ்விற்குள் அநீதியான செயல்களைச் செய்தலாகாது. நல்வாழ்வு பெறுங்காலத்தில் இயன்ற நல்லறங்களை யெல்லாம் விடாது ஆற்றுதல் வேண்டும். வாழ்வுள்ள காலத்தில் உலகிற்கு உதவி செய்தல் எளிது. "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்பொடுயிரிடை நட்பு" என்றவாறு, பெற்ற உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு நீங்குதற்குமுன் நல்வினை யாற்றிவிடுதல் வேண்டும். "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப் படும்" என்ற வள்ளுவர் மறையை மறத்தலாகாது. யாக்கையைப் பெற்றவர், அதனாலய பயனைக் கொள்ளாது விடுதல் அறியாமை. "யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர், தாம் பெற்ற யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை, மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே, நிலையாது நீத்து விடும்" என்பதற்கேற்ப, உடம்பு விரைவில் நீங்கிவிடுமாகலான் உடம்பெடுத்தவர் உடம்பினால் ஆய பயனைக் கொள்ளத் தவறக் கூடாது.

இளமையை இன்பத் துறையில் அழித்து விட்டு முதுமையில் உலக நன்மையை நாடலாம் என எண்ணுதலாகாது. "மற்றறிவாம் நல்வினை யாமிளேம் என்னாது, கைத்துண்டாம்போதே கரவா தறஞ்செய்ம்மின்—முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால், நற்காய் உதிர்தலும் உண்டு" என்றபடி இளமையிலேயே மாள்வதும் இயல்பு. ஆகலின் நாளை யென்னாது அறஞ்செய்ய முந்துதல் வேண்டும். நாளை நாளை யென்போமானால், நாளை நம்முடை நாளென்பதையும் நமனுடை நாளென்பதையும் யார் கண்டவர்? செய்ய வேண்டுவதை இன்றே—இன்னே செய்தல் வேண்டும்.

வாழ்வு நிலையில்லாதது. ஆனால் என்றும் நிலைத்து உயிரோடு தொடரக் கூடியது, தான் செய்த அறமும் மறமுமேயாகும். ஆதலால் உயிரோடு தொடரக்கூடிய அறத்தை யாற்றச் சிறிதும் தவறுதல் ஆகாது. "அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி யம்பொழுக, மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு, கைத் தலைமேல் வைத்தழும் மைந்தருஞ் சுடுகாடு மட்டே, பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாபமுமே" என்பது பட்டினத்தடிகள் வாக்கு. ஆகலால் நிலையிலாவாழ்வை உணர்ந்து பிறந்த பயனை யடைந்து ஈடேற விரும்பும் மக்கள் நல்லற மாற்றுவாராக; நிலையிலா வாழ்வை நிலையினதென மயங்கிப் பெருமிதங் கொண்டு கெடுவினை செய்து கெட்டழியா தொழிவாராக.

# அடக்கம்.

---

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங் காமை ஆரிருள் உய்த்து விடும்" என்பது குறள். அடக்க முடைமை செவ்விதாகக் கருதப்படும். தேவலோகத்திற் கொணர்ந்து செலுத்தும்; அடக்க மின்மை நிறைந்த இரு ளில் இட்டு விடும். என்றால் அடக்க முடை மையை மக்கள் விரும்பா திருக்க முடியுமோ? அடக்க முடைமை என்பதற்கு எல்லோருக்கும் அஞ்சி யொடுங்கி யிருத்தல் என்பதும், பிறர் பால் அடங்கி இழிவு வாழ்க்கை வாழ்தலென்ப தும், அவை போன்ற பிறவும் பொருளன்று. அடக்கமுடைமையை இன்னோரன்ன பொருள் படக் கூறுவாரையும் ஈண்டு நாம் காண்கின் ரோம். ஒருவன் வீரமாக ஒழுகுவானுனல் இவன் அடக்க மிலானெனச் சிலர் அறைந்து விடுகி ரூர். சாதாரணமாக அடக்கம் என்பது பயந்த தன்மை என்ற பொருளிலேயே வழங்கப் படு கிறது. அது பெருந்தவறு. அடக்க முடைமைக் கும் அக்கூற்றுக்கும் சம்பந்தம் சிறிதுமில்லை.

"அடக்கமுடைமையாவது; மெய், மொழி, மனங்கள் தீ நெறிக்கட் செல்லாது அடங்குத லுடைமை" எனத் திருக்குறளுக்கு உரை விரித்த ஆசிரியர்பரிமேலழகர் உரைக்கின்றூர். அடக்க முடைமை என்ற அதிகாரத்தின் கீழ்

வள்ளுவனார் வகுத்த குறள்களும் அப்பொருள் களையே புகலுகின்றன. எனவே உளத்தா லும் உரையாலும் உடலாலும் தீயன செய்யா தடங்குதலே அடக்கமுடைமை என்பது கிடைக்கின்றது. இவ் அடக்கமுடைமை உல கெலாம் வளர்ந்திட வேண்டும்.

"காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம் அதனினூங் இல்லையுயிர்க்கு" "செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந் தாற்றினடங்கப் பெறின்" என்ற குறள்களின் பொருளைச் சிந் தனை செய்தல் வேண்டும். அடக்க முடைமை கொண்டு வாழ்வதால் விளக்கக் குறைவு ஏற் படுமென்று எண்ணுதல் அறியாமை. அடங்கி வாழ்ந்தால் நம்மை உலகம் அறியாது என்று சிலர் கருதுகிறார். இது தவறு என்பதை "நிலை யிற்றிரியா தடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது" என்ற வள்ளுவனார் மறை வலியுறுத்தும். நெறியினின்றும் நீங்காது அடங்கியவன் மலையைக் காட்டினும் பெரிய தோற்றத்தை யடைவா னாதலின் பெயர் விளங்க விரும்புவோரும் அடக்கம் உடைமை கொண்டே தீர்தல் வேண்டும்.

அடக்கமுடைமையால் மலையினும் பெரிய தோற்றம் பெற்றவர் பலருளர். இந்நாள் நம் கண்முன் உலவும் காந்தியடிகள் அடக்கமுடை மையால் மலையினும் மிக்க தோற்றம் பெற்ற வர்களே. காந்தியடிகளை அறியாதார் எவ் உல கத்திலேனும் உளரோ? எதனால் அடிகள் அவ்

வளவு விளக்கம் பெற்றார்கள்? அடக்க முடைமையினாலேயே; உடல் உரை உளம் மூன்றும் அடக்கிய தன்மையினாலேயே. மூன்றையும் அடக்கியவரே தீமையி னின்றும் நீங்கியவர். மூன்றையும் அடக்காவிடில் பிறவிப்பேறேது? குறள் அடக்கமுடைமை பத்துச் செய்யுளில் முதலைந்து செய்யுளில் பொதுவாக அடக்க முடைமைப் பற்றிக் கூறினார்.

அவ்வைந்தில் கடைசிப் பாட்டில் செல்வர்க்கு அடக்கம் இன்றிமையாதது என்பது கூறப்படுகிறது. அக்குறள் வருமாறு:- "எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளுஞ்செல்வர்க்கே செல்வந் தகைத்து" எனிவ்வாறு செல்வரை வேறுபடுத்திக் கூறினரென்றால் செல்வர்க்கு அடக்கம் வருதல் அருமை என்பது கருதியே. பெரும்பான்மையாக மக்களைத் தீ நெறிச் செலுத்துவது செல்வமே யாகும். அஃதில்லார் அனைவரும் அடக்கமுடையார் என்பது கருத்தன்று. எல்லாருள்ளும் அடங்காருளர். ஆனால் அடக்கம்பெறாது துணிந்துதீயன புரியத் தூண்டுவது பெரும்பாலும் செல்வமே யாகும். ஆதலாற்றான் வேறுபடுத்தி மற்றையோரைக் காட்டினும் செல்வர் அடக்கமுடைமையைக் கட்டாயம் கொள்ள வேண்டுமென்று கூறுவாராயினர். பணமிருந்தால் எதுவும் செய்யலாமெனப் பல மேதாவிகள் பகர்கின்றாரல்லவா? ஆதலாற்றான் அவரடங்குதல் மிகச் சிறப்பு என்று அறைந்தார் ஆசிரியர் திருவள்ளுவனார்.

அடக்க முடைமை அதிகாரத்தின் பின் ஐந்து பாக்களில் ஒரு பாவில் மெய்யடக்கமும் மற்றொரு பாவில் மனவடக்கமும் மூன்று பாக்களில் மொழி யடக்கமும் கூறப்பெற்றுள்ளன. மெய்யடக்கமாவது உடலடக்கம். அது முதலிற் கொள்ள வேண்டுவது. உடல் வாழ வன்றோ, மெய் வாய் கண் மூக்குச் செவி எனப் பெயர்பெற்ற ஐவாய வேட்கை அவாவினலன்றோ செய்வன தவிர்வன தெரியாமல் மக்கள் வினையாற்றி விடுகிறார். ஆகலின் ஐம்பொறிகளையும் அவற்றின் இச்சைபோல் செல்லவிடாமல் அடக்குதல் வேண்டும். அவற்றிற்கு ஆட்படாது மொழியையும் உளத்தையும் அடக்குதல் வேண்டும். "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து" என்னும் குறள் மெய்யடக்கம் கூறிற்று. "கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி அறம்பார்க்கும் ஆற்றினுழைந்து" என்னும் குறள் மன அடக்கம் நுதலிற்று. பொறிகளை அடக்கி நிறுத்திய வழி மனவடக்கமும் பெற்றே தீர்தல் வேண்டும். இன்றேல் மனம் தீயனவற்றை நாடிக் கொண்டே யிருக்கும். செயலுக்கு வராவிட்டாலும் மனத்தினால் தீயன எண்ணுதலும் தவறே யாகும். மனம் அடங்காவழித் தீய எண்ணம்போகாது. "சினமடக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனமடக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" என்றார் தாயுமானப் பெரியார். மனஞ்செயுங் கொடுமை

எண்ணி முடியாது; எழுதியாகாது. அதைப் பற்றிப் பல பெரியோர்கள் பலப்பல சாற்றி யிருக்கின்றார்கள். திருவருள் விளக்க வள்ளலா ரென்று பெயர் விளங்கிய அருட்பாக்கள் அருளிய இராமலிங்க அடிகள் செய்யுள் ஒன்றை ஈண்டுத் தருதும்.

"மனமான வொருசிறுவன் மதியான குருவையு மதித்திடா னின்னடிச்சீர் மகிழ்கல்வி கற்றிடான் சும்மாவிரான் காம மடுவினிடை வீழ்ந்து சுழல்வான், சினமான வெஞ்சுரத் துழலுவ னுலோபமாஞ் சிறுகுகையி னூடுபுகுவான் செறுமோக இருளிடைச் செல்குவான் மதமெனுஞ் செய்குன்றி லேறிவிழுவான், இனமான மாச்சர்ய வெங்குழியினுள்ளே இறங்குவான் சிறிதுமங்கோ என்சொல் கேளானெனது கைப்படான் மற்றிதற் கேழையே னென் செய்குவேன், தனநீடு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே தண் முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண் முகத் தெய்வ மணியே"

மனம்பற்றிப் பேரெழிற் புலவர் சுப்பிரமணிய பாரதியார் மொழிந்த ஒரு வீரப்பாட்டையும் கீழே வரைகின்றேன்.

பேயா உழலுஞ் சிறுமனமே
பேணாய் என் சொல் இன்று முதல்
நீயா ஒன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்
தாயாம் சக்தி தாளினிலும்
தருமம் எனயான் குறிப்பதிலும்
ஓயா தேநின் றுழைத்திடுதி
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்

மனத்தைப்பற்றிப் பலப்பல பெரியோரும் பலப்பல பகர்ந்திருக்கின்றார். அவ்வனைத்தை யும் ஈண்டுக்கூறல் சாலாது. அம்மம்ம! மனம் பொல்லாது. அது தன்னாட்சி செலுத்தவே பெரிதும் விழையும். அதனை அவ்வாறு அதன் போக்குப்படி விடுதல் ஆகாது. "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பது பழவுரை.

மொழியடக்கம்பற்றி வள்ளுவனார் மிக அழ காக மூன்று குறள்கள் அருளியிருக்கின்றார். அம்மூன்றையும் மூன்று பேரொளிதரும் நன் மணிகளென்று மொழியலாம்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

"ஒன்றானுந் தீச்சொற் பொருட்பயன்
உண்டாயின், நன்றாகா தாகி விடும்"

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

இவற்றின் பொருள் வெளிப்படையாக விளங்குமென்றே கருதுகிறேன்.

மொழியடக்கம், அதாவது நாவைக் காத் துப் பேசுதல் இன்றியமையாது கொள்ள வேண்டுவது. நாகாவாமையால் வரும் கேட்டை வள்ளுவனார் இம்முக்குறளும் நன்கு மொழியா நிற்கின்றன. நாவடக்கம் கொள்ளாமையால் ஒருவன் பயன் ஒன்றையும் அடையப்போவ தில்லை. நாவினின்றும் புன்சொல்—பிறரைத்

துன்புறுத்தும் சொல் பிறத்தலாகாது என்று ஒவ்வொருவரும் கருதுதல் வேண்டும். நாவடங்காது பேசுபவன் பல சந்தர்ப்பங்களில் பெருந்துன்பமடைவானென்பது ஒருதலை. சொற்பொறுமையால் இவ்வுலகில் ஒருவரோடொருவர் இட்டுக்கொள்ளும் பூசல்கள் எத்துணை பார்க்கிறோம். ஏன் இவ்வாறு நாவடங்காது வீண் துன்பங்களை இழைத்துக் கொள்தல் வேண்டும்?

ஆகலின் மெய்யடக்கமுடைமை, மொழியடக்கமுடைமை, மனவடக்க முடைமை ஆகிய மூன்றடக்கம் உடைமையும் இன்றியமையாது கொள்ளத் தக்க பொருள்கள். அடக்கமுடைமை சிறிதும் தவறுகாது. அடக்கமுடையாரை அறிவிலரென்றெண்ணிக் கடக்கக் கருதுவோர் உளராயின், அது அவர்கள் குற்றமேயன்றி அடக்கமுடையார் சிறிதும் தாழ்வடையார். "அடக்கம் அமரருள் ளுய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்ற அருங்குறளைத் திரும்பவும் ஒரு முறை நினைவு கூறுவோம்.

# அழுக்காறாமை

"அழுக்காறாமை" என்பது பொறாமை யின்மை எனப் பொருள்படும். அழுக்காறு பிறன் ஆக்கம் கண்டு பொறாதிருத்தல். அழுக்காறு அழுக்கறுத்தல் என்னும் இரண்டு சொற்களும் ஒரு பொருளனவே. இவ் அழுக்காறாமை, அதாவது பொறாமையின்மை மக்களாகப் பிறந்தார் இன்றியமையாது கொள்ள வேண்டுவது. இதுபற்றி "அழுக்காறாமை" என்னும் பெயரோடு தமிழ்ப் பேரற நூலாகிய வள்ளுவர் குறளில் ஒரு அதிகாரம் மிளிர்கின்றது.

ஒழுக்க நெறியாக அழுக்காறாமையைக் குறிக்கின்றார் வள்ளுவனார். பொறாமை கொள்ளும் ஒருவன் ஒழுக்கங் காத்தவனாகான் என்பது அப்பெரியார் கருத்து. "ஒழுக்காறாக் கொள்க ஒருவன் தன்னெஞ்சத் தழுக்காறி லாத இயல்பு" என்பது குறள். மேலும் "அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா வியன்ற தறம்" என்றபடி அழுக்காறாதிய நான்கும் நீங்கிய செயலே அறச் செயல்.

ஒருவன் அழுக்காறு கொள்வானானால் அவன் ஆற்றும் அறம் அறமாகாது. வள்ளுவரின் மருவ வேண்டிய இப் பொன்னுரைகளை மக்கள் ஒருவி விட்டார். இந்நாள் அழுக்காறு கொள்ளா மக்கள் அருமை! அருமை!!

கல்வியிற் பெரிய ஒருவனைக் கண்டு அதில் குறைந்தோன் அழுக்காறு கொள்கின்றான். செல்வத்திற் சிறந்தவனைக் கண்டு அதிற் குறைந்தோன் அழுக்காறு கொள்கின்றான். செல்வாக்குப் பெற்றவனைக் கண்டு அது பெறு தோன் அழுக்காறடைகின்றான். வனப்புடை யானைக் கண்டு அஃதிலாதோன் அழுக்கா றெய்துகின்றான். ஒரு தொழில் வல்லவனைக் கண்டு மற்றொரு தொழிலாளி அழுக்காறடை கின்றான். ஒரு வியாபாரியைக் கண்டு பிறி தோர் வியாபாரி அழுக்காறடைகின்றான். இங்ஙனமே உலகில் எல்லா மக்களும் தங்கள் உள்ளத்தை அழுக்காற்றின் நிலைக்களனாக்கிக் கொண்டிருக்கின்றனர். அறிஞருள்ளும் பலர் அழுக்காற்றை விட்டாரில்லர்; ஒருவன் ஆக்கங் கண்டால் பொறுக்கின்றாரில்லர்; ஒருவன் மேலோங்கி வருவானானால் அவனை மேலும் உயர்த்த வருபவரைக் காணவில்லை; அவனைத் தள்ளித் தான் ஏறிக்கொள்ளவே விரும்புகின் றனர். பொது மக்கட்கு ஊழியம் புரிவதாக வெளிவரும் மக்களிடை அழுக்காறில்லையோ? அவர்களிற் பலர் பெரிதும் அழுக்காறுடையா ராக விருக்கின்றனர். ஒரு இயக்கத்தில் சேர்ந் தவருள் ஒருவர் பெயர் விளக்கமாகிவிடக் கூடாதென்று மற்றவர் எண்ணுகின்றார். இங் ஙனமே எல்லோருங் கருதுகின்றார். அழுக்காறு தன் முழு ஆட்சியையும் இந்நாள் யாண்டும் செலுத்தி வருகிறது. அதற் கடிமைபட்டுவிட் டார் மக்கள். அழுக்காறு கடந்தவரென்று

மதிக்கப்படும் சிலரும் அவர்களிடத்து அணுகிப் பார்க்குங்கால் அதனை நிறைய உடையவர்களாகவே காண்கின்றனர். அம்மம்ம! என்னே அழுக்காறு செய்யுங் கொடுமை!

அழுக்காறுடைவோர் முன்னேறுதல் அருமை. அவர் பிறவிப் பயனை யடையமாட்டார். அதனாற்றான் அழுக்காறு கேட்டைத் தருவது என்றருளினர் வள்ளுவர் பெருமான். அழுக்காறு, பலப்பல தீமைகளை நல்கும்; அறிவை யழித்துவிடும்; திறமையைத் தேய்த்து விடும்; வாய்மையை மடித்துவிடும்; அறத்தை அகற்றிவிடும்; பொருளைப் போக்கிவிடும்; இன்பத்தை எரித்துவிடும்; வீட்டை விலக்கிவிடும்; இதுபற்றித் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் கூறிய ஆணித்தரமான குறள்கள் வருமாறு:—

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற் றுத் தீயுழி யுய்த்து விடும்"

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்ய வள் தவ்வையைக் காட்டி விடும்"

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்"

"அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார் வழுக்கியுங் கேடீன் பது"

"அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம் பேணாதழுக்கறுப் பான்"

இக் குறள்களைக் காட்டினும் வேறு என்ன கூறுதல் வேண்டும்? இதற்கு மேல் என்ன

தான் கூறமுடியும்? அந்தோ! இத்துணைக் கேட்டை நல்கும் அழுக்காற்றை ஏன் செய்து மக்கள் அழிகின்றனர்! "அழுக்காற்றைச் செய்து பெரியாராயினருமில்லை; அதனைச் செய்யாது பெருமை குறைந்தாருமில்லை" என்னும் பொருள்படக் கூறும், "அழுக்கற் றகன்றாருமில்லை யஃதிலார் பெருக்கத்திற் றீர்ந்தாருமில்" என்னும் குறளை யுணர்ந்தவருமா அழுக்காறு செய்தழிதல் வேண்டும்? படிப்பு வேறு; செயல் வேறாகத்தானே இருக்கிறது. கற்றபடி யொழுக எல்லோரும் முந்தின் உலகில் மறங்குறைந்து தேய்ந்து விடுமன்றோ? கல்வி கல்லாரைக் காட்டினும் கற்றவர் எந்தத் தீயவற்றையும் விட்டவராகக் காணவில்லை. புத்தகங்களில் படிக்கின்றனர். ஆனால் செய்கையிற் சிறிதும் இல்லை.

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழி யுய்த்துவிடும்"

என்ற குறளைப் படித்தோரில் அழுக்காற்றை விட்டவர் எத்துணைபேர்? மற்றவரைக் காட்டினும் கற்றாரே அழுக்காற்றை மிகுதியுங் கொண்டவராக விருக்கின்றனர். கல்வி கல்லாரிற் கற்றும் அறிவில்லார் கடையரன்றோ? எதுவும் செய்கைக்கு வந்தாலன்றிப் பயனேது? செய்கையில்லாது எல்லாவற்றையும் அறிந்துகொண்ட ஒருவனுக்கும் குங்குமஞ் சுமந்த கழுதைக்கும் வேற்றுமையுளதோ? அவனுக்கும் பொருள்காக்கும் பேய்க்கும்

வேறுபாடேது? கழுதை குங்கும மூட்டைகளைச் சுமந்து செல்கிறது! அவ்வுயர்ந்த பொருளின் தன்மையை அது அறிகின்றதோ? பேய் பொருளைக் காக்கின்றது; அதன் பயனை அது அடைய முடியுமோ? மனிதன் பல நூல்களை அறிந்து கொண்டிருக்கிறான். அதன்படியொழுகாவிட்டால் அவன் பயின்றதால் ஆம்பயனென்? கற்றபடி யொழுகுவோரே மேலோர். அறநூல்களை நன்கு கற்றல் வேண்டும். அதன்படி நடத்தல் வேண்டும். அங்ஙனமானல் அழுக்காறு முதலிய பாவிகள் வந்து அணுகமாட்டார்கள். நறுங் குணங்களும் பல செல்வங்களும் படைத்திருந்தும் அழுக்காற்றினல் அழிந்தார் எண்ணற்றார் உளர். அழுக்காறெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழியுய்த்தற்குச் சான்றாக நம் நாட்டிடைப் பல காதைகள் உள. துரியோதனன் என்ற விழுமிய செல்வம் படைத்த வணங்காமுடி மன்னனைப் பாரத நாட்டார் நன்றாக அறிவர். அவனுடைய பெருந் திருவும் பேரரசும் எதனல் அழிந்தன? அழுக்காற்றினலல்லவா? பாரதம் படிக்கும் அன்பர்கட்கு இதனை விளக்கி நான் பகரவும்வேண்டுமோ? தொடக்கம்முதல் பாண்டவர் ஆக்கம் கண்டு பொறாத துரியோதனன் வாழ்வு துறந்து போர்க்களம் பட்டான்; அழுக்காறறியா அறத்தின் மகன், அவனியைத் தனியாண்டு அழியாப் புகழ் படைத்தான்.

"கொல்லராக் கொடியோன் கொடுந் தொழிற் கூட்டங் கூடியே குலவியுங் கொடை

யால் நல்லிசை யடைந்த அங்கர்கோன்" பாண்டவர்பால் அழுக்காற்றைப் பெரிதும் கொண்டுறைந்தான். ஆதலினால் பெரு வள்ளன்மை வாய்ந்த அவன் "கொடையுடைக் கொடிய பாவி" "புறஞ் சுவர்க்கோலஞ் செய்வான்" என்று அழைக்கப்படுகிறான். பொறாமையினால் அழிந்தோரைப்பற்றி நமது நூல்கள் கூறுவனவற்றையெல்லாம் ஈண்டுக் கொணர்ந்தால் மிக விரிந்துவிடும். பொறாமையினால் அழிந்தவர்க்குச் சான்று துரியோதனன் ஒருவனே சாலுமே. வணங்கா முடி மன்னன்—வேந்தர் வேந்தன்—பெருஞ் செல்வம் படைத்தோன்—பெருநிலம் ஆண்டோன்-தானைக்கடற்பெருக்கு உடையோன், ஆன அவனை அழித்தது அழுக்காறு என்றால் அழுக்காற்றின் வன்மை அறையுந் தரத்ததோ? எனவே அவனியில் நல் வாழ்க்கை வாழ்ந்து புகழ்பெற்றுப் பிறவிப் பயன் அடைய விழை அறிஞர்கள் திருச்செற்றுத் தீயுழியுய்க்கும் கொடிய அழுக்காற்றைக் கொள்ளாதிருப்பாராக!

ஒருவன் ஆக்கங்கண்டு அழுக்காறு ஏன் கொள்தல் வேண்டும்? தான் உயர வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருக்கலாம். அது கட்டாயம் இருக்க வேண்டுவது. முன்னேற்றமடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனும் தனது வளர்ச்சியில் நாட்டஞ் செலுத்த வேண்டுவதே. தனது வளர்ச்சியாவதென்ன? உலக வாழ்வின் பொருட்டுத் தன் உளத்தைப்

பண்படுத்திக் கொண்டு போதலேயாகும். மற்றவர் தன்னினும் உயர்ந்த நிலையிலிருந்தால் அதைக்கண்டு பொறாமை கொள்தல் தனக்கே கேடு பயப்பதாகும். அவர் போல் ஆக முயலலாம். அவர் வளர்ச்சிக்குத் தடை செய்தல் தகாச் செயல். ஒருவரின் உயர்ந்த நேர்மை கண்டு அவர் செயலைப்பற்றி அவர்போல் ஆக முயற்சித்தல் அறச் செயல். அவர் உயர்ந்த தன்மைக்குப் பொறாமைப்பட்டால் அவர் உயர்வை எவ்வாறு வீழ்த்தலாம் என்ற எண்ணமே உள்ளத்தில் குடிகொண்டிருக்கும். அவ்வெண்ணமுள்ள மனத்தில் நல்லன வளராது; அது தேய, தீயன பெரிதும் உளத்தை ஆட்படுத்திவிடும். பிறகு அவன் செய்யும் வினையெல்லாம் கெடுவினையாகவே யிருக்கும். "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற மூதுரைப்படி கேடு நினைப்பவன் கெட்டுக்கொண்டே வருவான். உயர்ந்த தன்மையாளனை மற்றவனால் ஒன்றுஞ் செய்ய முடிவதில்லை. இவன் பொறாமையால் அவன் ஆக்கம் வளருமன்றித் தேயாது. இதை நாம் இன்றும் கண் கூடாகக் கண்டு வருகிறோம். அழுக்காறுடையார் அழிந்து கொண்டுதான் வருகிறார்; அஃதிலார் வளர்ந்து கொண்டுதான் வருகிறார். இவ் உணர்வும் அவர்கட்குத் தோன்றுவதில்லை. மேலும் மேலும் அழுக்காறுடையார் கேடு சூழ்தலையே மேற்கொள்ளுகின்றார். அக்கேடு தம்மையே சூழ்வதை மக்கள் உணர்கின்றாரில்லை. முன்னைய அறவுரைகளையும் பண்டு அழுக்காறு

கொண்டு அழிந்தவரையும் மறந்துவிட்ட போதினும் தமது நடை முறையின் பயனைக் கண்டேனும் அழுக்காறுடையார் அதனை யொழித்து உயரலாகாதா? அழுக்காறுடை யானுக்கு ஆக்கமில்லை யென்பதை வள்ளுவனார், பலப்பல இடத்தில் வலியுறுத்துகின்றார். ஒழுக்கத்தைக்கூற வந்தவிடத்து இதனைச் சான்றாகக் காட்டுகின்றார்.

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன் றில்லை ஒழுக்க மிலான்கண் உயர்வு" எனவே ஆக்கம் பெற விரும்புவோர் அழுக்கா றாமை கொள்வாராக!

"விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்.

# அஞ்சாமை

அச்சமென்பது பயம். அஞ்சாமை அதன் எதிர்மறை. இதற்குப் பயப்படாமை என்பது பொருள். "இவ் அஞ்சாமை கொள்ளத் தக்கதா? இதனல் என்ன பயன்?" என்று ஆராயலாம்.

இவ்வுலகில் மானமுள்ள வாழ்க்கை வாழ விரும்பும் மக்கள், அஞ்சாமையை ஆபரணமாகப் பூண்டாலன்றி அமையாது. அஞ்சாமை பூணும் மக்களாற்றான் ஒல்லுமாறு அறம் வளர்க்க முடியும். மறம் வளர்க்கவும் அஞ்சாமை உதவும், ஆதலின் அஞ்சாமை வேண்டாமென்று கூறல் ஆமோ? அது தவறு. மக்கள் உயிர் வாழ்வதற்குப் பெருந் துணைக் காரணமாகிய தீ, மக்கட்குப்பெருந் துன்பத்தையும் தரக் காண்கின்றோமல்லவா? அங்ஙனமே வாழ்க்கைக்கு இன்றியமையாத நீர், காற்று முதலியன மக்களை அழிப்பதையும் காணவில்லையோ? ஆதலின் அத் தீ, நீர், காற்று ஆகியவற்றை மக்கள் விலக்குகின்றனரோ? இவையின்றி இமைப்பொழுதேனும் வாழ முடியுமா? இவைகள் அழிவிற்குங் காரணமாக விருப்பதால் இவை கூடாவென நீக்கினல் நீக்கிய கணமே இறந்து படுவதைத் தவிர வேறென்? இப்பொருள்களை மக்கள் இடைவிடாது கைக்கொண்டொழுகுகின்றனரன்றோ? இவ்வாறே அஞ்சாமையும் கொள்ளத்தக்கது. ஒருவனை

மறம்புரியத் தூண்டுவது அஞ்சாமை என்று கூறிவிட முடியாது. அவனுடைய தீய உளம் தூண்டுகிறது. தீயஉளத்தன் அஞ்சாமை பெற்றிருப்பானுனல் அஞ்சாது மறஞ் செய்வான். நல்லுளத்தன் அஞ்சாமை பெற்றிருப்பானுனல் அஞ்சாது அறஞ் செய்வான். எனவே, இவ் வஞ்சாமை எவன் பால் அணுகினும் அவன் செயல் வளரும். ஆதலின் அஞ்சாமை பெருதிருப்பானுனல் அவன் உளம் தீயதாயினும் அஞ்சி அத் தீமை புரியா தொழிவான் என்பது கொண்டு அஞ்சாமை தள்ளத் தக்கது என்று கூறுதல் தவறு. உளம் எவனுக்கும் தீயதாக விருத்தல் ஆகாது. உளம் அவ்வாறிருக்குமானுல் செயல் எப்பொழுதேனும் வந்துவிடும். அவ் உளத்தைப் போக்க முயல வேண்டும். அது வேறு பொருள். தீய உளம் பெற்றவன் ஒருவனும் இவ்வுலகில் இருத்தல் ஆகாதென்பதன்ருே பெரியோர் கொள்கை.

எல்லோரும் நன்மனம் பெற்றிருத்தல் வேண்டும். அவர் அஞ்சாமையை அணியாகப் பூண்டிருத்தல் வேண்டும். நல்லவர் பலர் இவ்வுலகில் அச்சத்தால் பீடிக்கப்பட்டுக் கடன் மறந்து கிடக்கிருர். அவருள் அறிஞரும் பல்லோர் இருக்கக் காண்கின்ருேம். உலகப் பொருள்களையும் உலகப் போக்கையும் நன்ருக அறிந்திருக்கின்ருர்; தாம் செய்யவேண்டிய கடமையையும் உணர்ந் திருக்கின்ருர். ஆனுல் மனத் தொடு பெருந்தத் தாங் கொண்டிருக்கும் உண்

மைக் கொள்கைவழி கடைப்பிடித்து வருகின்றாரில்லை. இதற்கு என்ன காரணம் என ஆராயுங்கால் அச்சமென்றே கிடைக்கின்றது. அவ்வன்பரும் இதனை ஏற்றுக்கொள்கின்றார். அது கூடாது. கடனை உணர்ந்தும், அச்சத்தால், நல்லறமாகிய கடனிறுக்கத் தவறுவோர் எத்துணை அறிவு படைத்திருந்த போழ்தினும் அறியாமை யுடையவர்களென்றே அஞ்சாது கூற வேண்டியிருக்கிறது. ஏன்? அஞ்சாமை கூற வந்த நான் அஞ்சாமை கூறுமிடத்திலேயே உண்மை கூற அஞ்சுதல் ஆகாதன்றோ? அஞ்சாமையை அணியாகப் பூணுவோரே உண்மையான அறிவு கைவரப் பெற்றவர் என்பதை நடு நிலையோடு ஆராயும் எவரும் மறுக்க மாட்டார் அஞ்சுவதேன்? எதற்காக அஞ்சுதல் வேண்டும்? அஞ்சியாவதென்? அஞ்சுவதால் விளையும் நலனென்? உயிர் அழிவற்றது; உடல் அழிவுள்ளது. அழிவற்றதையெவராலும் அழிக்க முடியாது; அழிவுள்ளதை எவராலும் காக்க முடியாது. உறற்பால யார்க்கும் உறும். மரணத்திற்கு மேல் ஒருவனுக்கு என்ன வரும்? அதுவே வரட்டுமே! ஏன் அஞ்சுதல் வேண்டும்? அஞ்சுவதால் அதைத் தடுக்கமுடியுமோ? அது வந்துதான் தீர்கிறது. மாளா மனிதரைக் கண்டோமில்லை. எண்ணற்றோர் பிறக்கின்றார்; இறக்கின்றார். அஞ்சாமை கொண்டாரும் இறந்தே போகின்றார்; அச்சங் கொண்டாரும் மாண்டழிகின்றார். மரணம் எல்லோர்க்கும் நிச்சயம். அங்ஙனமாக, ஏன் அஞ்சாமை பொருந்தும் நல்

வாழ்க்கை வாழ்ந்து மாள்தல் ஆகாது? பேடி வாழ்க்கை வாழ்பவனும் முடிவில் மாண்டே போகிறான். வீர வாழ்க்கை வாழ்பவனும் அங்ஙனமே ஆகின்றான். அவ்வாறாக, அந்தோ! எதன் பொருட்டு மக்கள் அச்ச வாழ்க்கை-பேடி வாழ்க்கை வாழ்கின்றனர்? இதனை எண்ணும்பொழுது எனக்குப் பெரு வருத்தமாக விருக்கின்றது. எவ்வறி விருந்தும் என் பயன்? இம் மெய்யறிவன்றோ வேண்டும். இம் மெய்யறிவை நன்மக்கள் பெற்றால் இன்றே அறச் செல்வி வையகத்தில் தனிப்பெருந் தாண்டவம் புரிவாளன்றோ?

ஆ! ஹா!! விரைவில் அழிவுறும் உடல் வாழ்வை நம்பியன்றோ மக்கள்உண்மை ஓராது அச்ச வாழ்க்கை வாழத் தொடங்கி விட்டனர். மக்களாய்ப் பிறந்தோர் கடன் உலகில் உள்ள மறங் களைந்து அறம் வளர்ப்பான், தொண்டு புரிதலன்றோ? அத்தொண்டின் இடையே தடுப்பவர் பொருட்டு அச்சங்கொள்தல் ஆகுமோ? அவ்வாறு கொண்டால் கடன் எங்ஙனம் நிறைவேறும்? எதற்கும் அஞ்சாது பண்டு கடனிறுத்த நமது முன்னோர்கள் காதை நாம் கடனாற்ற நமக்குச் சான்றாக விருக்கின்றதன்றோ? நாம் அதனையும் மறக்கலாமா? எத்துணையோ பல ஆண்டுகட்கு முன்னர் உயிர் வாழ்ந்த பலரைப்பற்றி நாம் இன்று பேசிப் புகழ்கின்றோம். அது எதனால்? அவர்கள் அஞ்சாமை கொண்டு தங்கடனிறுத்ததனாலன்றோ? அச்சங்கொண்டு

கடன் மறந்து வாழ்ந்து மாண்ட பல்லோர் நினைவு நமக்கு வருகிறதோ? இல்லையே. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்களைக்கூட நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களை நினைக்கும்படி நம்மைத் தூண்டுவது எது? அவர்வீரவாழ்க்கை- அஞ்சாமைவாழ்க்கையன்றோ? அவர்கள் உடல் போயினும் புகழ் போகவில்லை. அது இவ்வுலக முள்ளளவும் மதி இரவி உள்ளளவும் அழியாது. இராமபிரான் என்றொரு வீரன் வாழ்ந்தான் இப்பெரு நாட்டில் என்பதை நாம் அறிவோம். அவன் எத்துணை ஆண்டுகட்கு முன்னிருந்தவன்! அப்பெரியோனைப்பற்றி நாம் இன்னும் பேசுகின்றோம்; அவன் சரித்திரத்தை நாம் படிக்கின்றோம்! வீரர்கட்குச் சரிதம் எழுதி வைப்பது அவ்வாறு அனைவரும் வாழவேண்டு மென்பதற்காகவல்லவா? இராமன் எவ்வாறு வாழ்ந்தான்? அவனுக்கு அச்சமென்பது கனவினும் உண்டோ? அவன் கடமையின் பொருட்டுத் துய்த்த துன்பங்கள்கொஞ்சமோ? சக்ரவர்த்தி திருமகனாகிய அவன், தன்னிலும்சிறிய இரண்டு பேரோடு கடுங்கானில் தனிவாழ்ந்தானன்றோ? அவனச்சங் கொண்டிருப்பனேல் புகழ் பெற்றிருக்க முடியுமோ?

அருச்சுனனைப்பற்றி - வீமனைப்பற்றி நன்றாக அறிகிறோம். பாரதம் இராமாயணம் எல்லோருக்கும் தெரியுமாதலின் இவற்றைக் குறிப்பிடுகிறேன். இன்னும் அஞ்சாமை தாங்

கிய வீரர்கள் எண்ணற்றார் சரிதங்கள் உலகில் இலங்குகின்றன. எல்லாவற்றையும் காட்டுதல் முடியாது.

அப்பர் சுவாமிகள் இருந்தார்கள். அவர் அஞ்சா நெஞ்சுடை வீரரன்றோ? அவர் காதையில்-அப்பெரியார் பாக்களில் அஞ்சாமை வழிந்தோடுகின்றது. அவர் படைகொண்டவரல்லர்; அஞ்சா உளங்கொண்டவரே, அஞ்சாமைக்குப் படை வேண்டாம்; பலமான உடல் வேண்டாம்; வலிய உளமே வேண்டும். அப்பெரியார், திருப்பாட்டுக்கள் அவர் அஞ்சாமையை உணர்த்தும். திருநாவுக்கரசடிகளின் "நாமார்க்குங் குடியல்லோம்" ஆதி பாக்களின் பொருளை நன்றாக உளத்தில் பதித்து வைத்துக் கொள்தல் வேண்டும். அஞ்சாமைக்கு இற்றைக்குச் சில்லாண்டு முன்னர் உடல்நீத்த தமிழருங் கவியாகிய பாரதியார் பாடிய சிலவற்றைக் கீழே தருகிறேன்:

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
துச்சமாக வெண்ணிநம்மைத் தூறுசெய்தபோதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
பிச்சைவாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட [போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
இச்சை கொண்ட பொருளெலா மிழந்து விட்ட போதி [னும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
நச்சை வாயி லேகொணர்ந்து நண்பரூட்டுபோதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே,
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே,

*இவைகளின் பொருளைச் சிந்தித்துப் பார்க்க! அஞ்சாமை வாழ்க்கையே நல்ல வாழ்க்கை.*

*கேவலம் தள்ளத்தக்க அச்சத்தை அணியாய்ப்பூண்டு, மானமற்ற வாழ்க்கை வாழ்வதினும் இன்றே இறந்து படுதல் நன்று.*

“மானம் படவரின் வாழாமை முன்னினிது” அன்றோ?
“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்”
“இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு”
“மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை
பெருந்தகைமை, பீடழிய வந்த விடத்து”
“ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின்
அந்நிலையே, கெட்டா னெனப்படுதல் நன்று”

*என்பன போன்ற வள்ளுவனார் வாய்மொழியை மக்கள் மறத்தலாகாது. அச்சமேலீட்டினாலேயே மக்கள் மானத்தை இழக்கின்றனர்; பிற எல்லாவற்றையும் இழக்கின்றனர். இது தவறு! தவறு!! பெருந்தவறு!!!*

"மலை' மிசைத் தோன்றும் மதியம்போல் யானைத் தலைமிசைக் கொண்ட குடையர்—நில மிசைத், துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப் பட்டாரல்லால், எஞ்சினார் இவ்வுலகத் தில்"

இறந்து என்றேனும் படுவது திண்ணம் என்பது மறுக்க முடியா ஒன்று. இது எல் லோரும் அறிந்ததே. எனினும் மக்கள் நடை முறையில் இதனை மறந்து விடுகின்றார். இதனை மறவாது எண்ணிக் காரியங்களை ஆற்றுதல் வேண்டும். மக்கள் முதலில் கையாள வேண் டுவது மானம். அதன்பொருட்டு இந்நிலையிலா உடலைவிடச் சிறிதும் அஞ்சுதல் ஆகாது.

★

# ஒழுக்கம்

ஒழுக்கம் என்பதற்கு ஒழுகுதல், அதாவது நடத்தல் என்பது பொருள். ஒழுக்கம் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என இருவகைப்படும். நல்வழியில் ஒழுகுதல் நல்லொழுக்கம்; தீவழியில் ஒழுகுதல் தீயொழுக்கம். நல்லொழுக்கம் கொள்ளத்தக்கது; தீயொழுக்கம் தள்ளத்தக்கது. ஒழுக்கம் என்ற சொல் இரண்டொழுக்கத்திற்கும் பொதுச் சொல்லே. எனினும் சிறப்பாக ஒழுக்கம் என்னும் மொழி நல்லொழுக்கத்தையே குறிக்கின்றது. ஒழுக்கமுடையவன் என்று நல்லொழுக்கமுடையானைக் கூறுவது மரபாக விருக்கின்றதன்றித் தீயொழுக்கமுடையானைக் கூறக் காண்கின்றோமில்லை. இது பண்டைக் காலந்தொட்ட ஓர் மரபு. பண்டுதொட்டு நல்லொழுக்கத்தையே ஒழுக்கமென்று நூல்கள் நுவலும். திருக்குறளில் ஒழுக்கமென்ற சொல் நல்லொழுக்கத்கத்தையே குறித்துப் பயின்று வருகின்றது. "ஒழுக்கமுடைமை" என்னும் அதிகாரத்தின் பத்துப் பாக்களில் ஒன்பது பாக்கள், நல்லொழுக்கத்தை ஒழுக்கமென்ற பொதுச் சொல்லாலேயே புகல்கின்றது. ஒரு பாவில் மட்டும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்ற இரண்டு சொற்களும் பெய்யப்பட்டிருக்கின்றன. அதிகாரத்தின் பெயரும் "ஒழுக்க

முடைமை" என்று பொது மொழியாலேயே வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிறபல சொற்களும் பொதுச் சொற்களாக விருந்து சிறப்பாக ஒவ்வொன்றை உணர்த்தக் காண லாம். ஒழுக்கமென்பது நல்லொழுக்கமே என்பதை வற்புறுத்த வள்ளுவனார் குறளில் நல்லொழுக்க மின்மையைக் கூறவந்த அதி காரத்திற்குக் "கூடா ஒழுக்கம்" எனப் பெயர் தரப்பட்டிருக்கிறது. எனவே ஒழுக்கம் என் பது நல்லொழுக்கமே என்பது தேற்றம்.

"இவ்வொழுக்கத்தை வள்ளுவனாரும் பிற அறிஞரும் எவ்வாறு ஓம்பியிருக்கின்றார்? இந் நாள் உலகில் மக்களால் ஒழுக்கம் யாங்ஙனம் காக்கப் பெறுகிறது?" என்பனவற்றை நோக் குவோம். இவ்வுலகில் எல்லாவற்றையும்விடச் சிறந்ததாக மக்கள் உயிரையே மதிப்பதை யாரே யறியார்? உயிரினும் பெரிதெனப் பிற வற்றை மதிப்போர் அருமை. உயிரைத் துச்ச மெனத்தள்ளி அதனிலும் உயர்ந்ததாகவேறு சில பொருள்களை மதிப்பவரே அறவோர். நமது வள்ளுவனார் "ஒழுக்கம் விழுப்பந் தர லால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என் றார். ஆதலால் உயிரினுஞ் சிறந்தது ஒழுக்க மெனக் கொண்டவர் வள்ளுவர் பெருமான் என்பது கிடைக்கின்றது. பிற நல்லறம் வகுத்த பெரியார்களும் ஒழுக்கத்தை இவ் வாறே கூறிப் போந்திருக்கின்றார்.

மக்களாகப் பிறந்தார் சிறப்படைவது ஒழுக்கத்தினாலேயே என்பது தொன்றுதொட்

டுக் கண்ட உண்மை. ஒழுக்கமிலாரை உலகம் மதிக்காது. மக்கள் பிற எந்நலனை யடைந் திருந்தபோதினும் ஒழுக்க நலன் பெறுவிட் டால் அவர்கள் உயர்ந்தோரால் மதிக்கப்பெற மாட்டார்கள். எல்லா அறத்தையும் செவ்வி தின் நடாத்திச்செல்லக் காரணமாகிய ஒழுக்க அறம்பற்றுதார் ஆற்றும் பிற செயல்கள் யாவும் வீணையாகும். ஒழுக்கமில்லார் அறங் களை நிலை பொறுத்துதல் அரிது. "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என் றும் இடும்பைதரும்" என்றுர் திருவள்ளுவர். "நல்லொழுக்கமாக ஒழுகிச் செல்தல், அறம் என்ற பயிருக்கு இடும் வித்து; தீயொழுக்கம் என்றும் துன்பத்தைத் தரும்" என்பது இப் பாவின் நேர் பொருள். மறைமுகமாக இப் பாட்டுப் பல கருத்துக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. நல்லொழுக்கம் அறத் திற்கு வித்தாகுமென்றுல் தீயொழுக்கம் மறத் திற்கு வித்தாகுமென்பதும், தீ யொழுக்கம் என்றும் துன்பந்தருமென்றுல் நல்லொழுக்கம் என்றும் இன்பந்தருமென்பதும் நன்கு அறி யக் கிடக்கின்றதன்றே? மேலும் "தீயொழுக் கம் என்றும் துன்பந்தரும்; ஒருநாளும் அது இன்பம் தராது. நல்லொழுக்கம் என்றும் இன்பந்தரும்; அது துன்பமே தராது." என் றும் இக்குறட்பாவில் கொள்ளக்கிடக்கின்றது.

ஒழுக்கமிலானுக்கு உயர்வில்லை யென்ற உண்மையை "அழுக்காறுடையான்கண் ஆக்

கம்போன் றில்லை ஒழுக்க மிலான்கண் உயர்வு" என்ற அருங்குறள் வலியுறுத்தும். அழுக்காறு என்பது பிறன் ஆக்கம் கண்டு பொறாமை. ஆக்கம் என்பது செல்வம். "அழுக்காறு கொண்டவனிடம் செல்வம் தங்காது; அதுபோல ஒழுக்கமிலானிடம் உயர்வு தங்காது" என்பது இக் குறட்கருத்து. இது முற்றும் உண்மை. ஆனல் இவ்வுலகில் இக் குறட் கருத்துக்கு மாறாக நடப்பதைச் சிலர் எடுத்துக் காட்ட முன்வரலாம். அழுக்காறு கொண்டவர்களுள் ஆக்கம் பெற்றோர் பலரிருக்கின்றனரென்று பகரலாம். ஒருவாறு இஃதுண்மையே. அழுக்காறுடையாரில் பொருள் படைத்தார் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனல் அப்பொருளின் பயனை அவர்கள் சிறிதும் அடையமாட்டார்கள். பொருள்பெற்ற பயன் நன்மனத்தொடு அறம் புரிதலன்றோ? நல்லுளம் பெற்று அறம் புரியாதார் ஆக்கம் பெற்றதால் அடையும் பயனென்? பயன்தரா ஒன்று இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றே. ஆக்கத்தால் ஆய பயன் அடையாது வாழும் செல்வர் என்போருக்கும் பொருள் காத்த பூதத்திற்கும் வேறுபாடென்ன? அழுக்காறென்ற பாபிக்கு உளத்தை இருக்கையாக அளித்தோர்க்கு அறத்தைக் குடிவைக்க உளம் கிடையாதன்றோ? எனவே. ஆக்கத்தின் பயன்தராத ஆக்கமுண்மை அஃதின்மைக்கு நிகரென்றெண்ணியே வள்ளுவனர் இவ்வாறு வகுத்தார்.

அவ்விய நெஞ்சத்தார் ஆக்கத்தை ஏன் பெறுகிறார்? என்று கேட்கலாம். அவர்கட்கும் வள்ளுவர் விடையிறுத்திருக்கின்றார். "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்" என்றார். அவ்விய நெஞ்சத்தை யுடையவன் ஆக்கம் பெற்றிருக்கிறானென்றாவது செவ்விய தன்மையுடையவன் கேடுற்றிருக்கிறானென்றாவது இருக்குமானால், அதுபற்றி ஆராய வேண்டுவதுதான் என்பது இதன் பொருள். ஆராய்வது எதனை?- அவன் பழவினையை. அவன் முன் பிறப்பின் பயனினால் இந்நிலையடைந்தா னென்பதே கருத்து. இது மறுக்க முடியாத தொன்று. இப்பிறப்பில் பொறாமை கொள்வானானால் வரும் பிறப்பில் அதன் பயனை நுகர்வானென்பது திண்ணம். மேலும் வள்ளுவனார் "அழுக்காறு கொண்டு பெரியாரானாருமில்லை. அது செய்யாது பெருக்கக் குறைவு கொண்டாருமில்லை" என்னும் பொருள்பட "அழுக்கற்றகன்றாருமில்லை அஃதிலார் பெருக்கத்திற் றீந்தாருமில்" என்றும் பேசி யிருக்கின்றார். எனவே எந்தப் பொருளினும் எவரேனும் செயலுக்கு மாறுபட்ட நிலையுற் றிருப்பாரானால் அது பண்டை வினையின் பயனே என்ற உண்மையை உணர்தல் வேண்டும். அன்றி அத்தீவினையால் அவர் அந்நிலை யுற்றாரென்று கொள்தல் அறிவுடமையன்று. ஒழுக்கம் என்ற இக்கட்டுரையில் அழுக்காறாமையைப் பெரிதும் பேசிவிட்டே னதலின் எடுத்துக் கொண்ட

பொருளை விடுத்து வேறு பொருளில் புகுந்து விட்டதாக எவரும் கருத வேண்டுவதின்று. ஒழுக்கத்திற்கு உயர்வு கூறவந்த புலவர் பெருமான் அழுக்காற்றுக்கு ஆக்கமில்லையென்று சான்று காட்டி அதை மெய்ப்பித்ததற்காக இத்துணை கூறப்பட்டது. அன்றியும் ஒழுக்கமுடைமைக்கு அழுக்காறாமை இன்றியமையாததாதலின் அதுகொண்டும் அழுக்காறாமை ஈண்டுக் கூறும் நேர்மை வாய்ந்ததேயாகும்.

இதுபோலவே ஒழுக்கமிலாரும் பிற கருதிச் சில பலரால் மதிக்கப் படுகின்றனரே யென்ற வினாவும் எழலாம். இதற்கும் முற்கூறிய கொள்கை ஓர் சமாதானமாகும். அன்றி ஒழுக்கமிலார் உயர்ந்தோரால் ஒரு நாளும் மதிக்கப்பட மாட்டாரென்பது உறுதி. "ஒழுக்கத்தினெய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி" என்றவாறு ஒழுக்கத்திற்கே மேன்மையும் இழுக்கத்திற்கே பெரும்பழியும் இயல்பு. மக்கள் கொள்ளவேண்டியவற்றுள் எல்லாம் தலையாயது ஒழுக்கம். ஒழுக்கமின்றிய வாழ்வு பிணவாழ்வேயாகும். குலத்தினால் உயர்வு தாழ்வு கூறுதல் அறியாமை. ஒழுக்கத்தினால் உயர்வு உண்டேயன்றிப் பிறப்பினால் உயர்வு இல்லை. "ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்பது குறள். "சால ஒழுக்கம் உயர்குலத்தினன்று" என்றார் பிறரும். "பரிந்தோம்பிக்காக்க ஒழுக்

கந் தெரிந் தோம்பித் தேரினும் அஃதே துணை"
என்றாங்கு துருவித் துருவியாயினும் இன்றி
யமையாது கொள்ளத்தக்கது ஒழுக்கமே யாத
லின் அதனை வருந்திக் காத்தல் வேண்டும்.

இந்நாள் ஒல்லுமாறு ஒழுக்கங் காப்பார் அரியராக விருக்கின்றனர். முன்னர்க் குறித்தவாறு ஒழுக்கம் என்பது நன்னெறியே ஒழுகிச் செல்தலேயாகும். ஒழுக்கமென்பது பிறனில் விழையாதிருத்தல் ஒன்றுமட்டுமல்ல; அல்லது வேசையில்லம் செல்லாதிருத்தல் மட்டுமல்ல. ஒழுக்கத்திற்கு முக்கியமாய்த் தள்ளத் தக்கவை இவை. ஆனாலும் இவைமட்டும் என்று கொள்தல் தவறு. இப்பொழுது இச்செயலுள்ளாரைத்தான் ஒழுக்கமில்லாரெனக் குறிப்பது வழக்கமாக விருக்கின்றது. வேசியில்லம் விழையும் ஒருவரைப் பார்த்துப் பொய் பேசும் ஒருவர் ஒழுக்கமில்லாதவரென உரைக்கின்றார். தன் செயல் ஒழுக்கமில்லாததே என்ற நினைவு அவருக்கு இருப்பதே யில்லை. பிறனில் விழைதல் வேசை வீடு தேடி ஓடியலைதல் ஒழுக்கமின்மையில் தலையாயன என்பதிற் றடை சிறிதும் இல்லை. ஆனால் பொய்பேசுதல் ஒழுக்கமுடைமையோ? ஒழுக்கமுடைமைக்குப் புறம்பான செயல்—ஒழுக்கமின்மையாகிய செயல், பலப் பல உள. அவற்றை மக்கள் நன்கு உணர்ந்து ஒழுக்கமின்மையைத் தள்ளி ஒழுக்கமுண்மையைக் கொள்தல்வேண்டும். அழுக்காறு கொள்தல், இன்னாசெய்தல்; கள்ளுண்டல், களவுசெய்

தல், கொலை செய்தல், சிற்றினஞ் சேர்தல், சூதாடல், செய்ந்நன்றி கொல்தல், புறங்கூறு தல், பெரியார்ப் பிழைத்தல்; பொய் புகல்தல் முதலியன ஒழுக்கமின்மையின்பாற் பட்டவை களே யாகும். ஒழுக்கங் காத்தல் என்பது இன் ஞோரன்ன ஒன்றையும் ஆற்ருதொழுகுதலே யாகும். ஒழுக்கமின்மையாகிய மேற்குறித்த ஒவ்வொன்றிலுள்ள தீமைகளையும் எடுத்துரைப் பதாயின் ஒவ்வொன்றையும் தனித்தனிக் கட் டுரையாக எழுதினலன்றி அமையாது. அத் துணைத்தீமை நல்கத்தக்கன அவைகள், ஒழுக் கம் என்னும் உயர்வுபெற விரும்பும் மக்கள் ஒழுக்கமின்மை யாகிய இன்ன செயல்களைக் கனவிலும் கருதாது அறத்தாற்றின் ஒழுகு வாராக?

# வகுப்பு

---

வகுப்பு என்ற சொல்லுக்குப் பிரிக்கப்படுவது என்பது பொருள். பிரிக்கப்படுவது எது எது உண்டோ அவ்வனைத்தும் வகுப்பு என்று பெயர் பெறும். இவ்வாறு பிரிக்கப்பட்டது பலப்பல. மயிரை வகிர்ந்து கொள்வதை வகுப்பு என்று வழுத்தக் கேட்கின்ரோம். ஒன்ருக இணைந்திருக்கும் மயிரை இருபிரிவாகப் பிரிப்பதையே வகுப்பு என்று வழுத்துகின்ரோம். பிரிக்கப்பட்டது என்ற பொருளிலேயே இது வகுப்பு என்று பேசப்படுகிறது.

பள்ளியில் பிள்ளைகளைப் படிப்புக்கொண்டு பிரிப்பதை வருப்பு என்று உரைக்கின்ரோம். இதுவும் பிரிக்கப்படுவதினுலேயே வகுப்பு என்ற பெயர் பெறுகிறது.

வகுப்பு என்று இங்கு எடுத்துக்கொண்டது ஜாதி பற்றியே யாகும். இந்த ஜாதி, வகுப்பு என்னும் பெயர் பெற்றமையினுலேயே இது பிரிக்கப்பட்டது என்பது கிடைக்கின்றது. பிரிக்கப்பட்டது என்ருல் யாரால் பிரிக்கப்பட்டது என்ற வினு எழலாம். ஒரு சாரார் கூட்டுறவு கருதி மக்களாலேயே பிரிக்கப்பட்டதென்று உரைப்பர். பிறிதோர் கூட்டத்தார் கடவுளால் பிரிக்கப்பட்டது எனக் கழறுவர்.

இன்னொரு குழுவினர் இது பிரிக்கப்பட்டதே யல்ல; படைப்புக் காலத்திலேயே இறைவனால் படைக்கப்பட்டது ஜாதி என இயம்புவர். இவர் கூற்று ஏற்கும் தரத்ததன்று. வகுப்பு என்ற பெயருண்மை இக் கூற்றை மறுக்கும். வகுப்பு வகுக்கப்பட்டதே என்பதில் தடையில்லை.

கடவுள் படைப்புக் காலத்திலேயே வகுப்பு வகுத்தார் என்று கூறுதல் பொருத்தமின்று. படைப்புக் காலமென்று தனியே ஒரு காலமில்லை. கடவுள் எப்படி அநாதியோ அது போல உலகமும் அநாதி. ஆன்மாக்களும் அநாதியே. உலகத்தைக் கடவுள் படைக்க வில்லை. ஆன்மாக்களையும் அவர் படைக்க வில்லை. உலகமும் ஆன்மாக்களும் தோற்ற மும் அழிவும் இல்லாதன. இவற்றைக் கடவுள் உண்டாக்கினார் என்றல் ஓர் உபசாரமான மரபேயன்றி உண்மையன்று. ஆனால் இவற் றைக் கடவுள் படைத்தாரென்றே நாம் கழறு கின்றோம். இதை ஒரு மரபாக வைத்துக் கொண்டிருக்கிறோம். சான்றாக ஒன்று கூறு வேன். வேதங்களை எடுத்துக் கொள்வோம். வேதங்கள் அநாதி என்று ஒரு பிரிவார் பேசு வர்; அவை இறையால் இயம்பப்பட்டன என ஒரு பகுதியார் பகர்வர்; அவை அறிஞர்களால் ஆக்கப்பட்டன என ஒரு கூட்டத்தார் கூறு வர். அது எவ்வாறாயினும் ஆக. அச்சங்கை ஈண்டு வேண்டாம். வேதங்கள் அனைத்தை யும் வியாசர் என்பார் விளம்பினார் என்று கூற

முடியாது. ஆனால் வேதங்களை வியாசர் மொழிந்தார் என்று கூறப்படுகிறது. இதனால் பலர் கொள்கையும் அடிபட்டுவிடும். வியாசர் சிதைந்துகிடந்த வேதங்களைத் திரட்டி இருக்காதி நான்காக வகுத்தார். "இருக்காதி மறை மொழிந்தோன்" என்று வியாசரைக் கூறுதல் உபசாரமேயாம். சிதைந்து கிடந்ததைத் தொகுத்து விளக்கியமையினாலேயே அவர் அவ்வாறு கூறப்பட்டார். அவ்வாறே ஆன்மாக்களை இயக்கும் சக்தியாகிய கடவுளே அவற்றை உண்டாக்கினார் என்று கூறும் மரபு தவறுடைத்தன்று.

ஆன்மாக்களை இறைவன் படைத்தானென்றும் படைக்கும்பொழுதே இன்னின்னார் இன்ன வகுப்பெனப் படைத்தானென்றும் கூறுதல் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. கடவுள் நடுநிலை வாய்ந்தவர் என்று உலகில் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். நடுநிலை வாய்ந்த கடவுள், தாமே புதிதாக உயிர்களைப் படைப்பதானால், தாம் படைத்த உயிர்களுள் ஒன்றை உயர்வுள்ளதாகவும் மற்றொன்றைத் தாழ்வுள்ளதாகவும், ஒன்றைச் செல்வம் பெற்றதாகவும் இன்னொன்றை வறுமையுற்றதாகவும் இன்ன வேறுபாடு பலதோன்ற ஆக்குவரோ? ஆன்மாக்களை யெல்லாம் கடவுள் படைத்தார் என்று கொண்டால் கடவுள் நடுநிலை தவறியவர் என்று ஏற்படும். எனவே ஆன்மாக்களைக் கடவுள் படைக்கவில்லை என்பது உறுதி.

நமது சமயம் கடவுளைப்போல உயிர்களும் நித்தியம் என்றே உரைக்கின்றது. உயிர்கள் எவ்வளவு நாட்களுக்கு முன் உண்டாயினவென உரைக்க முடியாது. உலகம் என்று முதல் இருக்கின்றதோ—கடவுள் என்று முதல் இருக்கின்றரோ, அன்றுமுதல் உயிர்களும் இருக்கின்றன. உலகம் என்று உண்டானது என்றும் கடவுள் என்று தோன்றினர் என்றும் கூறமுடியாது. உலகமும் தோற்றமில்லாதது. கடவுளும் தோற்றமில்லாதவர். அதுபோல உயிர்களும் தோற்றமில்லாதன. தோற்றமில்லையென்றால் என்றும் உளது என்பது பொருள். தோற்றமில்லாததற்கு அழிவுமில்லை. சில கணிதநூல் வல்லுனர் உலகம் இவ்வளவு நாட்களுக்கு முன்பு தோன்றியது எனக் கணிக்கின்றார். சில பஞ்சாங்கங்களில் உலகம் தோன்றி நூற்றைம்பதே கோடியும் சில்லறை ஆண்டுகள் ஆயினவெனப் பொறிக்கப்பட்டுள. இக்கூற்று அங்கீகரிக்கத் தக்கதன்று.

உயிர்கள் வினைக்கேற்பப் பிறவி பெறுகின்றன. முன் பிறப்புக்களில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ற உடலையும் நிலையையும் உயிர்கள் அடைகின்றன. இவ் உண்மை ஓர்ந்தாலன்றிக் கடவுளுக்கு நடுநிலை கூறமுடியாது. மறு பிறப்பு இல்லையென்று இயம்புகின்ற மதங்கள் இங்கு அடிபட்டு வீழ்ந்துவிடும். மறு பிறப்பு நிச்சயமாக உண்டு. பழைய உயிர்களே புத்துடல் பெற்றுப் பிறக்கின்றன. புதி

தாக உயிர்களை உண்டாக்க எவராலும் முடியாது. உயிர்களை ஆக்கவும் அழிக்கவும் யாராலும் ஆகா. தொன்றுதொட்டு உயிர்கள் அளவையில் ஒரே படித்தாகவே இருந்திருக்க முடியும். ஆனல் உலகத்தில் ஒரு காலத்தில் மக்கட்தொகை குறைவாகவும் இன்னொரு காலத்தில் அவர் எண் மிகுதியாகவும் இருக்கக் காண்கின்றோமே என்று கேட்கலாம். அஃதுண்மை. மக்கட் பிறப்பெய்தியோர் மக்கட் பிறப்பே யெய்துவதென்பதும் பிற உயிர்கள் அவ்வப் பிறப்பே எய்துவதென்பதும் இயல்பன்று. பிறப்புக்கள் வினைக்கேற்ப மாறிவரும். ஆன்மாக்களில் வேறுபாடு கிடையா. மக்கட் பகுப்பினர் அதிகமாகவிருந்தால் அதற்கேற்றபடியாக மாக்களோ தாவரங்களோ குறைவாகவிருக்கும். அவர் குறைவாயின் இவை ஈடு செய்யும். உயிர்களின் அளவை ஒன்றுகவே இருக்க முடியும். உயிர்களுள் மாக்கள் உயிரென்றும், மக்கள் உயிரென்றும், தாவரங்களின் உயிரென்றும் தனித்தனியே கிடையா. பிறவிகள்தோறும் ஓருயிர் மற்ருெரு உடலிலே புகல் மரபு.

ஆகவே படைப்புக்காலமென்ருென்று கிடையாது. அது கிடையாதாகவே கடவுள் படைப்புக் காலத்தில் ஜாதி வகுத்தார் என்ற கொள்கை பொருளற்றதாகி விடுகிறது. ஜாதி என்று இப்பொழுது கூறப்படுவது உடலைப் பற்றியதாக விருக்கின்றது. இது தவறுடைக்

கொள்கை. ஆன்மாக்களுள் ஜாதி பேதம் கிடையா. ஆன்மாக்களுள் பிராமணனென்றும் பிறன் என்றும் இல்லை. ஆன்மாக்களுள் ஆண் பெண் என்ற வேறுபாடுகூட இல்லை. எந்த உயிரும் எந்த உடலையும் எய்தும். வகுப்பு, கூட்டுறவு கருதி, தொழில்பற்றியும் பிறபற்றியும் மக்களால் பிரிக்கப்பட்டதேயன்றி வேறன்று. கூர்ந்து நோக்குழி வகுப்புப் பிரிவுக்கு இதைத் தவிர வேறு பொருள் கிடையாது. எல்லாமக்களும் எல்லாத் தொழிலும் செய்வதென்பது இயலாத காரியம். எனவே ஒரு தொழிலை ஒரு சாரரர் செய்து வந்தனர். அவ்வாறு தொழில்செய்த முறைபற்றி அவர் அன்ன வகுப்பு இவர் இன்ன வகுப்பு என்று இயம்பப்பட்டார். தொழில்பற்றியே வகுப்புப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன வென்பதற்குச் சில சான்று காட்டுவதுண்டு. தச்சர் என்று ஒரு வகுப்பைக் கூறுகின்றோம். "தச்தச்" என்று இழைக்கின்றமையால் அவர் தச்சர் என்ற பெயர் பெற்றார். தட்டார் என்று ஒரு பிரிவாரைச் சாற்றுகின்றோம். அவர் தங்கத்தைத் தட்டுதல் உடைமையினலேயே அப்பெயர் பெற்றார். கொல்லர் என்றால் இரும்பைக் கொல்லுகின்றவர் என்பது பொருள். இப்படியே இன்னும் பலவகுப்புக்களையும் ஊகிக்க இடமுண்டு. குணந் தொழில்பற்றியே வகுப்புப் பிரிக்கப்பட்டதாகக் கீதையில் கண்ணபிரான் கூறியதாகவும் படிக்கின்றோம். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்

தொழில் வேற்றுமையால்" என்று நமது பெரியாரும் பேசினர். பிறப்பினாலே வகுப்பு என்பது கிடையாது. பிறப்பிலே உயிர்கள் அனைத்தும் ஒக்கும். வேறுபாடெல்லாம் சிறப்பிலேதான்.

ஒவ்வொருவரும் பிறக்கும் பொழுதே வகுப்பு வகுப்பாகப் பிரிந்து பிறக்கவில்லை. தொழில் பற்றித்தான் ஒருகாலத்தில் வகுப்பாக வகுக்கப் பெற்றார்கள். அந்நாள் வகுப்பு வகுத்தவர் நன்னோக்கங் கொண்டே வகுத்திருத்தல் வேண்டும். இந்நாள் அதுவிபரீதமாக வந்துவிட்டது. ஒருகாலத்தில் அறமாக வகுக்கப்பட்ட ஒன்று நாளடைவில் மறமாக மாறுவது இயல்பு. பிறகு அது சீர்திருத்தப்படல் வேண்டும். சீர் திருத்தக்காரர்க்கு இவ்வுலகில் ஒருநாளும் ஓய்வு கிடையாது. இவ்வுலகம் உள்ளளவும் சீர்திருத்தம் நடந்துகொண்டே இருக்கவேண்டுவதே. ஒருகாலத்தில் சீர்திருத்தியது அப்படியே நிலைத்திருப்பது உண்மையானல் பிறகு நாட்டில் பெரியவருக்கு வேலையில்லை. ஒவ்வொன்றும் முன்னே எத்துணையோ பெரியோரால் சீர்திருத்தப் பெற்றதாகவே இருக்கும். நாளாக நாளாகத் திரும்பவும் அது சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய நிலையை அடையும். ஒரு அறத்தைத் திருத்தி யமைத்துவிட்டால் இனி அது செவ்வனே நடந்தேறும் என்று எண்ணியிருத்தற்கு இல்லை. அதனை என்றும் கண்காணித்தே வரல்வேண்டும். நாளடைவில் அவ்

அறத்தில் நேரும் மாற்றங்களை யெல்லாம் புதுக்கிக்கொண்டே வரல் வேண்டும்.

இந்நாள் வகுப்பு, சிறிதும் பொருளற்ற முறையில் கொள்ளப்பட்டு வருகிறது. இது புதுக்கப்படல் வேண்டும். அவ்வுண்மையை மக்கள் நன்ருக உணரவேண்டும். வகுப்பு வகுக்கப்பட்டது—அதாவது ஜாதி பிரிக்கப்பட்டது இன்ன காரணங்கொண்டு என்பதை மக்கள் அறியவில்லை. ஒருவனுக்குப் பிறந்தவன் அவ்வகுப்பு என்றே கொள்ளப்படுவது மரபாகிவிட்டது. அவன் செய்யும் தொழில் என்ன என்பது நோக்கப்படவில்லை. பிறப்புப்பற்றியே வகுப்புப் பேசப்படுகிறது. வகுப்புப் பிரிக்கப்பட்டதன் நோக்கத்திற்கும் இந்நாள் கொள்ளப்படும் வகுப்பிற்கும் சம்பந்தம் சிறிதும் இல்லை.

வகுப்பு வகுத்த காலத்தில் நான்கு பெரும் பிரிவாக வகுக்கப்பட்டதாக அறிகிருேம். நான்கு பிரிவையும் வடநூலார் பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என வழுத்துவர். நமது தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனச் சொல்லினர். இவ்வாருக நான்கு வகுப்பே தொடக்கத்தில் வகுத்தார்கள். இப்பொழுது இத்துணை வகுப்புக்கள் என்று எண்ணிச் சொல்ல முடியா நிலையில் அத்துணை வகுப்புக்களிருக்கின்றன. என்ருலும் இந்நான்குக்குள் எல்லாவற்றையும் பொருத்தி அடக்கிவிடலாம்.

நான்குக்குமேல் ஐந்தாவது வகுப்பு இல்லை. இழிந்த காரியங்களைச் செய்தோரெல்லாம் அந் நான்கு வகுப்புக்களிலும் சேர்த்துக்கொள்ளப் படாமல் ஒதுக்கப் பட்டார். அவர் வழிவழி வந்தோர் இன்று தாழ்ந்த வகுப்பாரெனச் சாற்றப்பெறுகிறார்கள்.

பழைய நாள் வகுப்பு வகுக்குங்கால் இந் நாள் அறியாமையால் வகுப்புக்களைக் கொள் வதுபோலல்லாமல் பொருளோடுதான் வகுத் தார்கள். எந்தெந்தத் தொழிலை யார் யார் செய்தாரோ அவரவர் அத்தொழிலுக்குரிய வகுப்பெனச் சொல்லப்பட்டார். செந்தண்மை பூண்டு உலகிற்கு அறம் உரைத்தவரை யெல் லாம் அந்தணர் என ஒரு வகுப்பாக வகுத்தார். நாடாண்டவரை யெல்லாம் ஒரு வகுப்பாக்கி அரசனெனப் பெயர் தந்தார். பொருள் தேடு தலையே கடனாகக் கொண்டவரை ஒன்றாகக் கூட்டி வணிகர் என்றழைத்தார். ஏனைத் தொழில் செய்தோரையெல்லாம் வேளாளர் என விளம்பினார். இவருள் கடைப்பட்டு இழி தொழில் செய்தோர் ஐந்தாங் குலத்தவரென அறையப்பட்டார். இன்றும் அவருக்குள்ள பெயருண்மையே அதனை வலியுறுத்தும். புலை யர் என்றால் புலைத்தொழில்செய்கின்றவர் என் பதுபொருள். இழிதொழில்செய்து வருவோரே புலையர். தீண்டத் தகாதாரென இவர் செப்பப் பட்டார். அன்று இவர் தீண்டத் தகாதாராகக் கொள்ளப்பட்டதற்குப் பொருள் உண்டு. தீண்

டத்தக்க நிலையில் இவர் இல்லை. புலைத் தொழில் செய்து குடித்து வெறியாட்டாடும் உடல்மாசோடு கூடியவரைத் தீண்ட நல்லவர் நடுங்குவது மரபன்றோ!

இன்றும் அம்முறையில் வகுப்புக் கொள்ளப்படுமானால் ஏற்றுக் கொள்ளலாம். எவர் எத்தொழில் செய்கின்றாரோ அவர் அவ்வகுப்பைக் கொண்டால் பொருளுண்டு. அந்தணராவார் யார்? அறவோர். எதனால்? மற்றெவ் உயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான். எவரொருவர் தந்நலம் நாடாது, எதிர்கால வாழ்விற்குப் பொருள்தேடாது, உலகத்தின் பொருட்டாகவே தாம் வாழ்வதாகக் கருதி அறம்புரிந் துயர்கின்றாரோ அவரே அந்தணர். அவர் பிறப்பைப்பற்றி நோக்கவேண்டிய அவசியமே கிடையாது. அவ்வாறே நாடு புரக்கின்றவரெல்லாம் மன்னர்கள். வாணிபம் செய்கின்றவ ரெல்லாம் வணிகர்கள். வேளாண்மை புரிவோரெல்லாம் வேளாளர்கள் எவரெவர்க்கு எவ் எத்தொழிலில் அறிவும் ஆற்றலும் செல்கின்றனவோ அவ் அத்தொழிலை அவரவர் ஆற்றுவதில் தடையிருக்க வேண்டுவதில்லை. அவரவர் ஆற்றும் வினைக் கேற்ற வகுப்பை அவரவர் பெறுகின்றார். ஒரு வினை ஆற்றுவார் இன்னொரு வகுப்பின் பெயரால் அழைக்கப் பெறலாகாது. இவருள் எவரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் அல்லர்.

இம்முறையில் வகுப்புக்கொள்ளப் படுமானால் பொருள் உண்டு. இந்நாள் வகுப்பு

வகுப்பெனக் கூறுதற்குப் பொருள் இல்லை. தீண்டத் தகாதாரென்று கூறப்படுவோர் வகுப்பிற் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஒருவனைப் பிராமணன் என்று எவ்வாறு கொள்ளமுடியும்? எவரெவர் தீண்டத்தகாத நிலையில் இருக்கின்றாரோ அவரெல்லாம் தீண்டத்தகாத வகுப்பைச் சார்ந்தவர் என்று தள்ளிவிடுதல் ஒழுங்கு. சான்றாக ஒன்று காட்டுகிறேன். திருக்கோயில்களில் சுயம்பாகி என்ற ஒரு வகுப்பார் இருக்கின்றனர். அவர்களை நீங்கள் அறிந்தே இருப்பீர்கள். அவர்களுடைய உருவத்தையும் உடலில் வழியும் வியர்வையையும் தோளில் தொங்கும் அழுக்குத் துண்டையும் கண்ணால் கண்டவர் அவர்களைத் தீண்டக் கனவிலும் கருதுவரோ? அவரும் அவரனையாருமே தீண்டத்தகாதார். அந்நாள் இன்னோரன்ன தீண்டமுடியா நிலையிலிருந்தவரே தீண்டத்தகாதாரென ஒதுக்கப்பட்டாரன்றி வேறன்று.

இன்று தீண்டத்தகாதாரென யார் கருதப்பட்டிருக்கிறார்கள்? பிறப்பைப்பற்றி ஒரு பெருங்கூட்டத்தார். இது எவ்வளவுபேதைமை! ஒருவருக்குப் பிறந்தமையினாலே தீண்டத்தகாதாராக எப்படி ஆக முடியும். இந்நாள் தீண்டத்தகாதாரென ஒதுக்குங் கூட்டத்துள் அறவோர் உளர். வேறு வகுப்புக்களில் தீண்டத்தகாதாருளர் என்று செப்பவேண்டுவதின்று.

வகுப்புப் பிறப்புப்பற்றி என்பதை அறவே தொலைக்கவேண்டும். தொழில்பற்றி வகுக்கப்

பட்ட வகுப்பானது பிறப்புப்பற்றியதாக நீண்ட காலமாக நாளடைவில் மாறிவந்து விட்டது. வள்ளுவர் காலத்திற்கு முன்பே பிறப்புப்பற்றி வகுப்புப் பேசப்பட்டு வந்திருக்குமெனத் தெரிகிறது. அதனாலேயே அக்கொள்கையை அப்பெருமான் கண்டித்துள்ளார். அப்பொருளற்ற கொள்கையால் நாட்டில் பல பூசல்கள் விளைகின்றன. பன்னெடு நாட்பழகிய பழக்கத்தால் இது சட்டென்று விட்டகல்கின்றதில்லை. பிறப்புப்பற்றி வகுப்புக் கூடாதென்று கூறுவோருங்கூடப் பிறப்புப் பற்றி வகுப்புரிமை பாராட்டிக் கொள்வதை மறக்கின்றாரில்லை பழக்கத்தால். ஒவ்வொருவரும் நான் பெரிய வகுப்பு நீ சிறிய வகுப்பு எனச் சண்டையிட்டுக் கொள்கிறார். பறையர்களுள்ளும் பாகுபாடு பாராட்டி உயர்வு தாழ்வு கற்பிக்கிறார். குறவர் மற்றவர்க்கெல்லாம் தாழ்ந்தவரென்றும் பறையருக்கு உயர்ந்தவரென்றும் கூறிக்கொள்கிறார். குறவருக்கு வண்ணார் உயர்ந்தவரென்று வழுத்திக்கொள்கிறார். அவருக்கு இன்னொருவர் உயர்ந்தவரென்று இயம்புகிறார். ஒருவருக்கொருவர் பாகுபாடின்றி ஒத்த தன்மையோடு இத்தனைப் பல ஜாதிகளுள் இரண்டு ஜாதி கூட இரா போலும். எப்பொழுது பிறப்புப்பற்றி மற்றொருவரைத் தங்கட்குத் தாழ்ந்தவரெனச் சாற்றுகின்றனரோ அப்பொழுதே தாங்கள் இன்னொருவருக்குத் தாழ்ந்தவர் என நிச்சயமாக ஒப்புக்கொள்ள வேண்டியவர் ஆகிவிடுவார்.

எவருக்கும் எவரும் தாழ்ந்தவர் உயர்ந்தவர் அல்லர். எல்லோரும் பிறப்பினால் ஒத்தவர் என்ற உண்மை உணர்வு பெறவேண்டும்.

ஒரு கூட்டத்தார் தங்களைவிட உயர்ந்தவர்கள் என்று சாற்றிக்கொள்பவரோடு சண்டையிட்டு அவர்களைத் தங்களோடு சமமாக வரும்படி அழைக்கிறார். தங்களுக்குத் தாழ்ந்தவர்களாகத் தாங்கள் கருதுபவர்களைத் தங்களோடு சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. இது பெரிய மூடத்தனம். வேறு சில கூட்டத்தார் தாங்களும் பிராமணராகிவிட விரும்புகிறார். தங்கள் பெயருக்குப் பின்னே பிராமணர் என்று சேர்த்துக்கொள்கிறார். சௌராஷ்ட்ரப் பிராமணர் விஸ்வப் பிராமணர் அந்தப் பிராமணர் இந்தப் பிராமணர் என்று கூறிக் கொள்கிறார். எல்லோரும் இப்படிக் கூறிக் கொள்வதால் யாது பயன்? பிறப்புப்பற்றி வகுப்பு என்ற மாயையைக் கொல்வதற்கு இது வழியாகாது.

பிறப்பினாலே பிராமணரென்பார் உயர்வு என்ற எண்ணம் இவர்கள் உளத்தை விட்டகலவில்லை. அதனாலேயே அப்பெயரில் இவ்வளவு மோகங் கொண்டுள்ளார். பிராமணர் என்று தன்னை நினைத்துக்கொண்டிருப்பவர் தன்னைத் தான் உயர்வு என எண்ணிக் கொண்டிருத்தல் ஒரு வியப்பன்று. அவர் உயர்வென மற்றவருங் கருதுதலே முட்டாள்தனம். தான் உயர்வெனக் கருதிக் கொண்டிருக்கும் ஒருவரைக்

குறை கூறுதற்கு ஒன்றுமில்லை. மற்றவர் புத்தியோடு நடந்துகொண்டால் யாவும் ஒழுங்காக வந்துவிடும். பிறரை இகழவேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொருவரும் தத்தம் நீர்மையைத் தாங்கள் அறிந்து தக்கபடி நடந்து கொண்டால் உயர்வு தாழ்வு என்ற கொள்கை தானே பறந்துவிடும். எதற்கும் பிறரைக் குறை கூறுதல் நலமன்று. வகுப்பு, பிறப்பினுல் அல்ல என்பதை மக்கள் உணருமாறு செய்கையில் காட்டவேண்டும்.

வகுப்பு இன்று கொள்ளப்பெறும் நிலையில் இருக்குமானுல் அதற்குப் பொருள் சிறிதுமில்லை. இப்பொழுது வகுப்புக்களெல்லாம் செயலில் கலந்துவிட்டது. வெளியே மட்டும் வகுப்பு வகுப்பென்று பேசிக்கொள்ளப்படுகிறது. எல்லாத் தொழிலையும் எல்லோரும் செய்கின்ருர். பிறப்புக் கொண்டு வகுப்புப் பேசிக்கொள்கிருர். எத்துணை தலைமுறைக்கு முன்னர் அவ் வகுப்புக் குரிய தன்மை அவர் பரம்பரையை விட்டகன்றது என்பதை அறிய முடியா நிலைமையில் அவ் வகுப்புப் பெயரைச் சொல்லிக்கொள்வதை விட்டபாடில்லை.

பண்டை முறையில் கொள்வதானுல் இன்று ஒவ்வொருவரையும் தனித்தனியே பொறுக்கிப் புதிதாகச் சேர்க்கவேண்டியதாகவே உளது இன்றைய தினம் மக்கள் உடல் பெற்ருேரை யெல்லாம் மனிதர்கள் என்ற ஒரே அளவில் வைத்து இப்பொழுதிருக்கிற வகுப்பை மறந்து

அவரவர் தொழிலைப் பார்த்துப் புதிய வகுப்புக்கள் காண்டல் வேண்டும். சில பல ஆண்டுகள் சென்று திரும்பவும் இன்றைய நிலையையே உறும். அன்றி ஒருவர் அந்தணர்க்குரிய தொழில் பலவும் வணிகர்க்கோ மற்றவர்க்கோ உரியவுமான தொழில் பலவும் செய்தல் கூடும். அவரை எவ்வகுப்பிற் சேர்ப்பது? இன்னோரன்ன சங்கடங்கள் நேர்வதால் இவ்வகுப்பை ஓர் பெரும் பொருளாகக் கொள்ளவேண்டாம். அந்தந்தத் தொழில் ஆற்றுங்கால் அவ்வவ் வகுப்போடு சேர்ந்து கொள்ளட்டும். மணம் உணவு முதலியவற்றிற்கும் வகுப்புக்கும் சம்பந்தமில்லை.

இந்நாள் பொருளற்ற முறையில் வகுப்பைக் கொள்வதனால் ஏற்படும் பூசல்கட்கு ஓர் எல்லை இல்லை. எனவே வகுப்பின் நீர்மையை உள்ளவாறுணர்ந்து மெய்வழிபற்றினாலன்றி இப்பூசல்கள் ஒழியா. நமது நாடு இவ்வகுப்புப் பூசலால் பெரிதும் கெட்டுவருகிறது. ஒரு குலத்திற் பிறந்தமையினாலே அவர் தீண்டத்தகாதார் என ஒரு பெருங் கூட்டத்தார் ஒதுக்கப்படுதல் போன்ற அறியாமை வேறு என்னிருக்கிறது? அவரை ஆலயங்கட்குள் விடுவதில்லை யென்பது மூடத்தனமன்றோ? நமது ஹிந்துமக்கள் பெரிதும் மூட வழியிலேயே கிடந்துழல்கின்றார். உலகம் போற்றும் காந்தியடிகளையும் நுழைய விடாமல் தடுத்தார்கள் முன் ஒரு கோவிலில். காரணம் அப்பெருமான் கப்பலேறிக் கடல் கடந்து லண்டன் போய் வந்தமை.

காந்தியடிகளைத் தடுத்தார்களென்றால் மற்றவற்றைப்பற்றி வழுத்துவானேன்.

தீண்டத்தகாத நிலையிலுள்ளாரைக் கோவிலினுள் விடுவதில்லை யென்றால், அது பொருளோடு இருக்குமானால் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். தீண்டத்தகாத செயல்களை யார் யார் செய்கின்றாரோ அவரையெல்லாம் கோவிலுள் விடாதிர்கள்! அது முடியுமா? அப்படியானால் பார்ப்பார் என்று சொல்லிக்கொள்ளுவோருள்ளும் மற்றும் உயர்ந்த வகுப்பாரென்று சொல்லிக்கொள்ளுவோருள்ளும் பலர் கோவிலுள் நுழையத் தகுதியற்றாருளர். அவரெல்லாம் தாராளமாக நுழைய, பொருளின்றி ஒரு கூட்டத்தாரை ஏன் நிறுத்தல் வேண்டும். அவ் அநீதிகளெல்லாம் பார்ப்பார்தாம் செய்கின்றாரென்று பகருதல் தவறு. எல்லோரும் செய்கின்றார். திருச்செந்தூரில் வாணிய சகோதரர்களைக் கோவிலுக்குள் விடலாகாது என்று வாதாடியவர்களுள் பெரும்பாலார் திருநெல்வேலி ஜில்லா வேளாள நண்பர்களே யாவர். இன்னவற்றை யாரும் செய்தலாகாது. சிலர் தங்கட்கு மேலான வகுப்பு என்று தாங்கள் கருதிக் கொண்டிருப்பவரோடு தாம் கலக்க விரும்புகின்றனர்; தங்கட்குக் கீழானவர் என்று கருதிக்கொண்டிருப்பவரை அடக்கவே விரும்புகின்றனர். இவர் பெரிய பேதைகளே யாவர்.

உண்மையோடும் நடுநிலையோடும் இவ் வகுப்பு வேற்றுமையை ஒழிக்க அன்பர்கள்

தைரியமாக முன்வரவேண்டும். இந்நாள் நாட்டிலிருக்கும் வகுப்புச் சண்டைகளை ஒழிப்பதற்குப் பொருளற்ற வகுப்புப் பிரிவைத் தொலைத்தலே வழியாகும். எதினும் அச்சங் கொள்தல் ஆகாது. உளவலிகொண்டு முன் வரல் வேண்டும். இன்னோரன்ன காரியங்களில் தலையிடுவார், உயிரை எவரானும் அழிக்க இயலாதென்ற உண்மையை உணர்தல்வேண்டும். அன்பர்கள் இரண்டு பொருள்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். உடல் அழிவுள்ளது என்பது ஒன்று; உயிர் அழிவற்றது என்பது மற்றொன்று. அழிவில்லாததை எவரானும் அழிக்கமுடியாது. அழிவுள்ளதை என்றும் காத்து வைத்துக்கொள்ளவும் முடியாது. அழிவுள்ளது என்றேனும் அழிந்தே தீரும். அழிவில்லாதது என்றும் அழியாது. எனவே, அழிதன் மாலையவாய உடலைவிட அஞ்சவேண்டுவதே இல்லை. உடல் அழிவுள்ளது என்பதுபற்றி நீண்டு விளக்கவேண்டிய அவசியம் இல்லை. நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடையது இவ்வுலகு. "செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிச்சாப் பிணங்கள் கத்துக் கணக்கென்ன கண்டீர்" என்றார் பட்டினத்தடிகள். "செத்தாரைச் சாவார் சுமந்து என்றார்" நாலடியில். அன்றி இதற்குச் செய்யுட் சான்றே வேண்டுவதின்று. நாள்தோறும் நடைமுறையில் பார்க்கின்றோம், நின்றான் இருந்தான் கிடந்தான்

தன்கேளலறச் சென்ருன் எனப்படுதலே. எத் துணைக்காலம் இருப்பினும் முடிவில் இறப்பது சரதம். ஆதலால் உடலொன்றையே பேணி அதன்பொருட்டு அஞ்சி நல்லவற்றிற் றலைப் படாதிருத்தல் தகாது. இதனுல் உடலைப் பேண வேண்டாமென்று நான் கூறுவதாக எவரும் கொள்தல் ஆகாது. உடலின்றிய உயிர் ஒன் றும் செய்யமுடியாது. உடம்பைத் துணையாகக் கொண்டுதான் உயிர் இயங்க முடியும். அதனு லேயே "உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" என்ருர் திருமூலனர்.

நில்லாத உடலாசை கொண்டு அழியாத உயிர்க்குறுதி பயக்கும்வினைகளை ஆற்ருதொழி தல் ஆகாது என்பதற்காக இத்துணை கூறியது. நாட்டின் நலத்திற்கு இவ் வகுப்புப் பூசல் போன்றன பெருங்கேடு விளைக்கின்றன. இன் ஞோரன்னவற்றை மக்கள் அறியுமாறு உள்ள வாறுணர்த்த வேண்டுவது மிகவும் அவசியம். இப்பணியில் தலையிட வேண்டுமென்று எனது அன்பர்களையெல்லாம் வேண்டிக்கொள் கிறேன்.

# தீண்டத்தகாதார் யார்?

தீண்டத்தகாதார் யார் என்பதைப்பற்றி ஈண்டு ஆராயலாம். தீண்டத்தகாதார் எனப் பிறப்புப்பற்றி ஒரு பிரிவார் ஹிந்துக்களுள் பெரும்பாலாரால் ஒதுக்கப்படுகின்றனர். அது பிழையென்றும் பிறப்பினால் தீண்டத்தகாதார் உண்டு என்று உரைத்தல் பேதைமை என்றும் பேசும் கொள்கைகொண்ட ஒரு கூட்டத்தார் இந்நாள் நம் நாட்டில் பெருகிவருகின்றார். காந்தியடிகள் கோலிய ஒத்துழையாமைத் திட்டத்திலும் தீண்டாமை விலக்கு ஒரு முக்கிய மான உறுப்பாக அமைக்கப்பெற்றது. அத் தீண்டாமை விலக்கு என்பது பிறப்பினால் ஒரு பிரிவார் தீண்டத்தகாதாராகக் கொள்ளப் படும் பொருளற்ற காரியத்தை நிறுத்துதல் என்ற பொருள்கொண்டே தொடங்கப்பட்டது.

"தீண்டாமையை விலக்குதல் என்றால் தீண்டத்தகாதாராக யாருமே கொள்ளப்படக் கூடாதன்றோ? அங்ஙனமாக, 'தீண்டத்தகா தார் யார்?' என்ற வினா எழவேண்டுவதென்னை? தீண்டத்தகாதார் யார் என்ற வினாவிலிருந்தே தீண்டத்தகாதாரும் உளரென்று கிடைக்கின் றதே. இது தீண்டாமை விலக்கிற்கு முரா ணன்றோ?" என்று எவரும் வினவலாம். தீண் டத்தகாதார்எவரும் இல்லையென்பது என் கருத் தன்று. தீண்டத்தகாதார் உள்ர். தீண்டாமை

விலக்கு என்ற கொள்கை எனக்கு உடன்பாடல்லவென்று இது கொண்டு யாரும் கூறிவிட வேண்டாம். அக்கொள்கையை அதி தீவிரமாக வலியுறுத்துவோர் கூட்டத்துள் நானும் சேர்ந்தவனே. தீண்டாமை விலக்கு என்பதற்கு இப்பொழுது தீண்டத்தகாதாராகக் கொள்ளப்படும் மூடக்கொள்கையை விலக்கல் என்பதே பொருள். அதுவேயன்றித் தீண்டத்தகாத செயல்புரியும் ஒருவரை விலக்குவதில் என்னே பிழை.

இந்நாள் இந்து சமூகத்தினரால் தீண்டத் தகாதாராக யார் கொள்ளப்படுகிறார்? வழிவழியாக வரும் ஒரு கூட்டத்தார். பிறப்புப்பற்றி ஒரு வகையாரைத் தீண்டத் தகாதாராகக் கொள்ளப்படுவதற்கு என்ன நியாயம்? விவாத முறையில் அறிவு உலகம் ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு எவரும் இன்னோரன்ன மூட வழக்கங்கட்கு எவ்விதக் காரணங்களும் இயம்ப முடியாதென்பது உறுதி. ஒருவருக்குப் பிறந்த குற்றத்திற்காக, தீண்டத் தகாதவரென்றல் பெரும் பேதைமை. அக்கொள்கையுடையார் வாதங்கள் அறிவு வழியே செல்லா. அவர், சாத்திரங்கள் சாற்றுகின்றனவென்றும் பிறவும் கழறுவர். சாத்திரங்களைப் புரட்டினல் அவை பலப்பல சாற்றும், அவர் கொள்கையை மறுத்துத் தூக்கியெறிய அவர் கொள்ளும் அச்சாத்திரங்களுள் எண்ணற்ற சான்றுகள் உள. அக்குப்பைகள் கிடக்க. ஈண்டு அவற்றில் புகவேண்டாம்.

எல்லாக் கொள்கையையும் பலப் பலர் பல மாதிரி பகர்ந்திருப்பர். பிறர் துணைகொண்டே உயிர் வாழ்தல் என்றும் முடியாத காரியம். எவர் என்ன இயம்பியிருந்தால் என்ன? எல் லோரும் நம்போன்ற மனிதர்கள்தாம்? ஒவ் வொருவருக்கும் சொந்த அறிவுண்டு. "அவர் சொல்லியிருக்கிறார்; இவர் சொல்லியிருக் கிறார்" என்பதைக் காட்டிலும் "நான் சொல் லுகிறேன்; நீ காரணங்காட்டி முடிந்தால் மறு" என்று மொழிவதே சிறப்புடைத்து. கண் கூடாகக் காரணத்தோடு மறுக்க முடியவில்லை யானால் தப்பித்துக் கொள்வதற்காக அவரை யும் இவரையும் எடுத்தாண்டால் அதற்கு உடன்பட்டு யாரே கொள்கையை விடப் போகிறார்? அறிஞர் இப்பூச்சாண்டிகட்கெல் லாம் சிறிதும் அஞ்சப்போவதில்லை யென்ப தில் எனக்கு ஐயமில்லை.

"அநியாயமாக ஒரு பெரும் வகுப்பாரைத் நீண்டத்தகாதாரென ஏன் ஐயா ஒதுக்குகின் றீர்கள்?" என்றால் அதற்குக் காரணம் கூறு தல் வேண்டாவோ? காரணங் கூற அறியாது வீணாக ஒரு வகுப்பாரைத் நீண்டத்தகாதா ரென்று எவர் சாற்றுகின்றாரோ அவரே நீண் டத்தகாதாரென நாம் ஒதுக்கவேண்டும். "ஒரு காரணமுமின்றித் தொடக்கத்தில் இப்பெரும் வகுப்பார் நீண்டத்தகாதார் என ஒதுக்கப்பட் டிருப்பாரா?" என்று கேட்கலாம். காரணம் இல்லையென்று இயம்பமுடியாது. நானும் இல்

லையென்று செப்பவில்லை. காரணம் உண்டு. அதனைக் கண்டறியும் அறிவிழந்து இன்னும் இவ்வகுப்பாரையெல்லாம் பொருள் இன்றித் தீண்டத்தகாதார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் ஒரு பகுதியார். ஆராய்ச்சி உலகில் நுழைந்தால் இம்மூட எண்ணத்தை விட்டொழியாதிருக்க முடியாது.

ஜாதி என்பது பெரிய மாயையாக இந்தியாவை ஆட்டுகின்றது. ஜாதிகளின் உண்மையறியாமையாலேயே மக்கள் மயங்கி அழிகின்றார். இறைவன் என்ற ஒருவன் மக்களைப் படைக்கும்பொழுது, நீ இன்ன ஜாதி, நீ இன்ன ஜாதி எனப் படைத்தான் என்றல் எவ்வளவு அறியாமை! அவ்வாறுனல் மக்கட் ஜாதிக்குள்ளே இறைவன் தான் வேறுபடுத்திப் படைத்த ஒவ்வொரு பிரிவுக்கும் உருவத்தில் அடையாளங்கள் ஏதேனும் வைத்திருக்கின்றானே? பார்ப்பான் என்பவனுக்கு நான்கு கைகளும் அரசன் என்பவனுக்கு மூன்று கைகளும் வணிகன் என்பவனுக்கு இரண்டு கைகளும் வேளாளன் என்பவனுக்கு ஒரு கையும் தீண்டத்தகாதவன் என்பவனுக்குக் கையில்லாமலும் செய்தோ அன்றி வேறு எந்த வேறுபாடாவது தோன்றும்படியாகவோ படைக்கின்றானே?

பார்ப்பான் என்பவனுக்கும் பறையன் என்பவனுக்கும் மற்றையோனுக்கும் உருவத்தில் எவ்வித வேறுபாடும் காணவில்லை; உணர்ச்

சியிலும் எவ்வித வித்தியாசமும் இல்லை; செய லிலும் எந்த மாறுபாடும் இல்லை. மனிதர்கள் என்ற ஒரே நிலைமையைத் தவிர எந்த மாறு பாடும் காணப்படா நிலையில்—பலவேறு ஜாதி யென்று பகரப்படுவோருள்ளும் எல்லா வகை யான கூட்டுறவும் நிகழும் நிலையில், பிறப்பில் ஜாதியாகப் பிரித்து படைக்கப்பட்டது என்ற பெரும் பேதைமைக்கு என்னே பொருள்? எனவே தீண்டத்தகாதார் எனப் பிறப்பி லேயே எவரும் படைக்கப்படவில்லை. ஆனல் இன்று பிறப்பினல் ஒரு வகுப்பார் தீண்டத் தகாதார் என ஏன் கொள்ளப்படுகிறார்? மற்ற ஜாதிகள் கொள்ளப்படும் அறியாமைக் கொள் கைபோலவே தீண்டத்தகாதாரும் கொள்ளப் படுகிறார். இடைக்கால மக்கள் அறியாமை யால் நிகழ்ந்த கேடுகளுள் இதுவும் ஒன்று.

மக்கள் உயர்வு தாழ்வு எல்லாம் செயல் பற்றியேயன்றிப் பிற எதுபற்றியும் அன்று. தீண்டத்தகாத செயலை எவர் செய்கின்றாரோ அவர் அச்செயலைக் கையாளும் வரையும் தீண் டத்தகாதாரே யாவர். பண்டைநாள் தீண்டத் தகாத செயல் செய்தோர் அச்செயல் திருந்த வேண்டி உயர்ந்த மக்களால் தீண்டத்தகாதா ராக ஒதுக்கிவைக்கப்பட்டார். ஒரேமக்கட் குழு விலேயே ஒரு சிலர் இழிந்த செயல் செய்தால் அச்செயல் காரணமாக அவர் இழிவுபடுத்தப் படுவதென்பது ஒன்று இருக்குமானல் தவறிய அவர் நாணமுற்று அச்செயல்விடுத்து நல்வழிப்

படுதல்கூடும். இந்நல்நோக்கங் கொண்டே தொடக்கத்தில் தீண்டாமையும் பிறவும் கையாளப்பட்டிருத்தல் வேண்டும். அதனல் பலர் திருந்தி வந்திருத்தலுங் கூடும். அதற்கும் திருந்தாது அவ் இழிசெயலிலே நின்ருேர் ஆயுள் வரையும் தீண்டத் தகாதாராகவே இருந்து மாண்டுபட்டிருப்பர். அவர் வழிவழிவந்த அனைவரும் தீண்டத்தகாதார் என்று கொள்வது போன்ற அறியாமை என்னிருக்கிறது! நாளடைவில் அவர் பரம்பரையாரெல்லாம் தீண்டத் தகாதாராகக் கொள்ளப்பட்டு விட்டார். தகப்பன் யோக்கியனுனல் மகன் யோக்கியனென்றும் தகப்பன் அயோக்கியனுனல் மகனும் அவ்வாறே யென்றும் தீர்மானிக்க முடியுமா? உலகத்திய நடைமுறை அப்படி யிருக்கிறதோ? இது, தெரிந்துகொள்ளமுடியாத தேவலோகத்துச் செய்தியல்லவே! கண்ணுக்குத் தெரியும் நாம் வாழுகின்ற இப்பரந்த பேருலகில் ஒவ்வொருவரும் கண்கூடாகக் காணக்கூடிய ஒன்றன்ருே இது. இதற்குச் செய்யுட் சான்றும் சாத்திர மேற்கோளும் வேண்டாமே. வேறு முறையில் வேண்டுமானல் இதற்கு வாதிக்கலாம். அது எனக்குத் தெரியும். அவ்விவாதம் ஈண்டு வேண்டாம். அதன்முடிவும் என் கொள்கைக்குப் பெரிதும் துணைபுரிவது என்பதைப் பேரறிவுள்ளோர் ஆராயிற் காண்பர்.

ஒவ்வொருவனுக்கும் தனித்தனியே அறிவுண்டு; குணமுண்டு; செயல் செய்யும் ஆற்றல்

தனித்தனியே உண்டு. தகப்பன் நல்ல செயல் செய்திருக்க, தீய செயல்புரியும் மக்கள் உண்டு. தீச்செயல் செய்தோன் மக்களில் நல்லனவே புரிவோர் உளர். தகப்பனைக்கொண்டு மகனுக்குப் பெருமை கொடுப்பதானல் நல்லவன் கெட்டவனுகவும் கெட்டவன் நல்லவனுகவும் கொள்ளப்பட்டு விடுவான். பெருமையும் சிறுமையும் தன் செயலைப் பொறுத்ததன்றித் தகப்பன் செயலைப் பொறுத்ததன்று. எனவே பரம்பரை காரணமாக ஜாதி கொள்ளப்பட்டுத் தீண்டத்தகாதார் என வீணுக ஒரு பெருங் கூட்டத்தார் ஒதுக்கப்படுதற்குப் பொருள் சிறிதும் இல்லையென்று எத்துணைமுறை வேண்டுமாலும் அறுதியிட்டு நிரூபிக்க முடியும். நல்லறிவும் நடுவு நிலைமையும் உள்ளார் அம்மூடக் கொள்கையை அடியோடு வெறுப்பர் என்பதில் தடையில்லை. ஆகவே அம்முறையில் பிறப்புப்பற்றித் தீண்டத்தகாதாரில்லை; இல்லை; முக்காலும் இல்லை.

பின்னை, வேறுவகையில் தீண்டத்தகாதாருளரோ? உளர்; உளர்; செயல்பற்றித் தீண்டத்தகாதார் உளர். எவர் இழிந்தசெயல் செய்கின்றரோ அவர் தீண்டத்தகாதார். இந்நாள் தீண்டத் தகாதாரென்று ஒதுக்கப்படுவோர் பரம்பரை யிருந்த முன்னேரெனக் கொள்வோர் எவைபற்றித் தீண்டத் தகாதாராக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்க வேண்டும்? புன்புலால் உண்டமையாலும் பொய் புகன்றமை

யாலும் புறந்தூய்மையற்றுக் கிடந்தமையாலும் அன்ன பிற செய்தமையாலுமே அவர் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்றும் அவை புரிவோரைத் தீண்டத்தகாதாராக ஒதுக்கலாம். வேறு பல இழிந்த செயல் ஆற்றுவோரையும் தீண்டத் தகாதாராகக் கொள்ளலாம்.

தீண்டத்தகாதார் யார்? புலாலுண்போர் தீண்டத்தகாதார்! பொய் பேசுவோர் தீண்டத்தகாதார்! வஞ்சகம் செய்வோர் தீண்டத்தகாதார்! கொலை செய்வோர் தீண்டத்தகாதார்! கள்ளருந்துவோர் தீண்டத்தகாதார்! காமம் நுகர்வோர் தீண்டத்தகாதார்! வரம்பு கடந்த செயல் என்னென்ன உண்டோ அவை செய்வோர் அனைவரும் தீண்டத்தகாதார்! வாளா ஒரு பெருங் கூட்டத்தாரைத் தீண்டத் தகாதார் எனப் பொருளின்றிப் புகலும் தீயோர்கள் எல்லோரையும்விடக் கொடிய தீண்டத்தகாதார்!!

# மடமை.

மடமை என்பது அறியாமை எனப் பொருள்படும். மடமைக்கு வேறு பொருளு முண்டு. ஈண்டு அறியாமை என்னும் பொருளி லேயே மடமையைக் குறிக்கிறேன். அறி யாமை யுடையோரை இவ்வுலகில் மடயர் என அழைப்பதை அனைவரும் அறிவர். மடயர் என்ற சொல் சமையற்காரரையும் குறிக்கு மெனச் சிலர் செப்புவர். அது மடமையாற் கூறுவதேயாகும். சமையற்காரரை மடையர் என்ற சொல்தான் குறிக்கும். "மடயர்" என்ற சொல்லுக்கும் "மடையர்' என்றசொல் லுக்கும் வேறுபாடுண்டு. மடமை உடைமையி னலே முன்னையவர் மடயர் என்று வழுத்தப் படுகிறார். மடைத்தொழில் உடைமையினலே பின்னையவர் மடையர் என்று அழைக்கப்படு கிறார். முன்னையர் மடம் காரணமாகப் பெயர் பெற்றவர். பின்னையவர் மடை காரணமாகப் பெயர் பெற்றவர். மடை என்பதற்குச் சோறு என்பது பொருள். இரண்டுக்கும் சம்பந்த மில்லை. ஆனல் உச்சரிக்கும் பொழுது ஒலி ஏறக்குறைய ஒன்றுகத் தோன்றும். அது கொண்டு சொல்லாராய்ச்சி சிறிதும் இல்லாச் சிலேடைப் புலவர்கள் இரண்டையும் ஒன்றெ னக் கொள்வர். இதற்கு இவ்வளவு கூறிவிட் டேன் என்று யாரும் எண்ணமாட்டாரென நம்புகிறேன். மக்கள் தவறுக உணரத்தக்க

நிலையில் உள்ள ஒன்றைச் சமயம் நேர்ந்துழி இயம்புதல் கடனன்றோ?

இவ்வுலகில் மடமை, அதாவது அறியாமை கொண்ட மக்கள் மல்கியிருக்கக் காண்கின்றோம். கூர்ந்து நோக்கும்பொழுது குவலயத்தில் மடமையில்லார் யாண்டும் யாரும் இல்லையென்று இயம்பலாம். மிக மேதாவிகளும் ஏதேனும் ஒன்றில் அறியாமையுடையாராக விருப்பர். எல்லாம் அறிந்தவர் இறைவர் ஒருவரே. மற்றெல்லோரும் அறியாமையுடையவரே. ஆனால், அதில் வேறுபாடுண்டு. இன்றியமையாது அறிந்து தீரவேண்டிய பொருள்களை அறியாதாரும் அறிந்ததை அறிந்தவாறொழுகிப் பயனடையாதாருமே மடயர் என்று கொள்ளத்தக்கார், இன்னோரன்ன செயலுடை மடயர் மல்கியதனாலேயே இக்கட்டுரை எழுந்தது. இதுபற்றிக் கூறுவதால் எவரும் வருந்தமாட்டார்கள் என நம்புகிறேன். ஏன்? எவரையும் குறித்து வையவில்லை. கண்டிக்கத் தக்க இச்செயலையே கூறுகிறேன்.

இன்றியமையாது அறியவேண்டிய கடனை மக்கள் அறிந்தால் உலகில் மறம் ஏன் வளர்கிறது? மடமையினாலன்றோ நில்லா தவற்றை நிலையினவென்றுணர்ந்து கரும மாற்றுகின்றார்? பிறருக்குத் தீங்குசெய்து தாம் வாழ எண்ணுவது பெரு மடமையன்றோ? பிறருக்குத் துன்பம் செய்தால் தனக்கு நிலைத்த வாழ்வேது? "கெடுவான் கேடு நினைப்பான்" என்

பது மூதுரையன்றோ? இதனை உணரவிடாது தடுப்பது மடமையேயாகும். அநுபவத்தில் பலரைப் பார்க்கிறோம். மனத்துக்கண் மாசிருக்குமானால் அவருக்கு உள்ள அறிவையெல்லாம் மடமையென்ற பாவி விழுங்கி விடுகின்றான். பின்னை அவர் செய்வதில் எச்செயலும் அறிவுடைச்செயலாக விருப்பதில்லை. அது கொண்டன்றோ, தமிழறம் வகுத்த திருவள்ளுவனார் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுலநீரபிற" என்றருளினார். மனத்துக்கண் மாசிலனாக இருந்தாலன்றி அவன் செய்யும் எதுவும் நன்றாகாதென்பது கண் கூடாகக்கண்ட உண்மை. உள் மாசு கழுவாத வேடதாரி செய்யும் செயலெல்லாம் மடமை பொருந்தியனவாகவே முடியும்.

இப்பாழும் உலகம் மிகவும் கெட்டதாக விருக்கின்றது. மறஞ்செய்யும் ஒருவனை உலகம் கடிந்து ஒதுக்கும் அறிவு பெற்றிருக்குமானால் யாரும் அது செய்யமாட்டார். பல் இடங்களில் மறம்புரி மறவோர் மதிக்கப்படுவதையும் காண்கின்றோம். எவ்வாறு? பொய்யைச் சொல்லி ஒருவன் பொருளைச் சம்பாதித்துவிட்டால் அவன் புத்தியுடையவன் என்று புகலப்படுகிறான். அவன் அவ்வாறு பொருள் ஈட்டியதும் மடமை. பிறர் அவனைப் புகழ்வதும் மடமையே. தேடிய பொருள் நிலையிலாதது; கூறிய பொய் நிலைத்து நின்று இவனைத் தொடரும். இவ்வுண்மை அறியாதது மட

மையேயன்றோ? இவன் பிறர் புகழ வாழ வேண்டுமென்ற அவாவினாலேயே இவ்வாறு செய்கிறான். இப்புன்செயலை உலகம் கடியுமானால் இவன் இது செய்ய அஞ்சுவான். எவனும் பொய் கூறமாட்டான். உலகில் அறம் வளரும்; மறந்தேயும். நுணுகி ஆயுங்கால் கெடுவினை செய்யத் தூண்டுவது மடமையேயாகும்.

பெரும்பாலாகத் தன்னை எல்லோரும் மதிக்க வேண்டுமென்பதற்காகவே எல்லாத் தீமைகளையும் புரிகின்றார் பலர். இது மடமையே. தன்னை அறவோர் மதிக்க வேண்டுமானால் செய்ய வேண்டுவது அறமேயன்றி மறமன்று. எவரிடத்தும் அவர் விரும்பியவாறு அவர் மனத்திற்கிசையப் பேசுவோற்றான் அவர் தன்னை மதிப்பார் எண்றெண்ணி அங்ஙனமே செய்கின்றார். இது அறியாமை! அறியாமை!! உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கும். எல்லோர்க்கும் இசைய ஒருவன் எப்படி நடக்கமுடியும்? அன்றி எவர் எதைக் கூறினபோதினும் அவர் அதிகாரத்திற்கோ ஆக்கத்திற்கோ பிறவற்றிற்கோ அஞ்சி அவர் கூறியது எதுவாயினும் ஆம் போடுதல் எவ்வளவு பெரிய அறியாமை இந்நிலையுள்ளார் நிறைந்த நாடு எங்ஙனம் விடுதலை பெறப்போகிறது?

தனக்கென ஒரு கொள்கையில்லாதார் பெருமடையராவார். ஒன்றிலும் தனக்கு ஒரு

திடமான கொள்கையில்லாமல் சமயத்திற்குத் தக்கபடி உளறிக்கொட்டும் சிலர் இல்லாமல் இல்லை. கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று கடனாற்றும் பலர் இந்நாள் இன்மையினாலேயே எந்த இயக்கமும் வளர்ந்தோங்க வில்லை. இன்று ஒன்றைச் சரி என்று கூறி, நாளை இதனால் தனக்கு ஏதேனும் இடையூறு செய்யக்கூடிய ஒருவர் வந்து நெருக்கினால் "இல்லை; இல்லை; இது சரியல்ல; நீங்கள் சொல்வது நிரம்பச் சரி" என்பாரும் சில மக்கட்குப் பயந்து அவர் தீச்செயலை யெல்லாம் தலையிற் சுமந்து புகழ்ந்து புகழ்ந்து கூறுவாரும் மடமையுடையாரென்பதில் என்னே ஐயம்?

மடமை உலகத்தில் எல்லையின்றிப் பெருகி விட்டது. எல்லாம் வியாபாரமாகி விட்டது. தனக்கென ஒரு கொள்கையின்றி வருவாயையும் புகழையுமே நாடி எல்லாக் காரியமும் செய்யப்படுகிறது. கள்வர், கயவர், கொடியர், கொலைஞரெல்லாம் பொதுஜன ஊழியரென்று முன்வந்து மக்களை வஞ்சிக்கின்றார். தமது மடமையால் நன்றென எண்ணி மக்கட்குப் பல தீங்குகளை ஆற்றிவிடுகிறார். ஒன்றுமறியாப் பேதைகளெல்லாம் ஜனத் தலைவராக வர விரும்புகிறார். மடமையுள்ளவர் தங்கள் மடமையைத் தாங்களே வைத்துக்கொண்டு அமைகின்றாரில்லை. பின் வார்சுகளும் உண்டாக்கி வருகிறார். வளர்ந்து வந்து பிறப்பின் பேறடையவேண்டிய இளைஞர்களை யெல்லாம்

தடுத்துத் தங்கள் மடமையை அவர்கள்பாற் புகுத்திப் பலரைப் பொறாமையும் அறியாமை யும் நிரம்பியவர்களாக ஆக்கிவிடுகிறார். அவ ரும் சிறு மதியால் ஏமாந்து அவற்றைக் கைக் கொண்டு அழிவு தேடிக் கொள்கிறார்.

மடமையால் மூடப்பட்ட இளைஞர்களைக் காணும்பொழுது பெரிதும் வருத்தமாக விருக் கிறது. அந்தோ! மக்களாகப் பிறந்து பேற டைய வேண்டியவர்கள் இளம் வயதிலேயே பொறாமைகொண்ட மடமைப் பாபிகட்கு ஆட் பட்டுத் தங்கள் நலன் இழப்பதைக் கண்டு எவ் வாறு சகிப்பது? எவரும் சார்ந்ததன் வண்ண மாதல் இயல்பு. அதினும் எதனையும் பற்றக் கூடிய இளமைப் பருவத்தில் அவ்வாறாவது முழுதும் நிச்சயம். அதன் பொருட்டே "தீயா ரைக் காண்பதும் தீது" என்று செப்பப் பெற்றது.

மடமையால் என்னென்ன வெல்லாம் செய்கின்றார். எண்ணுந்தோறும் எண்ணுந் தோறும் வியப்பாகவே யிருக்கின்றது. ஒரு வர் பிறனில் விழைகின்றார்; அத்தவறுதலைக் கண்டித்தால் சீறி விழுகின்றார். ஒருவர் பொய்யையெல்லாம் திரட்டி ஆக்கப்பட்ட ஒரு உருவாகப் பொலிந்து, பொய்யே புகன்று பல ரறியப் பொய்யே எழுதிப் பொய்யே செய் கின்றார். அவர் செயல் பொய் என்று கூறி னல் புலம்பித் தவிக்கின்றார். சில பொய்யர் களைக் கொண்டு தம் பொய்யை மெய்யென்று புகன்று திரியச் செய்கின்றார். கடவுள் ஒரு வர் இருக்கின்றார்; அவருக்கு ஏற்க நடக்க வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இருப்ப தில்லை. இவ்வுலகத்திலும் எத்தனைநாள் வஞ் சித்து வாழமுடியும்? கடவுளிடத்துத் தண்டனை

பெறுவது நிச்சயம். இவ்வுண்மைகளை அறியா மையே மடமை. உண்மை ஓராது உலகத்தை ஏமாற்றி விட்டோமென் றெண்ணிக் களிப் பெய்துதல் பெருமடமை. இம் மடமை கொண்ட மக்கள் உய்வதரிது.

சதியாலோசனை செய்து உலகை வஞ்சிக் கும் மடமையுடையார் போக, உண்மையி லேயே ஒன்றுமறியாது மடமையொடு வாழ் வாரும் பலர் உண்டு. அவர் மடமை போக்க வேண்டுவது அறிஞர் கடன். வேண்டுமென்றே கெடுவினை புரியும் மடமையைக் கடவுள்தான் போக்குதல் வேண்டும்.

மடமையுடைமையினாலேயே தாம் செய் யும் மடமையின்பாற்பட்ட காரியங்களெல்லாம் அவருக்கு மடமையாகத் தோன்றவில்லை. மடமையை யாரும் எடுத்துக் கூறினால் திருந்த முந்துகின்றாரில்லை. மேலும் மேலும் அவர் செய்யுங் காரியங்களெல்லாம் பெருமடமை யுடையனவாகவேயிருக்கின்றன. மடமையாற் தாம் கெடுவதை உணரும் அறிவை இழந்து விடுகிறார். அது அவர் ஊழ்வினை போலும்! தன் சரித நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்க்கும் அறிவு ஒன்று பெற்றாலும் இவ்வகம்பாவ மடமை யகன்றுவிடுமே. அவர் என் செய்வார்? ஊழ் விடுகின்றதில்லை. அகம்பாவமடமை அறிவை அழித்துவிடுகிறது. தாமாக அறியாத போதினும் எத்துணைமுறை எவர் இடித்துக் கூறினாலும் செவியில் ஏறுவதில்லை. அவர் மனத்தை மாற்றி மடமை போக்க எல்லாம் வல்ல ஈசனலன்றி வேறு யாரால் முடியும்?

# மலைநாடு.

---

மலைநாடு என்றால் மலை சூழ்ந்த நாடு என்பது பொருள். மலைசூழ்ந்த எல்லா நாட்டிற்கும் இப்பெயர் பொருந்தும். எனினும் சிறப்பாக ஒரு தனி நாட்டைக் குறித்தே ஈண்டு இக் கட்டுரை எழுந்தது. ஈண்டு மலைநாடு என எடுத்துக் கொள்ளப்பட்டது, தமிழ் நாட்டின் எல்லைப் புறத்தேயுள்ள மலைநாட்டை. அது மலையாள நாடு என வழுத்தப்படுகிறது. அந்நாட்டு மக்கள் பயில்மொழி மலையாளம் என்ற பெயரிய மொழி. அம்மொழி வழங்குமிடம் மலையாள நாடு. அந்நாடு மலைசூழ் நாடாக இருத்தல் கொண்டே ஆண்டு நிலவும் மொழி மலையாள மொழியென்றும் ஆண்டு வாழ் மக்கள் மலையாளிகள் என்றும் வழுத்தப் பெற்றிருத்தல் வேண்டும்.

அந்நாட்டின் பெயர் காரணங் கற்பிக்க முடியாத பல நாடுகளின் பெயர்களை ஒத்திருக்கவில்லை. உலகம் உள்ளளவும் மிக எளிதில் எல்லோரும் அறிந்துகொள்ளத் தக்க நிலையில் தக்க காரணத்தோடு அந்நாட்டின் பெயர் அமைந்துளது. மலை சூழ்ந்த நாடு மலை நாடு. மலை நாட்டின் பெயரைக் காட்ட மலைமீதே அந்நாட்டு ஊர்கள் முழுமையும் நிலவுகின்றன. மலைமீது வாழ்கின்றவர் மலையாளிகள். அவர் பேசும் மொழி மலையாள மொழி. மலையாளி

கள் வாழுமிடம் மலையாளம் என்று பின்னர் மருவி வந்திருத்தல் வேண்டும்.

அம் மலைநாடு அரசியலில் இந்நாள் மூன்று பகுப்பாகப் பிரிந்துநிற்கிறது. சிலபகுதி நேரே ஆங்கிலத்தார் அரசியலைத் தாங்கியிருக்கிறது. கொச்சி சமஸ்தானம் என ஒரு பகுதி உள்ளது. திருவாங்கூர் சமஸ்தானம் என இன்னொரு சுதேச அரசியலை மற்றொரு பகுதி கொண்டு நிற்கின்றது. இம்மூன்றனுள் பெரும் பகுதி திருவாங்கூர் சமஸ்தானத்தையே சார்ந்துளது. எனவே, மலைநாடு—அல்லது மலையாளம் என்று கூறுதல் சிறப்பாகத் திருவாங்கூர் சமஸ்தானத்தையே குறிக்கக்காண்கின்றோம். திருவாங்கூர் சமஸ்தான ஆளுகைக்குள் மலைநாட்டின் பாங்கருள்ள கன்னியாகுமரி முதலிய சில தமிழ்நாட்டு ஊர்களும் சேர்ந்திருக்கின்றன. கன்னியாகுமரியிலிருந்தே மலைநாட்டு நாகரிகம் தொடங்கிவிடுகின்றது.

திருவாங்கூர் என்பது ஒரு ஊரின் பெயரல்ல. அது அந்த சமஸ்தானத்தின் பொதுப் பெயர். திருவாங்கூர் என்ற பெயரோடு அந்த சமஸ்தானத்தில் ஓர் ஊர் இல்லை. சில சமஸ்தானங்கள் அரசிருக்கைத் தலைநகர்ப் பெயரைச் சமஸ்தானப் பெயராகக்கொண்டு விளங்கும். புதுக்கோட்டை சமஸ்தானம், மைசூர் சமஸ்தானம் என்பன தலைநகரின் பெயர் கொண்டு விளங்குவன. திருவாங்கூர் சமஸ்தானப் பெயர் அவ்வாறு அமையவில்லை. அச்

சமஸ்தானம் அவ்வாறு பெயர்பெற்ற காரணம் என்னவோ? அது நிற்க,

திருவாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகர் திருவனந்தபுரம் என்பது. அந்த சமஸ்தானத்துள் பெரிய ஊர் திருவனந்தபுரமே, அத் திருவனந்தபுரமும் அதனைச் சேர்ந்த அந்த சமஸ்தானத்திலுள்ள எல்லா ஊர்களும் மலைமேலேயே இருக்கின்றனவென்று வழுத்தலாம். திருவனந்தபுரம் ஒரு ஊருக்குள்ளேயே மலையின் இயல்புக்கேற்ப உயரமும் ஆழமும் ஆங்காங்கு மாறி மாறியிருக்கின்றன. அந்த சமஸ்தானம் முழுமையும்—அந்த நாடு முழுதும் மலைகளின் மீது வளைந்து வளைந்து தெருக்கள் வகுக்கப்பட்டு அவைகளின் இடையிடையே ஊர்கள் காணப்பட்டதாகவே இருக்கின்றன

மக்கள் நல்ல இன்ப வாழ்க்கை வாழ்தற்கு மிகுதியும் ஏற்றது அம்மலைநாடு. அந்நாடு முழுமையும் யாண்டும் வளஞ்செறி மரங்கள் மலிந்து கிடக்கின்றன. யாண்டு நோக்கினும் மலையும் மரமும் செடியும் கொடியும் ஆகிய நற்பொருள்களே. கண்களை எப்பக்கம் புகவிட்ட போதினும் ஒரே பச்சை நிறமே பெருகிக் கண்களை நிறைத்து நிற்கும். மரமும் பச்சை, செடியும் பச்சை, கொடியும் பச்சை, அவற்றை இடையீடின்றி நிரலே பரப்பிக்கொண்டு இலங்கும் மலையும் ஒரே பச்சை. அம்மலை ஏறியும் இறங்கியும் இருக்கும் தன்மை மிக அழகிற்று. மலைகளின் குடுமிகள் இடையறாது தவழ்ந்து

விளையாடுகின்ற கருமேகங்களைக் கொண்டிலங்கும் காட்சி கண்களைவிட்டகலாது. அம்மலைகளைப் பிளந்து மக்களும் ஊர்திகளும் வழிக்கொள்தற்கு, வெண்கற்பொடிகளால் செப்பனிடப்பட்ட பாட்டையுளது. மலை உச்சிகளினின்றும் இடங்கள்தோறும் நீர் வீழ்ச்சிகள் பல வீழ்கின்றன. பச்சை நிறம் வாய்ந்த மலைகளினின்றும் வெண்முத்துச் சரங்களைக் கோத்துத் தோங்கவிடப் பட்டனபோல், அருவிகள் தூங்கும் அழகு பெரும் பேரழகாக இருக்கின்றது. மழை பொழிவதிலும் குறைவில்லை எனவே மலைநாடு வளமனைத்தும் உடைத்தா யிருக்கின்றது என்று வழுத்துதல் சிறிதும் வழுவின்று.

மலைநாட்டின் தலைநகராகிய திருவனந்தபுரத்தில் இந்நாள் கல்வி பெரிதும் கவனிக்கப்படுகிறது. திருவனந்தபுரத்தில் கல்விச்சாலைகள் மிக அதிகம். பெண்கள் கற்பதற்கும் எராளமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கு மாணுக்கர் செல்ல வேண்டிய காலத்தில் தெருவில் பார்த்தால் ஊர் முழுமையும் எந்த இடத்தில் நோக்கிய போதினும், ஆண்களும் பெண்களும் புத்தகமேந்திய கையினராய் நிரலே சென்று கொண்டிருக்கக் காணலாம். இவர்களுள் பெண்மக்கள் தொகை ஆண்மக்கள் எண்ணினின்றும் சிறிதும் குறைவாக இராது. சிறிய பெண்கள் முதல் பெரிய பெண்கள் வரைப் பெண்கள் பெரிதும் கல்வியில் முன்னேறி வருகின்றனர். இந்நாட்டில் கண்ட காட்சிகளுளெல்லாம் தலையாய இன்பந்

தந்த காட்சி இதுவே. இது ஒன்றுகொண்டே எதிர்காலத்தில் இம்மலைநாடு பெரிதும் நாகரிகம் அடைந்துவிடும் என்று நவிலலாம்.

மலைநாட்டுப் பெண்மக்கள் உடை விஷயத்தில் இப்பொழுது திருத்தம் எய்தி வருகிறார் அது கல்வியின் பயனே. ஆண் மக்களைப் போல் பெண்மக்களும் ஒரு வேட்டி கட்டி ஒரு துண்டு மேற்போட்டுக் கொள்தல் என்பது பெருத்த அநாகரிகமன்றோ? பெண்கள் உடற்கூற்றுக்கு அவ் உடை சிறிதும் ஏற்றதாககாது என்பதைக் கல்வி கற்பதன் பயனாலும் பிற நாட்டவர் கூட்டுறவாலும் மலைநாட்டுச் சகோதரிகள் அறிந்து திருத்தம் அடைந்துகொண்டு வருவது போற்றத்தக்கது. நாளடைவில் அவர்கள் உடை விஷயத்தில் நன்னிலையெய்தி விடுவார்கள் என நம்பலாம். இரு பாலாரும் கல்வி கற்றால் எல்லாம் நன்கு திருந்திவிடும். மக்கள் உண்மையில் மக்களாதற்குப் பெருந்துணை புரிவது கல்வி ஒன்றேயன்றோ? அதில் திருவாங்கூர் அரசாங்கம் பாராட்டுதற்குரியதே.

மலைநாட்டார் உலக இயல்பிற்கேற்ப முற்காலத்திற்கு இப்பொழுது வரவர நாகரிகம் பெற்றே வந்திருக்கின்றனர். திருவனந்தபுரம் பொருட்காட்சிச்சாலையில் மலைநாட்டின் பண்டைமக்கள் நிலை அறிதற்குற்ற கருவிகள் பல தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் நூல் ஆடையை அறியாது மரவுரி உடுத்தும் வைக்கோற்களைச் சுற்றியும் மலையிற்றிரிந்த

நிலைகளெல்லாம் அக் காட்சிச்சாலையில் இருக்கின்றன. அந்நிலையை நோக்க, இப்பொழுதிருக்கின்ற மலையாளம் எவ்வளவோ முன்னேறியது என்பது விளங்கும். மரவுரி தரித்த மக்கள் இன்றைக்கும் மலைக் காட்டில் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. அம்மலை வேட்டுவர்க்குக் காணிக்காரர் என்ற பெயர் அங்கு சொல்லப்படுகிறது. காணிக்காரர் என்றால் உரிமையாளர் என்பது பொருள். அம்மலை அவர்கட்கு உரிமை யுடையது என்ற பொருளில் அச்சொல் அமைந்துளது.

மலைநாட்டிலுள்ள குறைகளுள் மிகப்பெருங் குறை ஒன்று. அதனைச் சொல்லாது விடுவது சரியன்று. அம்மலைநாடு முழுமையும் ஒரு சில போத்தி என்று கூறப்படுகின்றவர்கட்கு அடிமை யென்று கூறுதல் தவறாகாது. அரசனே அவர்கட்கு அடிமை என்றால் மற்றவர்களைப் பற்றிக் கூறுவானேன்? அரசினர் இவர்கட்குத் தந்திருக்கும் ஆதிக்கத்திற்கு ஒரு எல்லை கிடையாது. மலையாள ராஜ்யம் போத்திகள் ராஜ்யமாகவே விளங்குகின்றது. மலைநாட்டிலுள்ள கோவில்கள் இவர்கள் கையிலேயே அகப்பட்டு விழிக்கின்றன. அம்மம்மா! என்ன அக்கிரமம் இவர்கள் செய்வது! மலையாள அரசியலில் பேரறியாமை நிரம்பிய பெருங் குறை இது. இந்தப் போத்திகள் என்பார் தங்களையும் தங்கள் இனத்தவர்கள் என்று எண்ணிக் கொள்கின்ற பார்ப்பாரையும் தவிர, மற்றவர்களை யெல்லாம் மனிதராகவே மதிப்பதில்லை

என்பதை அவர்கள் கோயில்களில் செய்யும் ஒவ்வொரு செயலும் காட்டுகின்றது. அவ்வள வுக்கு இடங்கொடுத்திருக்கிறது திருவாங்கூர் அரசாங்கம். பொதுவாக இந்தியா எங்கும் ஆலயங்கள் ஒருவகையாகவே நடக்கின்றன வென்றாலும், திருவாங்கூர் சமஸ்தான ஆலயங் களில் நடக்கும் அறியாமை வேறு யாண்டு மில்லை.

பிறப்பினல் பார்ப்பனரல்லாதார் என்று கூறப்படுகின்றவர் முதலில் நுழைவாயிலி லேயே சில சமயங்களில் கோவில் ராஜகோபுர வழியே போகக்கூடாதென்று தடுக்கப்படு கிறார். அவர் கோவிலுக்குள் உள்ள ஒற்றைக் கல் மண்டபத்தைத் தொடக்கூடாது; கோவி லுக்குள் விழுந்து கும்பிடலாகாது; அங்குள்ள மணியை அடித்தலாகாது; பூஜை ஆகும்போது கோவிலுக்குள் நிற்றலாகாது. இன்னும் ஏதே தோவெல்லாம் சொல்லிக் கோவிலுக்குள் நுழையும்பொழுதே பாடங் கற்பிக்கப்படு கிறது. விபூதியை பூசாரியாகிய போத்தி கையில் கொடுக்கமாட்டார். ஓங்கி வீசுவார். இப்படி அநாகரிகங்கள் பல. ஊட்டுப்பொறை என்று சொல்லி கோவிலுக்குள் ஒரு வேளைக்கு ஆயிரக்கணக்கான பார்ப்பார்க்கு வேளை தவறு மல் சோறு போடப்படுகிறது. அவர் கோவிலுக் குள் சாப்பிட்டுவிட்டு எங்கும் அசுத்தப் படுத்து கின்றனர். அக்கோவிலிலுள்ளோர்கட்கு எது சுத்தம் எது அசுத்தம் என்பது சிறிதும் விளங்க

வில்லையென்பது அவர்கள் செயலால் காணப்படுகின்றது. பார்ப்பனரல்லாதார் விழுந்து கும்பிடுதல் அசுத்தமென்று கருதுகிறார்; கோவில் நிறையப் புகையிலை எச்சலை உமிழ்தலும் சாப்பிட்ட எச்சில்களைப் போடுவதும் அசுத்தமென்பது தெரியவில்லை. சட்டை போட்டுக்கொண்டு போதல் சரியன்று எனத் தடுக்கிறார்; வாயில் எச்சல் வழியப் புகையிலையை அடக்கிக் கொண்டு செல்வோர் அனுமதிக்கப்படுகிறார். கோயில் திருக்குளத்தில் செய்யப்படும் ஆபாசங்கட்கு அளவில்லை. அங்கு விழுந்து கும்பிடுவது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. காலைச் சுவாமிபக்கம் நீட்டிக்கொண்டு குந்திக் கும்பிடுகின்றனர். சுருங்கச் சொல்லுமிடத்துக் கோவில் ஆபாசம் நிறைந்த ஒரு இடமாக விளங்குகின்றது. அங்கு நடைபெறும் செயல்கட்கும். அறிவுக்கும் அணுவும் தொடர்பு இல்லை. நாகரிக உலகப்போக்கை அறியும் அரசினர் இத்துணை அநாகரிகத்துக்கு இடந்தருதல் விரும்பத் தக்கதன்று. வளமலி மலைநாட்டு மக்கள் இன்ன குறைகளைப் போக்குங் கடமையில் இறங்க வேண்டுவது அவசியம்.